



நேயர்களுக்கு ஒரு சவால்!
கல்கி
கல்கி
KALKI 28-3-82 ரூ.1 20



தனித்தன்மை வாய்ந்த
இவரது தணியாத விருப்பம்
'ப்ளெயின்' ஷர்ட்டிங் மட்டும் அணிவதே
அதாவது மஃபத்லால் வழங்கும்
பாலியெஸ்டர் மற்றும் பாலியெஸ்டர்
ப்ளெண்டுகளின் ஷர்ட்டிங்.
அவருக்கென ஒரு தனி பாணி, தனி ரசனை.
பறைசாற்றமாட்டார், என்றும் பவ்வியமாக இருப்பார்.
தனக்கே உரிய தனித் தோற்றத்தை வலியுறுத்துவார்.
மஃபத்லால்
ஷர்ட்டிங்
MF-124-TAM

நெல்லைக்கு வந்த டீவி



சிலோன் டி.வி. நிகழ்ச்சிகள் நெல்லையிலும்.மாவட்டத்தின் பிற பகுதிகளிலும் மிகத் தெளிவாகத் தெரிகிறது. இலங்கை பரீட்சார்த்த ஒளிபரப்பைத் துவக்கியதுமே நெல்லையில் டி. வி. மோகம் தொடங்கி விட்டது. பரீட்சார்த்த ஒளிபரப்பே மிகத் தெளிவாகத் தெரிந்ததும் நெல்லை மக்களுக்கு உற்சாகம் தாங்கவில்லை. கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்கும் என்பதற்கு ஏற்ப எடுத்த எடுப்பிலேயே கலர் டி. வி!

தினமும் இரண்டு மூன்று டி. வி. பெட்டிகள் ரயிலில் வந்து இறங்கின. டி.வி. விற்பனை மிக வேகமாகத் துவங்கியது. 'அன்டெனா'க்களைத் தெருவில் போகிறவர்கள் அண்ணாந்து பார்த்தார்கள். எந்தெந்த வீடுகளில் டி.வி வைத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்வதில் ஒரு த்ரில்! ஒரு தெருவின் பெருமை அந்தத் தெருவில் உள்ள டி. வி.க்களின் எண்ணிக்கையைப் பொறுத்தது என்ற நிலை உருவாயிற்று.

சிறுவர்களை மிகவும் கவர்வது தினமும் ஒளிபரப்பாகும் 'கார்ட்டூன்' நிகழ்ச்சி. பெரியவர்களும் ரசிக்கிறார்கள். தமிழ்ச் செய்தி அறிக்கையும் ஆங்கிலக் குட்டிப் படங்களும் சுவையாக இருக்கின்றன. ஒளிபரப்புத் துவங்கி ஒரு மாதத்துக்குள் மூன்று தமிழ்த் திரைப்படங்கள். புதன் கிழமைகளில். நேரம் இரவு 9.45 முதல் 12.15 அல்லது 12.30 வரை. அகாலம்தான்.

டி. வி. விற்பனையாளர் சந்தான சுப்பிரமணியம் ''தருவித்த டி.வி. எல்லாம் விற்றுவிட்டன. இன்னும் 10 டி.வி.க்களுக்கு ஆர்டர் இருக்கிறது'' என்கிறார்.

ஒரு கடையில்:

''என்ன டி.வி. இது?''

கடைக்காரர் பெயரைச் சொன்னார்.

''சிங்கிள் சானலா? மல்டி சானலா?''

''மல்டி சானல்தான்.''

''பிளாக் அண்ட் வொயிட்டா? கலரா?''

''பிளாக் அண்ட் வொயிட்.''

''பூஸ்டர் தேவையா?''

''பூஸ்டர் வைத்தால் இன்னும் தெளிவாகத் தெரியும்.''

''ஸ்டெபிலைசர்?''

''அவசியம் தேவை.''

''என்ன விலை?''

''நாலாயிரத்து ஐநூறு.''

''சரிதான்.''

''ஒரு டி. வி. உங்க வீட்டிற்கு அனுப்பிடவா?''

''இப்ப வேண்டாம். கலர் டி. வி. குறைந்த விலைக்குக் கிடைக்கப் போகிறதாமே அப்போது வாங்கிக்கறேன்.''



பாரத்வாஜன்


சில டி.வி.க்களில் படங்கள் தெளிவாகத் தெரிவதில்லை. அதற்குக் கடைக்காரர் கூறும் காரணம் ''இன்றைக்கு சிலோன் டிரான்ஸ்மிஷன் சரியில்லீங்க!'' — வசதியான காரணம்தானே!

'ரூப' என்றால் 'படம்'. 'வாஹினி' என்றால் 'பரப்புதல்' (சுமந்து செல்லுதல்) எனவேதான் படங்களின் ஒளிபரப்புக்கு 'ரூப வாஹினி' என்று பெயரிடப்பட்டுள்ளது.

'ரூபவாஹினி ஒளிபரப்பு நிலையம் இரண்டாண்டுகளில் ஜப்பான் உதவியுடன் நிறுவப்பட்டது. அமெரிக்கா உதவியும் உண்டு.

ஒரு நகரத்திலிருந்து மற்றொரு நகரத்துக்குச் செய்திகளை எடுத்துச் செல்லப் பறவைகள் பயன்பட்டன. முக்கியமாகப் பயன்பட்ட பறவை 'நாகணவாய்'! இந்தப் பறவையைத்தான் ரூபவாஹினி தன் சின்னமாகக் கொண்டுள்ளது.

நிலத்தை விற்று டி.வி. வாங்கிய விவசாயியைப்பற்றித் தினமலர் சொல்கிறது!







ஏற்கனவே உள்ள வீடுகளைத் தவிர 24 புது வீடுகள் அமைச்சர்களுக்குக் கட்டித் தர தமிழக அரசு தீர்மானம்!–

சோ



எதிர்க்கட்சியினர் சினிமா எடுக்கிறார்கள்

நாடாளுமன்றத்தில் சமீபத்திய பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்ட தினத்திலிருந்து நான் ஏதாவது புதிய தொழிலை மேற்கொள்ளலாம் என்று யோசித்துவந்தேன். பத்திரிகைத் தொழிலை இனி நம்பவே முடியாது. பத்திரிகை அரக்கனை ஒழித்துக்கட்ட அரசாங்கம் தீவிர முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. கொள்ளைக்காரன் சபிராமுக்கு நேர்ந்த கதி பத்திரிகைத் துறைக்கும் விரைவிலேயே ஏற்படலாம்.

வேறு எந்தத் தொழிலில் ஈடுபடுவது என்று யோசித்தபோது, 'சினிமா எடுத்தால் என்ன?' என்று தோன்றியது. இந்தச் சமயத்தில், 'நம்பகமான வட்டாரங்கள்' என்று பத்திரிகைகளில் அடிக்கடி அடிபடுகிறதே, அங்கிருந்து எனக்கு ஒரு தகவல் கிடைத்தது. 'எதிர்க் கட்சித் தலைவர்கள் ''ஜனநாயகத்துக்கு ஆபத்து!'' என்ற தலைப்பில் ஒரு படமெடுப்பதில் ஆர்வமாய் இருக்கிறார்கள்' என்பதுதான் அந்தத் தகவல்.

'ஆகா! இது தேசத்துக்கும் மக்களுக்கும் ஆற்றும் அரும்பெரும் சேவையாக இருக்குமே' என்று எண்ணினேன். 'பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற கருத்துடன் பார்த்தாலும் மக்களுக்குச் சேவை செய்வதைவிட லாபகரமான தொழில் வேறு என்ன இருக்க முடியும்?'

சரண் சிங்கைத் தனிமையில் சந்தித்து, ''நீங்கள் ஜனநாயகத்துக்கு ஆபத்து என்ற தலைப்பில் சினிமா எடுக்க வேண்டும் என விரும்புவதாய் அறிகிறேன். அதை நான் உருவாக்கித் தரத் தயார்'' என்றேன்.

''பேஷ்!'' என்றார் சரண்சிங். ''நான்தான் படத்தை டைரக்ட் செய்ய வேண்டும் என்று நீ கேட்டுக் கொண்டதில் எனக்கு ரொம்பத் திருப்தி!''

நான் மென்று விழுங்கினேன். ''ஸார்! நீங்க டைரக்ட் செய்தால் பிரமாதமாகத்தான் இருக்கும்: ஆனால் அந்தச் சிரமத்தை வயதான உங்கள் சரீரம் தாங்குமா? சந்திரசேகர் மாதிரி இளைஞர் ஒருவர்....''

சரண்சிங் குறுக்கிட்டார்: ''நீ போகலாம்! நீ படம் தயாரிப்பதை நான் நிறுத்திவிட்டேன்! உன் திரைப்பட நிறுவனத்தையும் கலைத்து விட்டேன்!''

''ஸார்! நான் இன்னும் சினிமாக் கம்பெனியை ஆரம்பிக்கவே இல்லையே!''

''அப்படியானால் உன்னையே கலைத்து விட்டேன்!'' என்றார் சரண் சிங். ''நீ எந்தச் சினிமாவும் தயாரிக்க லாயக்கில்லாதவன். ஜனநாயகத்தைப் பற்றிய ஒரு சினிமாவை என்னைத் தவிர வேறு சிலருக்கும் டைரக்ட் செய்யும் தகுதி உண்டு என்ற அருவருப்பான யோசனையை யார் உனக்குச் சொல்லிக் கொடுத்தது? .... இதோ பார் .... உன் படத்தை நான் டைரக்ட் செய்யத் தயாராயிருக்கிறேன். எல்லாப் புகழும் என்னையே சேரவேண்டுமென்பதில்லை. ஒருகூட்டு முயற்சியாகவே இருக்கலாம்.''

''சௌத்ரி சாகேப்! ரொம்ப நன்றி! இது ஒரு கூட்டு முயற்சியாக இருக்க வேண்டும் என்றுதான் நானும் ஆசைப்படுகிறேன். இப்பவே சந்திரசேகரிடம் போய்த் திரைப் படக் கதை வசனம் எழுதச் சொல்கிறேன்... வாஜ்பாயி காமிராமேனாக இருக்கட்டும்... அப்புறம் ஷரத் பவார்.....''

''போய்யா வெளியே!'' என்று கத்தினார் சரண்சிங். ''என்னுடைய டைரக்ஷன் பொறுப்பிலே குறுக்கிட அந்த உபயோக மற்ற பசங்களை அழைப்பதாயிருந்தால் நான் எப்படித் திறம்பட இயங்க முடியும்? இதோ பார்! நான் படத்தை டைரக்ட் பண்ணறேன்: வசனத்தை நான் எழுதறேன்: காமிரா என் பொறுப்பு: இசையமைப்பைப் பொறுத்தமட்டில் என்னிடம் விட்டுவிடு; பட விநியோகத்தை நான் கவனிக்கக்கிறேன். மத்தவங்க என்னோட ஒத்துழைக்கட்டும்!''

நான் தைரியத்தைத் திரட்டிக் கொண்டு ''ஸார்! செய்ய வேண்டியதை யெல்லாம் நீங்களே செய்துடறதா யிருந்தால் மத்தவங்க ஒத்துழைப்பு எதற்கு?'' என்றேன்.

''அப்படிக் கேளு சொல்றேன்'' என்றார் சரண்சிங். ''அவங்க படத்தைப் பார்த்துக் கைதட்ட ஆளுங்களைத் தயார் பண்ணி அழைச்சுக்கிட்டு வரட்டும். ரசிகர்கள் இல்லேன்னா ஒரு படம் எப்படி வெற்றி அடைய முடியும்?''

''அடாடா! இவ்வளவு முக்கியமான காரியத்தை மற்றவங்களை நம்பி விடறீங்களே, எவ்வளவு பெருந்தன்மை!'' என்று கூறிவிட்டு மற்றவர்களைச் சந்திக்க விரைந்தேன்.

சந்திரசேகரைச் சந்தித்து, சரண்சிங் யோசனையை நான் வெளியிட்டபோது, ''நான் இதைப் பெரிசா நினைக்கலே, ஆனா இங்கே இருக்கிறவங்களெல்லாம் நான்தான் படத்தை டைரக்ட் செய்யணும்னு விரும்பறாங்க, வேணும்னா சரண்சிங் ரசிகர்களைத் திரட்டி அழைச்சுட்டு வரட்டுமே'' என்றார்.

''ஸார்! சரண்சிங் கதை வசனம் எழுதி, டைரக்ட் பண்ணி, காமிராவைக் கையாண்டு, இசையும் அமைக்கலேன்னா, இனிமேல்தான் உருவாகப் போகிற என் சினிமாக் கம்பெனியை இப்பவே கலைச்சுடுவாரே'' என்றேன்.

சந்திரசேகர் என் பரிதாப நிலையைக் கண்டு கருணையுடன், ''அப்படின்னா ஒண்ணு செய்

அவர் சொல்றபடியே வாஜ்பாயி, பவார் ஆகியோர் ஒத்துழைப்பையும் பெற்றுவிடு. நானும் ஒத்துழைக்கத் தயாரா யிருக்கிறேன். அப்புறம் நாங்க எல்லாருமாச் சேர்ந்து உன்னோடு ஒத்துழைத்து சரண்சிங்கை வெளியேற்றிவிடறோம்'' என்றார்.

இந்த ராஜதந்திரத்தை எண்ணி வியந்தபடி புதுத் தெம்புடன் வாஜ்பாயி வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தேன். வாசலில் சுப்பிரமணிய சுவாமி நின்று ஏகமாய்க் கூச்சல் போட்டுக் கொண்டிருந்தார். என்னைப் பார்த்ததும், ''ஆ! வாஜ்பாயியை உன் சினிமாத் தயாரிப்பில் உதவுமாறு கேட்டுக் கொள்ள வந்திருக்கே. அவர் உன் காமிராவை விழுங்கி கச்சா பிலிமையும் குடிச்சுடுவார்!'' என்று எச்சரித்தார்.

''அது சரி, நான் எதற்கு வந்திருக்கிறேன் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''எனக்குத் தெரியாதா! நான் ஒருத்தன் தானே இந்தத் தேசத்திலேயே வாஜ்பாயியைக் கண்ணிலே விளக்கெண்ணெய் ஊத்திக்கிட்டுக் கவனிச்சுட்டு வரேன்!''

''அவர் காமிராக்களை விழுங்கிக் கச்சா பிலிமைக் குடிச்சுடுவார்னு உங்களுக்கு எப்பிடித் தெரியும்?''

''ஏன் தெரியாது? வேறே பல தயாரிப்பாளர்களிடம் அவர் இப்படி நடந்துக்கிட்டபோது நான் பின்னோடுதானே இருந்தேன்!''

''அப்ப அவரை நீங்க ஏன் தடுக்கலே?''

''தடுத்திருந்தால் இப்ப உன்னை நான் எப்படி எச்சரித்திருக்க முடியும்?''

இந்த அற்புதமான வாதத்துக்கு என்ன பதில் சொல்வதென்று எனக்குத் தெரியவில்லை. பிரமிப்பு நீங்கி அடுத்ததாக என்ன கேள்வியைப் போடலாம் என்று நான் தடுமாறுகையில் சுப்பிரமணிய சுவாமி ஒரு தார் டின்னை என் கண் முன்னால் ஆட்டிக் காண்பித்தார். ''இதை எதற்குக் கொண்டு வந்திருக்கேன் தெரியுமா? வாஜ்பாயி தலையில் கவிழ்ப்பதற்குத்தான்'' என்றார்.

''எப்படிக் கவிழ்ப்பீர்கள்?'' என்று கள்ளம் கபடமின்றி நான் கேட்க,

''இப்படித்தான்'' என்று கூறியபடியே, சு.சுவாமி தார் டின்னைத் தம் தலையிலேயே கவிழ்த்துக் கொண்டார்.

'சகுனம் சரியில்லை' என்று நினைத்துக்கொண்டவனாக வாஜ்பாயியைச் சந்திக்காமலேயே திரும்பி விட்டேன்.

ஷரத்பவாரைச் சந்தித்து சரண்சிங்கும் சந்திரசேகரும் அவருடைய ஒத்துழைப்பைப் பெறவேண்டும் என்று என்னிடம் கூறியிருப்பதை வெளியிட்டேன்.

''நான் ஒத்துழைக்க ரெடி. ஆனால் ஒரு நிபந்தனை. நான் வாஜ்பாயிக்கு ஆட்சேபனை தெரிவிக்கிறேன்!'' என்றார்.

''அவரை நான் சந்திக்கவே யில்லையே?'' என்றேன். ''அவருக்குப் படப் பிடிப்பில் அநேகமாக எந்தப் பங்கும் இருக்காது.''

''படப் பிடிப்பில் அவர் சம்பந்தப்படுகிறாரோ இல்லையோ, அவருக்கு நான் ஆட்சேபனை தெரிவிக்கிறேன்'' என்றார் பவார். ''நான்எல்லோருடனும்ஒத்துழைக்கத்தயார். ஆனால் யாரும் யாருடனும் சேர்ந்து வேலை செய்ய அவசியம் இல்லை என்று உத்தரவாதம் தரவேண்டும்!''

'எப்படியோ, ஒத்துழைப்பை அடியோடு ஒதுக்கிவிடவில்லையே இவர்!' என்ற அளவுக்குச் சந்தோஷப் பட்டுக் கொண்டே மொரார்ஜியிடம் போனேன், அவர் ஆசிகளைப் பெற.

விவரம் அறிந்ததும் அவர், '''ஜனநாயகத்துக்கு ஆபத்து' என்ற தலைப்பில் சினிமாவா? அது சரி, ஜனநாயகம் பற்றி உனக்கென்ன தெரியும்?'' என்று கேட்டார்.

இதற்குப் பதில் சொல்வது கஷ்டமாகத்தான் இருந்தது. ''ஸார்! ஜனநாயகம் என்பது.... மக்களின் ஆட்சி என்று சொல்லலாமா ஸார்?''

''மக்களை யார் ஆள்கிறார்கள்?'' என்று மொரார்ஜி கேட்டார்.

''அரசாங்கம்..... பிரதமர்.''

''அதுதான் ஜனநாயகமா?''

''அப்படிச் சொல்வதற்கில்லை.''

''மக்கள் பிரதமரை ஆளவேண்டும்; அதுதான் ஜனநாயகம்!'' என்றார்.

''அது லட்சிய ஜனநாயகமாகத்தான்இருக்கும். சரி; இந்த விஷயத்தில் நாம் ஒத்துப் போய்விட்டதால் இனி நாம் தயாரிக்கப் போகும் படம் பற்றிப் பேசலாமா?''

'' அதைப் பற்றி எதற்காகப் பேசவேண்டும்?''

இதற்கு என்னிடம் பதில் இல்லை. நல்லவேளை அவரே தொடர்ந்தார்: ''நாம் ஒரு படம் தயாரிக்கும்போது நாம் அதைப் பற்றிப் பேசக் கூடாது. அது நம்மைப் பற்றிப் பேசவேண்டும். அதில்தான் வெற்றி அடங்கி இருக்கிறது!''

''ஆமாம் ஸார்! நான் ஜனநாயகம் பற்றி அத்தகைய ஒரு சினிமா எடுக்க விரும்புகிறேன். ஏற்கனவே சரண்சிங்கின் ஒத்துழைப்பைப் பெற்று விட்டேன்....''

''அப்பக் கடவுள்தான் உன்னைக் காப்பாத்தணும்.''

''உங்க ஆசிகளுக்கு நன்றி ஸார்!''

''என் ஆசிகள் உனக்கு நிச்சயம் உண்டு. என்று நீ தோல்வியடையப் போகிறாய் என்று எனக்குத் தெரியும். அது எப்படியானாலும் நான் சினிமா ஃபீல்டிலிருந்து ரிடையர் ஆகி விட்டேன். நீ சினிமா தயாரித்து, அதை ரசிகர்கள் பார்க்கவும் தயாராயிருந்து, தியேட்டர்களில் ஹவுஸ் ஃபுல் போர்டுகளும் தொங்கி, உன் சினிமாக் கம்பெனி பிரபலம் அடைஞ்சா அப்புறமா நான் ஃபீல்டுக்குத் திரும்பி வந்து உன்னை இந்த இக்கட்டிலிருந்து விடுவிக்கத் தயாராயிருக்கிறேன்.''

அவர் எனக்கு ஆசிகூறினாரா, சபித்தாரா என்று எனக்குப் புரியவில்லை. பல்வேறு எதிர்க் கட்சித் தலைவர்களின் அபிப்பிராயங்களை நினைவுபடுத்திக் கொண்டு பார்த்தபோது ஒரே குழப்பமாக இருந்தது. சினிமா எடுப்பதா, அல்லது அந்த எண்ணத்தையே கைவிடுவதா? நீங்களே சொல்லுங்கள்!

Courtesy: Mid-day.

புகைப்படம்: சுபா



ஆச்சாரியர்

காந்தி சகாப்தப் பெருந்தலைவர் மறைந்துவிட்டார். அந்தக் காலகட்டத்தைச் சேர்ந்த மாமனிதர்களுள் எஞ்சியிருந்த ஒரே ஒருவரும் போய்விட்டார்.

ராஜாஜிக்கு அடுத்தபடியாக காந்திஜியின் பெருமதிப்புக்குப் பாத்திரமான கிருபளானி இனி நம்மிடையே இல்லை.

சுற்று முற்றும் பார்க்கிறோம்; நாடெங்கும் தேடுகிறோம். தன்னலம் கருதாப் பிறர்க் குரியாளர், தேச நலன் ஒன்றையே ஒவ்வொரு கணமும் எண்ணுகிறவர் என்பதாக யாரையுமே காணமுடியவில்லை. கவலை நம்மைக் கவ்வுகிறது. கிருபளானியின் மறைவு தரும் வருத்தத்துடன் இந்தக் கவலையும் சேர்ந்து கொள்கிறது.

எதிர்க் கட்சிகள் இணைந்து, ஜனநாயகத்துக்கு இன்றியமையாத பலமான மாற்றுக் கட்சியாக விளங்க வேண்டும் என்ற ராஜாஜியின் கருத்துக்குச் செயலுருக் கொடுத்தார் கிருபளானி, ஜே. பி.யுடன் சேர்ந்து. ஆனால் சுயநலம், தேச நலனை வென்றுவிட, ஜனதா உடைந்தபோது கிருபளானியின் மனமும் உடைந்தது. தேக ஆரோக்கியமும் படிப்படியாகச் சீர்கெட்டது.

பாட்டன் செய்த தியாகத்துக்குப் பேரன் பிரதிபலன் எதிர்பார்க்கும் இந்தக் காலத்தில் கடைசி மூச்சு வரை தியாகியாகவே விளங்கியவர். எந்த முக்கிய பிரச்னையிலும் ஆச்சாரியார் என்ற பெயருக்கும் தகுதிக்கும் ஏற்ப அறிவுரை வழங்கத் தவறாதவர்.

அவர் உடல் எரியூட்டப்பட, சாம்பல் நீரில் கரையும்; நிலத்தில் கலக்கும் அந்த நீர், நிலத்திலிருந்து உடலுக்குச் சக்தி பெறும் நாம், அவருடைய தர்மம் தவறாத மனோ பலத்தையும் பெற முயல்வோம்.

புகைப்படம் : **எக்ஸ்பிரஸ்**



கன்னியாகுமரியில் கண்ணீர்க் கதை

கன்னியாகுமரி மாவட்டத்தில் நடந்தவை கண்ணீர்க்கதை.

'அன்பே சிவம்' என்பதை இந்துக்கள் மறந்தனர். 'ஒரு கன்னத்தில் ஒருவன் அடித்தால் மறு கன்னத்தையும் காட்டு' என்று ஏசுபிரான் கூறியதை கிறிஸ்தவர்கள் மறந்தார்கள். போலீஸார் அமைதி காக்க இடையில் புகுந்ததில் மேலும் சில துயரங்கள்.

விசாரணைக் கமிஷன் நியமித்ததுடன், 'மதப் பிரசாரங்களைச் சில காலம் நிறுத்தி வையுங்கள்' என்று சட்டசபையில் எம்.ஜி.ஆர். கோரினார். இதற்கு மாறாக, கிறிஸ்துவ மதத் தலைவர்களையும் இந்து மத மடாதிபதிகளையும் பார்த்து, 'ஒரே மேடையில் தோன்றுங்கள்; ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று மக்களுக்கு எடுத்துக் கூறுங்கள்' என்று அவர் கேட்டுக் கொண்டிருக்கலாம். இது நடந்தால் மக்களின் பீதி விலகும்; நம்பிக்கை பிறக்கும்.

ஆனால் நடந்தது என்ன? இந்து மடாதிபதிகள் கலவரத்தை ஆரம்பித்து வைத்தது கிறிஸ்துவர்கள்தான் என்று பழி சுமத்தினார்கள். கிறிஸ்துவ மத குருமார்கள் இந்துக்களின் மீது குற்றப் பத்திரிகை படித்தார்கள். நிகர விளைவு இன்றளவும் (மார்ச் 20) பதற்ற நிலையே நீடிக்கிறது.

இருமுடி சுமந்து செல்லும் ஐயப்ப பக்தர்களைச் சமுத்திர ஸ்நானம் செய்ய விடாமல் மண்டைக்காடு கிறிஸ்தவர்கள் தடுத்தார்கள். இது இப்போதைய கலவரத்துக்குக் காரணம். ஆனால் அடிப்படை இது மட்டுமல்ல.

இந்துக்கள் இன்று கவலையில் ஆழ்ந்து போயிருக்கிறார்கள். பாரதம், 'இந்துஸ்தானம்' எனவும் வர்ணிக்கப்படும் தகுதியை எதிர் காலத்தில் இழந்து விடுமோ என்ற பயம்! அத்தனை வேகமாக மத மாற்றங்கள் நடக்கின்றன.

கிறிஸ்துவர்களும் சரி, முஸ்லிம்களும் சரி பள்ளி கட்டுகிறார்கள், கல்லூரி திறக்கிறார்கள், ஆஸ்பத்திரி நிறுவுகிறார்கள், இன்னும் பல அறப்பணிகள் புரிந்து மக்களின் நன்மதிப்பைப் பெறுகிறார்கள். மறுக்க முடியாது. ஆனால் இதன் பின்னால் மதமாற்றம் என்ற நோக்கம் ஓசைப்படாமல் இயங்கவே செய்கிறது. இதற்கென ஏராளமான செல்வமும் அயல் நாடுகளிலிருந்து வருகிறது. முஸ்லிம்களுக்கு பெட்ரோலிய வள நாடுகளிடமிருந்து கிட்டும் பேருதவி; கிறிஸ்தவர்களுக்கு மேலை நாடுகளிலிருந்து வரும் நன்கொடைகள்.

இந்துக்களுக்கு இந்த இருவித வாய்ப்புக்களும் இல்லை. மத மாற்றம் இந்துக்களுக்கு ஒரு மதக் கோட்பாடு அல்ல. சமுதாயப் பணியாற்றி மக்களின் நன்மதிப்பைப் பெற வெளிநாடுகளிலிருந்து இவர்கள் ஏராளமான நன்கொடைகளைப் பெறவும் முடியாது. எனவேதான் இந்துக்களிடையே ஒரு பதற்ற நிலை.

இந்நிலை மாறவும் அமைதியும் சகோதரத்துவமும் நிலவவும் இரண்டு காரியங்கள் செய்யப்பட வேண்டும்.

ஒன்று: பள்ளி பாடத் திட்டங்களில் இறையுணர்வை ஒதுக்கக் கூடாது. 'ஈசுவர அல்லா தேரே நாம்' என்ற தேசத் தந்தையின் பிரார்த்தனையைக் கூட நாம் பிள்ளைகளுக்குக் கற்றுத்தருவதில்லை. பைபிள் கதைகள், இந்து புராணக் கதைகள், நபி நாயகத்தின் வரலாறு இவற்றைச் சொல்லித் தரலாம். அனைத்தும் சுட்டுகின்ற முடிவு ஒன்றே என்பதை உணர்த்தலாம். சர்வமத சமரசத்தை இளம் உள்ளங்களிலேயே விதைக்கலாம்.. தீண்டாமைப் பேயும் ஒழியும்.

இரண்டு: மதம்மாற நினைப்பவர் ஒரு மாஜிஸ்திரேட் முன்னதாக ஆஜராக வேண்டும்; தாம் மதம்மாற விரும்புவதைக் கூறி, அது மெய்யான மனமாற்றம் என உறுதிமொழி அளிக்கவேண்டும்; பெயர், விலாசம், புகைப்படம் ஆகியவற்றைப் பதிவு செய்து விட்டு ஆறு மாதம் கழித்து மறுபடி வந்து மீண்டும் அதே உறுதிமொழியைத் தந்து மதம் மாறியதற்கான சான்றிதழைப் பெற்றுச் செல்ல வேண்டும்.' இதற்குச் சட்டம் வரவேண்டும்.


தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா -பாரதியார்



கல்கி
1982 மார்ச் 28
துன்மதி பங்குனி 15
மலர்: 40 இதழ்: 35

11

சங்க காலத்தின் இறுதியில் தமிழக வரலாற்றில் இருள் சூழ்ந்து கொண்டது. தொன்றுதொட்டு ஆண்டுவந்த சேர, சோழ, பாண்டியர் இருந்த இடம் தெரியாமல் போயினர். சுமார் 300 ஆண்டுகள் களப்பிரர் (கர்நாடகத்தைச்சேர்ந்தவர்கள்) ஆட்சி தான் தமிழகத்தில் நடைபெற்றது. இதன் பின் ஆறும் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொண்டை மண்டலத்தில் பல்லவ மன்னன் சிம்ம விஷ்ணுவும் பாண்டி நாட்டில் கடுங்



கோனும் களப்பிரரை வென்று தத்தமது ஆட்சிகளை நிலைநாட்டினர். ஆயினும் சோழர்களுக்கு விடிவுகாலம் பிறக்க மேலும் சுமார் முந்நூறு ஆண்டுகளாயின. அவர்கள் இக்கால கட்டத்தில் களப்பிரரிடமிருந்து மீண்டாலும் பாண்டியர் அல்லது பல்லவருக்கு மாறி மாறிக்கப்பம் செலுத்தும் குறுநில மன்னர்களாகவே விளங்கினர்.

கடுங்கோன் வழி வந்த பாண்டியர்கள் பேரரசர்களாகத் திகழ்ந்தனர். இவர்களுள் சோழ இளவரசன் விஜயாலயனுக்குச் சம காலத்துச் சக்கரவர்த்தி ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன். இவன் பரம வைணவ பக்தன். இவனது தந்தையும் பாட்டனும் கூட வைணவர்களே. அதுவரை சைவர்களாக இருந்த பாண்டிய மன்னர்கள் இவர்கள் காலத்தில் வைணவத்துக்கு மாறக் காரணம் பெரியாழ்வார். அவர், ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் காலத்தில் மட்டுமின்றி அவன் தகப்பனார், பாட்டனார் காலங்களிலும் வாழ்ந்தவர். மூன்று தலைமுறை பாண்டிய மன்னர்களுக்கும் அவர்களது குடிபடைகளுக்கும்ஆன்மீக ஆற்றலைவளர்த்து வந்தார் அப்பெரியார். இதில் அவரது மகள் ஆண்டாளுக்கும் பெரும் பங்கு உண்டு. மற்றொரு வைணவப் பெரியாரான நம்மாழ்வாரும் அவரது சீடர் மதுரகவி ஆழ்வாரும் ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் காலத்தில் வாழ்ந்திராவிட்டாலும் அவனது தந்தை, பாட்டனார் காலங்களில் பெரியாழ்வாருக்குச் சமகாலத்தவராக வாழ்ந்தவர்கள்தாம். மதுரகவி ஆழ்வார் வைணவம் தழைக்க உதவியதுடன் இரு மன்னர்களுக்கும் உத்தர(முக்கிய) மந்திரியாகப் பணியாற்றியவர். இவ்வாறு ஆழ்வார்களின் செல்வாக்கு மிகுந்திருந்த போதிலும் இப்பாண்டிய மன்னர்கள் மூவருமே இரு சமயங்களையும் வித்தியாசமின்றி ஆதரித்தனர்.

நமது கதை நடக்கும் காலத்தில் பாண்டிய நாட்டை ஆண்டு வந்த ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபனை, ''கூடலர்கோன் ஸ்ரீ பராந்தகன் குறைகழற் கோச்சடையற்க்குச் சேயாகி வெளிப்பட்ட செங்கண்மால் ஸ்ரீவல்லபன்'' என்று சாசனங்கள் தகப்பன் பெயருடன் இணைத்துக் குறிப்பிடுகின்றன. இவன் வீரம் கருதி மக்களால் ''ஏக வீரன்'' எனவும் ''பரசக்ர கோலாகலன்'' எனவும் பெருமிதத்துடன் அழைக்கப்பட்டான். சிறந்த நீதிமான் எனவும் விரிந்த ராஜ்யத்தை ஆண்டதால் ''அவனிப சேகரன்'' என்றும் போற்றப்பட்டான்.

மாவீரனான ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் தெற்கே இலங்கை மீது படையெடுத்ததை ''குரை கடலீழம் கொண்டு'' எனச் செப்பேடுகள் கூறுகின்றன. போரில் தோற்ற இலங்கை மன்னன் முதலாம் சேனனுக்கே, ஓர் ஒப்பந்தப்படி மீண்டும் ஆட்சிப் பொறுப்பை வழங்கித் திரும்பினான் பேரரசன். என்றாலும் இப்போது ஆட்சிக்கு வந்திருந்த ஈழ மன்னன் இரண்டாம் சேனன் பழி வாங்கத் துடிக்கிறான் எனவும் படையெடுப்புக்குச் சந்தர்ப்பம் பார்த்துக்கொண்டிருக்கிறான் எனவும் உளவுச் செய்திகள் கிடைத்ததால் ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் எச்சரிக்கையாகவே இருக்க நேர்ந்தது. தெற்கே ஈழம் எனில் வடக்கேயோ பல்லவர்களுடன் தலைமுறை தலைமுறையாக சதா போர்கள் நடந்து கொண்டே இருந்தன. எனவே ஸ்ரீமாறனுக்கு நிம்மதி இல்லாது போயிற்று.

அவன் மன நிம்மதி இழந்ததற்கு இன்னொரு காரணமும் உண்டு. அவனுடைய மூத்த மகன் வரகுணன் இன்று பதினாறு, பதினேழு பிராயத்து வாலிபன். அவன்



சிறந்த சைவர்களை நண்பர்களாகப் பெற்று சிவ பக்தனாய் விளங்கினான். ஸ்ரீமாறனுக்கு சைவத்தில் வெறுப்பில்லை என்றாலும் தனக்குப் பின் அரியணையில் அமர்கிறவன் வைணவனாகவே திகழ வேண்டும் என்று ஆசைப்பட்டான். ஸ்ரீமாறனின் இரண்டாம் தாரமான அக்கள நிம்மதி பேரழகி. அவளுக்கு ஓர் ஆண் மகவு பிறந்து வீர நாராயணன் என்ற பெயருடன் அழகும் தேஜஸும் நிரம்பி வளர்ந்து வந்தான்.

ஸ்ரீமாறனின் உள்ளம் திருநீறு அணிந்த மூத்த மகனைக் காட்டிலும் ஸ்ரீசூர்ணமிட்ட நெற்றியுடன் கூடிய பாலகனைப் பார்க்கையில் இயல்பாக அதிக பாசத்தைச் சொரிந்தது. கண்ணனே எதிரே வந்தது போன்ற எழிலோடு நின்ற இரண்டாம் தாரத்தின் மகன் வீர நாராயணனே தனக்குப் பின் அரசுக் கட்டிலில் அமர வேண்டும் என்று ஆசைப்பட்டான். ஆனால் இப்படி நினைப்பதே தவறு என்றும் மூத்த மகனை ராஜ்ய பரிபாலனம் செய்ய அனுமதிப்பதுதான் தர்மம் என்றும் மனச்சாட்சி இடித்துக் காட்டவும் செய்தது. மூத்தவனுக்கு இளவரசுப் பட்டம் அளிப்பதற்குரிய காலம் நெருங்க நெருங்க மாமன்னனின் மன உளைச்சலும் அதிகரித்தது. அந்நிகழ்ச்சியை எவ்வளவு காலம் ஒத்திப் போட முடியுமோ ஒத்திப் போடலாம் என்று எண்ணி நாட்களை ஓட்டினான். இதற்கிடையில் மூத்த மகன் வரகுணனோ பதினாறு பதினேழு வயதிலேயே வீரமும் அறிவாற்றலும் மனோ பலமும் தேக பலமும் சௌந்தர்யமும் மிக்கவனாக வளர்ந்திருந்தான். அடுத்து ஆட்சிப் பொறுப்புக்கு வரவேண்டியவன் தான்தான் என்பதில் அவனுக்குச் சிறிதளவும் சந்தேகம் எழவில்லையாதலால் கருத்துடன் பல காரியங்களில் நேரடியாக ஈடுபட்டும் மேற்பார்வையிட்டும் அனுபவம் பெற்று வந்தான்.

அன்று மாலையும் அதே வழக்கப்படி அரசாங்கக் கருவூலத்துக்குச் சென்று அன்று நிலத் தீர்வையாகவும் வேறு பல இறைகளாகவும் எவ்வளவுசெல்வம் சேர்ந்திருக்கிறது என்று மேற்பார்வையிட்டான். நில வருவாய்க் கணக்குகள் பற்றி திணைக்கள நாயகத்திடம் பேசிவிட்டு, அங்காடிப் பாட்டமாகவும் மனை இறையாகவும தறி இறையாகவும் முத்துக் குளிப்பதில் கிட்டிய சலாபத் தேவையாகவும் இதர சிற்றாயங்களாகவும் பெறப்பட்ட வரிகள் கணக்கில் வரவு வைக்கப்படுவதைக் கவனித்தான். நகருக்குள் வந்த புதிய வணிகர்களிடம் பெறப்பட்ட சுங்கங்களைத் திருவாசல் முதலி கருவூலத்தில் ஒப்படைப்பதைக் கண்ணுற்ற போதுதான் அதுவரை மௌனமாயிருந்த அவன் பேசலுற்றான்.

சில பொற்கழஞ்சுகளை நிலுவை யாகத் தனித்து வைக்க வேண்டும் என்றும், திருப்பித் தர நேரலாம் என்றும் திருவாசல் முதலி கூற "அது ஏன்?" என்று கேட்டான் இளவல்.

இரண்டே வார்த்தைகள்தான் எனினும் அந்தச் சொற்கள் பிறந்தது இளவலிடம் என்பதால் கோட்டையின் திருவாயில் காப்போர் தலைவன் மட்டுமின்றிக் கருவூல அதிகாரிகளும் கூட ஒரு கணம் திணுக்குற்றனர். பிறகுதான் கேள்வியில் தாங்கள் பயப்படும்படி ஏதும் இல்லை என்றும் தங்களை சந்தேகித்ததால் எழுந்த வினா அல்ல, அரசாங்க நடைமுறைகளை அறிந்து கொள்ள வேண்டிய அவசியம் கருதி இளவல் எழுப்பிய வினா எனவும் உணர்ந்தவர்களாகப் பதிலளிக்க முற்பட்டனர்.

"கோமகனே! தலைநகருக்குள் நுழைகின்ற வணிகர் அனைவரிடமும் சுங்கம் வசூலிப்பதுண்டு. சிலர் விலை உயர்ந்த பொருள்களை எடுத்து வருவார்கள். ஆனால் வாணிபம் தங்கள் நோக்கமல்ல என்பார்கள். அவர்கள் எல்லோரையுமே நம்ப முடியாது. எனவே உத்தரவாதமாகச் சில பொற்காசுகளை இப்படிப்பட்ட அனைவரிடமுமே வசூலித்துவிடுவோம். வாணிபம் செய்யாமல் கொண்டு வந்த பொருட்களோடு திரும்புகிறார்கள்



ஞானாக்னி எல்லா அழுக்கையும் நிவிருத்தி செய்துவிடும். எந்தப் பொருளைக் கண்டாலும் அதனூடே அழியாத பரம்பொருளை, பரமானந்த ஸ்வரூபத்தைக் கண்டுவிட்டவனுக்கு துக்கமில்லை., விசனம் இல்லை. எல்லாத் தத்துவங்களும் இதற்குள் அடங்கி விடுகின்றன. எல்லோருக்கும் அம்பாளுடைய கடாக்ஷத்தினாலே இந்த ஞானம் உண்டாக வேண்டும்.

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

ஸ்திரீகள் புருஷரிடம் அன்புடன் இருக்க வேண்டினால் புருஷர்கள் ஸ்திரீகளிடம் அசையாத பக்தி செலுத்த வேண்டும். பக்தியே பக்தியை விளைவிக்கும். நம்மைப் போன்றதொரு ஆத்மா நமக்கு அச்சத்தினாலே அடிமைப்பட்டிருக்கும் என்று நினைப்பவன் அரசனாயினும், குருவாயினும், புருஷனாயினும் மூடனைத் தவிர வேறில்லை. அவனுடைய நோக்கம் நிறைவேறாது. அச்சத்தினால் மனுஷ்ய ஆத்மா வெளிக்கு அடிமை போல நடித்தாலும் உள்ளே துரோகத்தை வைத்துக் கொண்டுதான் இருக்கும்.

அச்சத்தினால் அன்பை விளைவிக்க முடியாது. —பாரதியார்

வயிற்றுக்கு ஒழுக்க நெறியைக் கற்றுத் தருமாறு கடவுள் அஜீரணத்துக்குக் கட்டளையிட்டிருக்கிறார்! —விக்டர் ஹியூகோ

என்றால் அச்சமயம் நிலுவையைத் திரும்பத் தந்துவிடுவோம்'' என்றார் ஓர் அதிகாரி.

''அவ்வாறு வந்த இவர்கள் யார்? கொண்டுவந்த பொருள்கள் என்ன?'' என்று இளவல் வரகுணன் வினவ, திருவாசல் முதலி பேசலானான்: ''பிரபோ! இவர்கள் ஒரு நாடோடிக் குழுவினர். ரொம்பத் துடுக்குத்தனமாய்ப் பேசும் பேரழகியான ஒரு பெண் இவர்களுக்குத் தலைவி போலத் தென்படுகிறாள். அவள் தகப்பனும் தம்பியும் தோழி ஒருத்தியும் உடன் வந்திருக்கிறார்கள். சீன தேசத்து மல்லன் ஒருவன் இவர்களோடு சேர்ந்து கொண்டிருக்கிறான். அனைவரும் மிக உயர்ந்த இனத்தைச் சேர்ந்த அராபியக் குதிரைகள் மீது பயணப்பட்டு வந்திருக்கிறார்கள். பொற்கழஞ்சுகளை நிறைய வைத்திருக்கிறார்கள். பொன்னையும் குதிரைகளையும் சோழ இளவரசர் விஜயாலயன் பரிசளித்ததாகச் சொல்கிறார்கள். அந்தக் குதிரைகளை அவர்கள் இங்கே விற்க முற்படலாம் என்று கருதி நிலுவை வசூலித்தேன். தவறானால் மன்னிக்க வேண்டும்.''

கோட்டையின் வாயிற் காப்பாளர் தலைவன் இவ்வாறு பேசவும், ''கடமையைச் செய்கையில் தவறு இழைக்கிறோம் என்ற எண்ணம் எழுவதுதான் தவறு'' என்றான் வரகுணன். ''என்னிடம் நீ பணிவு காட்ட வேண்டியதுதான். ஆனால் பயம் கூடாது. எதற்காகக் காரணமின்றி மன்னிப்புக் கோருகிறாய்?''


''தவறுதான் பிரபோ! மன்னிக்க வேண்டும்'' என்று திருவாசல் முதலி இதற்கும் மன்னிப்பு வேண்ட, வரகுணன் அடக்க மாட்டாது சிரித்து விட்டான். பின்னர் அவன் தோளில் தட்டிக் கொடுத்து ''போகட்டும், அவர்கள் எங்கே தங்கியிருக்கிறார்கள் தெரியுமா?'' என வினவினான்.

''கைக்கோளர் வீதியில் நாளு தேசிகர் சத்திரத்தில் இராத் தங்கலாம் என யோசனை கூறினேன் ஐயா.''

''நல்லது! அவர்கள் உன் யோசனையை ஏற்றுச் செயல்பட்டிருப்பார்கள் என்று நம்புவோம்.''

மனைவி: ''உங்களுக்கு ஒரு வக்கீல் நோட்டீஸ் வந்திருக்கு...''
கணவன்: ''எங்கிருந்து..?''
மனைவி: ''டி. வி. பார்ப்போர் சங்கத்திலிருந்து..! ஒலியில் டி.வி. பார்க்க வர்றவங்களை நாம் ஒழுங்கா நடத்தலையாம்...''

-இணைத்துக்கடவு ரவி



வரகுணன் தன் மெய்க்காப்பாளனுக உடன் வந்திருந்த அணுக்கப் பேரரையனை அழைத்து ''இன்று இரவு கைக்கோளர் வீதி பக்கமாகச் செல்லும் நகர்க்காவல் படையினர் முதலில் அரண்மனை வாசலுக்கு வரட்டும்; அவர்களுடன் நானும் சேர்ந்து கொள்கிறேன்'' என்றான்.

''ஆக்னை பிரபோ!'' தலை வணங்கினான் அணுக்கப் பேரரையன்.

ஊருக்குப் புதிதாக வந்திருப்பவர்களுக்குக் கூடல்மாநகரில் பாண்டியப் பேரரசின் தலைநகரில் — ஆபத்து ஏதும் நேரக் கூடாது; அப்படி நேர்ந்தால் சக்கரவர்த்திக்குப் பெருத்த அவமானம் என்ற எண்ணத்தில்தான் ஊர்க் காவல் படையினருடன் அன்றிரவு சேர்ந்து கொண்டு நகர் வலம் வந்தான் வரகுணன். ஆனால் அந்தப் பிரதான எண்ணத்தின் பின்னால் வேறு சில சிந்தனைகளும் எழத்தான் செய்தன. சீன தேசத்து மல்லன் என்று திருவாசல் முதலி குறிப்பிட்டிருந்தான். கடல் கடந்து இவ்வளவு தூரம் வந்திருக்கும் அந்த மல்லன் எப்படி இருப்பான் பார்க்க வேண்டும் என்று ஓர் ஆசை. அது மட்டுமா? ஐந்து அராபியக் குதிரைகள் — உயர் ஜாதிப் புரவிகள் — அவர்களிடம் உள்ளன. சதா யுத்தத்தைச் சந்திக்க வேண்டியிருக்கும் இந்நாட்களில் குதிரைகளுக்கு எப்போதும் தேவை இருந்தது. முடியுமானால் பாண்டியப் படை உயர் அதிகாரிகளான மகா சாமந்தர்களுக்கென அந்தக் குதிரைகளை விலை பேசலாம் என்ற விருப்பமும் இளவலுக்கு இருந்தது. மூன்றாவதாக ஒரு கருத்தும் உள்ளத்தில் எட்டிப் பார்க்கத்தான் செய்தது. மூன்று ஆடவரும் இரு பெண்களும் வந்திருப்பதாய் திருவாசல் முதலி கூறியிருக்கலாம். ஆனால் அவன் அப்படிச் சொல்லவில்லை! 'துடுக்குத்தனமாய்ப் பேசும் பேரழகியான ஒரு குறமகள்' என்று குறிப்பிட்டான். அந்தக் குமரி குறி சொல்வதோடு மட்டுமல்லாமல் மந்திர மாயங்களும் அறிந்தவளாம்! பச்சிலைகள், மூலிகை வேர்கள் பற்றிய அறிவுடையவளாம்! சோழ இளவரசனின் கவனத்தைக் கவர்ந்து இத்தனை விலை உயர்ந்த பரிசுகளைப் பெற்ற அவள் எப்படி இருப்பாள்! பார்த்துவிடத்தான் வேண்டும்! இளைஞனான வரகுணனுக்கு இயல்பான ஆர்வம்.

அந்த ஆர்வத்தின் பின் விளைவு இப்போது அவன் சீனனின் பிடிக்குள் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தான்!

விடுதிக் காப்பாளன் நடுங்கி அடிபணியவே குவலை ஏதோ பெரிய தவறு நடந்து விட்டதை நொடியில் ஊகித்து, சீனனுக்குச் சமிக்ஞை காட்ட அவன் சிறைப்பட்டிருந்தோரை விடுவித்தான்.

''பிரபோ! நாங்கள் ஊருக்குப் புதியவர்கள்; இந்தச் சீனன் அறியாமல் செய்த பிழையைப் பெருந் தன்மையுடன் தாங்கள் மன்னித்தருள வேண்டும்!'' என்றாள் குவலை.

''பெண்ணே! எனக்கு நேர்ந்த அவமானம் ஒரு பக்கம் இருக்கட்டும்; அதை நான் பொருட்படுத்தவில்லை. ஆனால் நகர்க்காவல்

படையினர் தங்கள் கடமையைச் செய்ய முடியாமல் இடையூறு விளைவித்தது எவ்வளவு பெரிய குற்றம்! இந்தச் சினனின் அசட்டுத்தனத்தால் இரு திருடர்கள் தப்பி விட்டனரே!''

''ஐயா! ஊருக்குப் புதியவனான சினனுக்குத் திருடர்கள் யார், நகர்க்காவல் படையினர் யார் என்று இனம் பிரிக்கத் தெரியாது என்பதுடன், இருள் வேறு தவறு நேரத் துணை செய்திருக்கிறது.''

''பெண்ணே! நீ வாசாலகமாய்ப் பேசக் கூடியவள் என்று திருவாசல் முதலி கூறியது சரிதான்! 'ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு' என்று ஒப்புக்கொள்வதை விட்டு இருட்டைக் காரணமாக்குகிறாயே!''

''குற்றத்தை நாங்கள் மறுக்கவோ மறைக்கவோ முயலவில்லை பிரபோ! ஆனால் ஒன்று. அகப்பட்டுக் கொண்டிருக்கிற திருடனை விசாரிக்கிறபடி விசாரித்தால் தப்பிய இருவரும் சிக்காமலா போவார்கள்?''

''ஆகா! ராஜ்ய பரிபாலனம் எப்படிச் செய்ய வேண்டும் என்று எனக்குக் கற்றுத் தருகிறாயோ? வாயாடிப் பெண்ணே! நீங்கள் இராத் தங்கவேண்டியது இந்தச் சத்திரத்தில் அல்ல; சிறைச்சாலையில்!''


''தங்கள் சித்தம் அதுவானால் நாங்கள் மறுக்க முடியுமா ஐயா... ஆனால்...''

''போதும் நிறுத்து!'' அதட்டினான் வரகுணன். ''இன்னும் சற்றுப் பேச அனுமதித்தால் நீதி பரிபாலனம் பற்றியும் அறிவுரை வழங்க ஆரம்பித்து விடுவாய்! உன் வாய்த் துடுக்கு அடங்கவேணும் சில காலம் நீ சிறையிலிருப்பது நல்லது!''

இளவரசரின் உத்தரவு வெகு சீக்கிரமே நிறைவேற, மதுரை மாநகருக்கு வந்துசேர்ந்த அன்றிரவே சிறைவாசமும் தொடங்க நேர்ந்ததில் குவளையைத் தவிர மற்ற அனைவரும் சோர்ந்து போயினர். ஆனால் குவளை மட்டும் இந்தத் துன்பத்திலிருந்து ஒரு நன்மை விளையும் என்றும் பாண்டிய இளவலைச் சீக்கிரமே மீண்டும் சந்திப்போம் என்றும் நம்பினாள். அதற்குக் காரணம் பாண்டிய மன்னரின் நீதி வழுவாத் தன்மை பற்றி அவள் நிறையக் கேள்விப்பட்டிருந்தது மட்டுமல்ல; சினன் கோமகனை அவமதித்து விட்டது மெய்யேயாயினும் அவனுடைய தேக பலமும் ஆகிருதியும் திண் தோள்களும் நெளிந்து மிளிர்ந்த தசைகளும் சுத்த வீரனான வரகுணனை வியக்கச் செய்திருந்தன என்பதை அவளுடைய கூரிய மதி அவளுக்கு உணர்த்தியது. மேலும், வரகுணன் அவள் தம்பி வயதினன்தான் என்றாலும் நன்கு வளர்ச்சி யடைந்திருந்த இளம் காளை. கட்டமைந்த அவள் உடலழகையும் கவர்ச்சி மிக்க கண்களையும் நோக்கியபோது ஒரு மோக மயக்கம் அவன் விழிகளில் மிதப்பதைக் கண்டுகொண்டிருந்தாள் குவளை!

(தொடரும்)

காட்சியும் கருத்தும்!



தொலைக் காட்சியில் ஒரு நிகழ்ச்சியைக் காட்டும் முன்பு அந்நிகழ்ச்சி மூலம் மக்களுக்கு என்ன கருத்து (மெஸேஜ்) அளிக்கப்படுகிறது என்பதை நிலையத்தார் கவனிப்பது வழக்கம். இவ்வழக்கத்தைப் பின்பற்றி, அண்மையில் சென்னை தொலைக்காட்சி நிலைய மனமகிழ் மன்ற ஆண்டுவிழா நிகழ்ச்சிகளை அலசிய போது....

கண்ட காட்சி	பெற்ற கருத்து
○ விழா தொடங்கும் முன்பே, ஸ்வீட், காரம் ஆகியவற்றை மேஜையில் திறந்த வெளியில் பரப்பி எவரையும் அணுகவிடாமல் பார்த்துக் கொண்டது.	ஊருக்குத்தான் உபதேசம். உணவுப் பொருட்களை மூடி வையுங்கள் என்ற அறிவுரை 'மனை மாட்சி' நிகழ்ச்சிக்கு மட்டும்தான்.
○ விழாவிற்கு வந்திருந்த மேஜிக் ராதிகா, சி. ஐ. டி. சகுந்தலாவுக்கு - பெண்கள் அல்லது குழந்தைகளை விட்டு மாலை அணிவிக்கச் செய்யாமல், மாலையை அவர்கள் கையில் கொடுத்தது.	டி வி நிலையத்தில் பெண்களுக்கும் பஞ்சமில்லை எனினும் பெண்ணுக்குப் பெண் மாலை இடுவது பாரதப் பண்பல்ல என்ற கோட்பாடு கடைப்பிடிக்கப் படுகிறது.
○ விழாவைத் தொடங்கி வைத்து அவசர வேலை இருப்பதாகக் கூறி நிலையத்தின் துணை இயக்குனர் சென்றபின்பு எழுந்த கூச்சல்கள்.	அதிகாரிகள் மீதுள்ள வெறுப்பைக் கூட்டத்தோடு கூட்டமாக வெளிக்காட்டுவது நல்லது.

-அமர்நாத்


கவர்ச்சிகள்
ரூ 20,000 பரிசு பெற்ற
கிருஷ்ணமணி
எழுதும்
மற்றுமொரு
அற்புதத் தொடர்கதை
கல்கி
ஏப்ரல் 18ல்
புத்தாண்டு மலர்
அதிக பக்கங்கள் அதே விலை

விவாகரத்துக்கு ஒரே வழி!



வின்ஸ்டன் ஜீ.கிருபாகரன்

வக்கீல் அனந்தாச்சாரி தமது அறுபதாம் வயதில் டென்னிஸ் ஆடிவிட்டுக் கட்சிக்காரரர் வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தார். சிவில் ஸூட் சீமான்! ஆனாலும் அவர் எல்லா வழக்குகளையும் ஏற்பதில்லை. நியாயம் கிடைக்கத்தான் போராடுவார். விவாகரத்துக் கேஸ்களில்கூட. இந்தக் கேசை எடுத்துக்கொள்ளத் துளிக்கூட விரும்பவில்லை அவர். ராஜன் vs அருந்ததி (அல்லது) அருந்ததி vs ராஜன்.

அன்று காலை ஒரு மணி நேர இடைவெளியில் இருவரும் மாறி மாறி வந்து நோட்டீஸ் கொடுக்கச்சொன்னபோது விசித்திரமாகப் பட்டது அவருக்கு.

ஒன்றுமில்லாத சமாசாரம். . அருந்ததியும் ராஜனும் ஒருத்தருக் கொருத்தர் அட்ஜஸ்ட் செய்து கொண்டு தவறுகள் நேரும்போது பொறுமையாகக் கலந்து பேசி, மூளையிலேயே கிள்ளி எறிந்து தீர்வு காண முற்பட்டிருக்கலாம். மனப் பக்குவம் இருவருக்குமே இல்லை. வருடக் கணக்கில் இதே நிலை. வைரம் பாய்ந்து விட்டிருந்தது என்பதைப் பேச்சு வாக்கில் அவர் தெரிந்து கொண்டார்.

'கடை வைத்த புதிதில் தொழில் தொடர்பாக லேட்டானால் அருந்ததிக்குப் பிடிப்பதில்லை. நான் மட்டும் குறைச்சலா என்று போட்டிக்காகப் படிக்கிற பையனை இழுத்துக்கொண்டு மூச்சுக்கு முப்பது தரம் சினிமா, நாடகம்... அவன் படிப்புக்காகவே பொய் சொல்லி ஹாஸ்டலில் சேர்ப்பித்தாலும். நச்சரிப்பும் பொச்சரிப்பும் அதிகமானதால் தான் நரக வேதனையிலிருந்து விடுபட ஆரம்பித்தாலும். ஆட்டத்துக்குப் பத்து ரூபாய்க்கு, மேல் ஸ்டேக்ஸ் வைத்து சத்தியமாய் அவன் ஆடுவதில்லையாம்! ரம்மிதான் Game of inteiligence! சூது இல்லை. புரிந்து கொள்ள மறுக்கிறாள். காலையில் எழுந்ததும் பாயைச் சுருட்டி வைக்கக் கூடக் கமலம்தான் வரணும்.... சோம்பேறி... அந்தப் பெண் கமலம்தான் அவளுக்கு எல்லாம். புருஷன் தேவையில்லை. பையனைக் கெடுத்திடுவா... பிரிச்சுடணும்... பையன் தன் பாதுகாப்பில் இருக்கணும்.' — இது ஒரு வாதம்.

''அதெல்லாம் சரி... விவாகரத்துக் கேஸ்களிலே ஜட்ஜ்மெண்ட் அவ்வளவு சீக்கிரம் கிடைக்காது. நீங்க சொல்ற காரணம் அடிபட்டுப் போகும். வருஷக் கணக்கிலே பிரிஞ்சிருக்கிறதாகவும் காட்ட வழியில்லை. வழக்குப் போகிற போக்கு உங்க மகனுடைய மனசிலே எப்படிப்பட்ட பாதிப்புக்களை ஏற்படுத்தும் தெரியுமா? உடனே கிடைக்கணுமின்னு சொல்றேன்னு தப்பா எடுத்துக்கக் கூடாது. மனைவி நடத்தை கெட்டவன்னு சந்தேகத்துக்கு இடமில்லாமல் நிரூபிச்சா மட்டுமே....'' என்றார் வக்கீல் அனந்தாச்சாரி.

அவரை முடிக்கவிடவில்லை ராஜன்: ''அருந்ததி என்னை அலட்சியப்படுத்தறதுக்கு இப்படியும் ஒரு காரணம் இருக்கும். இன்னும் ரெண்டே நாளில் சாட்சியோட வர்றேன்!'' விர்ரெனக் கிளம்பிய ராஜனைப் பார்த்துப் பெருமூச்சு விட்டார் அனந்தாச்சாரி.

அதற்கப்புறம்தான் அருந்ததி போனாள்.

''அதெல்லாம் சும்மா. இவர் மனசிலே என்னமோ வச்சிருக்கார். அதனாலேதான் இப்படியெல்லாம் நடக்குது. பிரிஞ்சிடறதுதான் இரண்டு பேருக்கும் நல்லது. என் பைய



னோட எதிர்காலத்தை பற்றித்தான் கவலையா இருக்கு. அவர்கிட்ட விட்டாக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கிடுவார். அவன் என்னோட தான் இருக்கணும். அந்த வகையிலதான் கேஸ் போடணும்.''

லாயர் அனந்தாச்சாரி ராஜனுக்குச் சொன்னதையே திரும்பச் சொன்னார். கூடவே, ''அதிலே பாரும்மா... நீ கேஸ் போட்டு ஜெயிக்கணுமின்னு உன் கணவர் தகாத வழியில் நடந்து பாலுணர்வு நோய் பீடிக்கப்பட்டு....'' என்று கூறி முடிக்கும் முன்பே அருந்ததி எழுந்து கொண்டாள்.

''இப்பத்தான் புரியுது. இவர் லேட் லேட்டா வர்றதுக்குச் சீட்டாட்டம் மட்டும் காரணமா யிருக்க முடியாதுங்கறேன். இந்த மாதிரி சமாசாரத்திலே அடிபட்டிருக்கிற தாலேதான் பொண்டாட்டி வேணுங் கிறாரா? இருக்கட்டும்... இருக்கட்டும்... தகுந்த ஆதாரத்தோட ரெண்டே நாளிலே நான் திரும்பி வர்றேன்'' என்று ஆவேச மாகக் கொப்பளித்துவிட்டு வெளியேறினாள்.

மறுபடியும் வக்கீல் பெருமூச்சு விட்டார்.

இருவரும் ஒருவர் மேல் ஒருவர் குற்றம் சாட்டுகிறார்கள். பொதுவாகப் பையனின் எதிர்காலம் முக்கியமாகப் படுகிறது. அதுவரை க்ஷேமம்தான். புத்திசாலிப் பையன் என்கிறார்கள். விவாகரத்து வழக்குகளில் குடும்பத்தைச் சார்ந்த பிற உறுப்பினர் களின் மனநிலை எவ்வாறெல்லாம் பாதிக்கப் படும் என்பதை அறிந்தவர் அவர். பெற் றோர் இணைந்திருந்தால்தான் பையனுக்கு நல்லது.

அன்றைய சூடு தணிந்த பின்னரே அவர் களிடம் பக்குவமாகப் பேசி இணைத்து வைக்க வேண்டும் என்று எண்ணிக் கொண் டார் வக்கீல் அனந்தாச்சாரி. அதுதான் ஒரு நாள் விட்டு அவர்கள் வீடு தேடிச் சென்று கொண்டிருந்தார். நல்ல மனுஷன்.

கட்சிக்காரரின்வீட்டை நெருங்கும்போதே ஏக அமர்க்களம் எட்டியது. உடனே உள் நுழைவது அவ்வளவு உசிதமல்ல என்று நினைத்தவர் சற்றுத் தள்ளி நின்று காலம் தாழ்த்தினார். வழக்கமான குற்றச்சாட்டுகள் காதில் விழுந்தன. யாரிடமோ தத்தம் வாதத்துக்கு ஒட்டு வைத்துக் கத்திக்கொண் டிருந்தார்கள். யாரது?... கரெக்ட். அவர் களுடைய பையன்தான். பையன் ஒருவேளை ஸ்டடி லீவில் வந்திருப்பானு....?

சமயம் பார்த்து அமைய வேண்டும். அவர் நுழைவு. அதுவரைக்கும்... கொஞ்சம் டய லாக் கேட்போமே?

''....அதனலதான் இந்த முடிவு. அப் பாங்கிற முறையிலே நான் ஒருத்தன்தான் உனக்கு வழிகாட்டியா இருக்க முடியும்.... உன் எதிர்காலத்தைப் பற்றிய அக்கறை இருக்கிறதாலேதான் சொல்றேன். என் பாதுகாப்பிலேதான் நீ இருக்கணும். அவளை நம்பாதே.'' — ஆண் குரல்.

ஆமா... ரொம்பத்தான் அக்கறை. இருக்கிறதையெல்லாம் சீட்டாட்டத்திலே விட்டுட்டு,கண்டவ பின்னலே சுத்திட்டு வந்து நிப்பார். உன் அப்பா. ஒரு குடிகாரனைக் கூட நம்பலாம். சூதாடி இன்னும் மட்டம். அவரை நம்பாதே. பாழாப் போயிடுவே... நீ என்கூடவேதான் இருக்கணும்.'' — பெண் குரல்.

''என்னமோ என் எதிர்காலத்தை உங் களிலே ஒருத்தர்தான் நிர்ணயிக்க முடியும்னு பேசிக்கிறதைக் கேட்கவே எனக்கு வெட்கமா யிருக்கு. நீங்க பிரிஞ்சுடறதாலே இருந் தாலும் நான் யார் கிட்டே இருக்கணும்னு நான்தான் முடிவு பண்ணணும். பொறுப் பில்லாம, ஒருத்தரை யொருத்தர் புரிஞ்சுக் காம, தன்னிச்சையா வரம்பு மீறி இதே வேகத்திலே போனீங்கன்னு... அப்பா சீட் டாட்டத்திலே எல்லாத்தையும் அழிச்சுட்டு என் சம்பாத்தியத்தை எதிர்பார்ப்பார்.... அம்மாவுக்கும் பொழுது போக்குக்கு என் உழைப்புத் தேவைப்படும்....

''நான் இன்னும் பத்தாவதே தாண்டலே. நாளைக்கு நிறையப் படிச்சு முடிச்சாலும் வேலை கிடைக்கும்னு என்ன நிச்சயம்?

உங்க ஒருத்தரோடும் நான் இருக்க விரும் பலே. என் மூலமா வருமானம் இல்லேன்னு வரும்போது எப்படியாவது நான் சம்பாதிச் சுத்தான் ஆகணும்கிற நிர்ப்பந்தத்துக்கு ஆளாகிறபோது.... அம்மாடி! நல்லவேளை நான் பெண்ணாய்ப் பிறக்கலே.'' — பையன் குரல்.

போதும் சார்!

இளையுகப் பையன்...

'சபாஷ்' என்று மானசீகமாகப் பைய னுக்கு ஒரு ஷொட்டு வைத்தார் வக்கீல். அனந்தாச்சாரி.

''அடப் பாவி... எங்களை அப்படியாடா நினைச்சிருக்கே நீ?'' என்று ஒருசேரத் திடுக் கிட்டுக் கூவினார்கள் பெற்றவர்கள்.

புரிந்துகொண்டார்கள். பிரிவினைப் பேச்சு இனி எழாது. இனி வக்கீலுக்கு அங்கே வேலை இல்லை!

வீட்டைக் கடந்தபோது பார்வையைத் திருப்பினார் வக்கீல் அனந்தாச்சாரி. ராஜனும் அருந்ததியும் பையனை இருபுறமாகக் கட்டி யணைத்துக் கண்ணீர் விட்டுக் கொண்டிருந் தார்கள்.







⌘ நா. காமராசன் :

⌘ எஸ். லட்சுமணன்

நா. காமராசன் :

தி. மு. க., அ. தி. மு. க.வில் இருந்த அதே கவிஞர் காமராசன்தான் இப்போது ஆர். எஸ். எஸ். பயிற்சிகளிலும், இந்து முன்னணி மாநாடுகளிலும் பேசிவருகிறார். இந்தத் திடீர் மாறுதலுக்கு என்ன காரணம்? ''ஆஸ்துமாவை விரட்ட தினமும் யோகாவும், சூரிய நமஸ்காரங்களும் செய்ய வேண்டியிருந்தது. வீட்டில் தனியாகச் செய்வதற்குப் பிடிக்கவில்லை. ஆதலால் ஆர். எஸ். எஸ். நடத்தும் பயிற்சிகளில் கலந்து கொள்ள ஆரம்பித்தேன். அவர்களின் ஒழுங்கு முறை என்னைக் கவர்ந்தது. மேலும் என்னை விழிப்படையச் செய்தது குருஜி கோல் வால்கர் எழுதிய 'ஞான கங்கை' என்ற புத்தகம்தான். மொழி, தீண்டாமை போன்ற விஷயங்களைப் பற்றித் தெளிவாகச் சொல்லி யிருக்கிறார் கோல்வால்கர். இவர் 33 ஆண்டுகள் ஆர். எஸ். எஸ்.ஸின் தலைவராக இருந்தவர்'' என்கிறார் காமராசன். தற் போது இவர் தீண்டாதது: மது.

-தில்லப்பா

படம்: சுபா

எஸ். லட்சுமணன்:

இருபது வயதில் வேலைக்குச் சேர்ந்து, இன்றைக்கு யுனைடெட் கமர்ஷியல் பாங்கின் டைரக்டராக உயர்ந்திருக்கும் திரு லட்சு மணன் காங்கிரஸ்காரர். இருபது அம்சத் திட்டச் செயல் குழு காரியதரிசி; தேசியச் செம்மல் என்ற பட்டத்தை அனைத்துக் கட்சிகள் சார்பில் பெற்றவர். டேபிள் டென்னிஸ் அசோஸியேஷன் உபதலைவர்: யுகோ வங்கி ஊழியரின் அனைத்திந்தியச் செயலாளர். மனைவி புகழ்பெற்ற 'நிருத்திய சூடாமணி' கிருஷ்ணவேணி லட்சுமணன்.

வங்கிகளில் கொள்ளை அடிப்பது அதிகரித்து வருகிறதே என்று கேட்டதற்கு லக்ஷ்மணன் சொல்கிறார்: ''முன்பு ஆயுதம் தாங்கிய முன்னாள் ராணுவ வீரர்கள் வங்கிகளின் வாயில்களில் இருந்தார்கள். குற்றம் புரிய நினைப்பவர்களுக்கு ஒரு பய உணர்ச்சியாவது இருந்தது. வங்கி மானேஜர்களுக்கும் கைத் துப்பாக்கிவைத்துக் கொள்ளும் உரிமை இருந் தது. முன்னாள் ராணுவத்தினருக்கு வேலை வாய்ப்புப் பற்றிப் பேசுகிறோம் ஒரு புறம். இன்னொரு புறம் அவர்களுக்கான இது போன்ற வாய்ப்புக்களை மெல்ல நீக்கி வரு கிறோம்!''

''ஏழைகளுக்குக் கடனுதவி அளிப்பதில் வங்கிகளின் போக்கும் நோக்கும் மாறவேண் டும்'' என்று கருதும் லட்சுமணன், ''ஒவ் வொரு வங்கிக் கிளையிலும் கஸ்டமர் சர்வீஸ் கமிட்டி ஒழுங்காய்ச் செயல்பட்டால் வாடிக் கையாளர்களின் முணு முணுப்புக்கே இட மிராது'' என்றும் சொல்கிறார்.

-சாருகேசி

சிரிப்பு வருது! சிரிப்பு வருது!



கருத்து : கீதா

ஊமைகள்



''என்னடி சத்தமே காணலே, மணி ஆச்சு, சமையல் ஆகலியா?...''

பாதி சமையலில் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டாள்.

''என்னது கேட்கிறேன் பதில் வரலே....''

எட்டிப் பார்த்த ராமனுதன், முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க உட்கார்ந்திருந் தவளைப் பார்த்தார்.

'தட'க்கென அச்சத்தோடு எழுந்து கொண்ட சாவித்திரி ''தோ, ஆச்சன்னு...'' ஈன ஸ்வரத்தில் பேசினுள்.

''மகாராணிக்குச் சமையல் நடுவிலே ரெஸ்ட் கேட்குதா?''

'அடேய் ரெஸ்டில்லேடா இது, கடன் காரா... இது என் உடம்பின் பெண்மை யுணர்வுகள் விடைபெறும் வயோதிக மாற் றத்தின் விளைவுகளடா படுபாவி...' என்ற ஓர் அறைகூவல் எழ...

''சட்டைநாதா...! என்னவெல்லாம் என்னை நினைக்க வைக்கிறேடாப்பா'' என்று முணு முணுத்துக் கொண்டாள்.

சாப்பாட்டு இலையில் ருத்ர மூர்த்தியாய் ராமனுதன் எழுந்தருளியிருந்தார். ஆனுல் அர்ச்சனை அவர் பண்ணுவார்!

''என்னம்! பீர்க்கங்காய் கடைஞ்சியா? இப்பி இப்பியாய் இப்படியா? கையிலே பலமில்லே... சாம்பாரிலே உப்பைக் காட் டல்லே, ரசத்திலே புளியை விளாசிட்டே. சீ! தயிரா இது... கட்டியா உறைய வேண் டாமா? டம்ளர் ஜலம் ஆறிட்டதுடி.... சூடா வை....''

''ஹூம்! கையலம்ப ஜலம் கொடு!''

விருட்டென ஒரு செம்பு நீரை எடுத்துக் கையலம்பத் தருகிறுள். கையலம்பிவிட்டு, வெற்றிலை பாக்குப் போட்டுக் கொண்டு புறப் பட்டபோது சொல்கிறுர்:

''நன்னுப் படுத்துத் தூங்கு. நோக் கென்ன விசாரம்? நான்தான் கிடந்து ராவா, பகலா...'' செருப்பின் சத்தம் கேட்கிற வரை குரல் ஓயாது.

நெஞ்சில் அழுகை, கண்களில் வரட்சி! யாரும் அவளைப் புரிஞ்சுக்க முடியாது. யாரும் வந்துட்டா, அந்த உதட்டுச் சுழிப்பு எப்படித்தான் குறுஞ் சிரிப்பா மாறுகிறது!

'அந்த இலையில் சாதம் மீதி, கறிகாய் மீதி, ஊறுகாய் மீதி, மீதி அப்பளம்... இந்த எச்சற் சோற்றைத் தினம் தினம் திங்கற அடிமை நான்... இன்னிக்கு இதைச் சாப்பிட மாட்டேன். எடுத்து எறிஞ்சடப் போறேன்.'

''சீ! சாவி, புருஷன் சாப்பிட்ட இலையிலே சாப்பிடறதுதான் பதிவிரதா தர்மம்...'' சாவித்திரியின் அம்மா இப்படித்தான் சொல்றது போல ஸினிமாக் குரல் கேட்டது.

அந்த இலையில் உட்கார்ந்து கதம்ப சாதம் உருட்டி விழுங்கினுள்.

ஏதோ ஞாபகமாக 'போன்' இட்டே போனுள். தயக்கத்தோடு டாக்டர் சீதா வுக்கு எண்களைச் சுழற்றினுள்.

யாரோ தலையைப் பரிவோடு தொடும் உணர்வு. டாக்டர் சீதா...!

''என்ன கஷ்டம், ஏன்?''

தன் குடும்ப நபர்களைப் பற்றிக் கூறிவிட்டுக் கணவரைப் பற்றிக் கூறுகிறுள்...

''தோ பாருங்க சாவித்திரிம்மா! பெண் ணோட உடம்பும், மனசும் குழந்தைப் பிறப் பில் சீக்கிரம் தளர்ந்துடறது. ஆண்களுக்கு அப்படி இல்லே. குழந்தை குட்டிகளை நினைச் சுண்டு காலம் இப்படி இருக்கிறதென்னு நினைக்கப்படாது. அவரையும் நீங்க சந் தோஷமா வச்சக்கணும்தான்..!''

''அப்படி...அப்படித்தான்... ஆனு இப்ப மூணு மாசமாச்சு.... ஒரே பயமா, ஒரே அதிர்ச்சியா, அவமானமா... எப்படி டாக் டர் எங்குழந்தைங்க முகத்திலேமுழிப்பேன்?''

டாக்டர் ஸ்டெதத்தை வைத்து அவளைப் பரிசோதித்தாள். ''நோ எவிடென்ஸ் ஆஃப் ப்ரக்னென்ஸி! கவலைப்படாதீர்கள். உங்க ளுக்கு மெனுேபாசல் ஏஜ்... எனவே உங்க பெண்மையை மலர வச்ச அந்த நிகழ்ச்சி விடை பெற்றுக் கொண்டது. பயப்பட எது வுமே இல்லே.அதனுலேதான்மயக்கம்,வாந்தி. உணர்ச்சி வேகம் மட்டுமில்லே, கோபமும், ஆத்திரமும் படபடப்பும் கூட வரும். நல்ல ரெஸ்ட் வேணும். உடம்புக்கும் மனசுக்கும். ...உங்க கணவர் கிட்டேயும் சொல்றேன்... சொன்னுத்தானே உங்க நிலைமை அவ ருக்குப் புரியும்? கொஞ்ச நாளைக்கு உங்களுக்கு ரெஸ்ட் தேவை...''

ஊஞ்சல் பலகையில் உட்கார்ந்தால் தலைச் சுற்றல், புத்தகம் படித்தால் கண் சோர்வு. படுக்கவும் பிடிக்காமல், உட்காரவும் பிடிக் காமல்...

மணி ஐந்தடித்தது.

ஐயோ! அவர் வந்துவிடுவாரே...

பில்டரைத் தட்டிவிட்டு டிகாக்ஷனை எடுத்து டம்ளரில் ஊற்றும்போதே செருப்புச் சத்தம் கேட்டது.

செருப்பை உதறும் வேகமும், காலைத் தேய்த்து நடக்கும் ஒலியும்... அவர் அடுக் களைக்குள் வருகிறுர்.

''காப்பி!''

''ஏ ஒன் காப்பி....! ஏன், நீ சாப்பிடலியா?....''

''எதையுமே வாயில வைக்க விளங்கலே.'' அவள் மெல்லச் சொன்னாள்.

அவருக்குச் சந்தோஷம் ராகமாலிகையில் வரும்!

''தெரியுமோ சாவி! இன்னிக்குக் கட்சிக்காரன் வசமா மாட்டிண்டான். ரெண்டாயிரம் கறந்துட்டேன். உனக்குத்தான் ஏதாவது பண்ணலாம்னு இருக்கேன். அப்புறம் திரும்பியே வராதுன்னு நினைச்ச கடன் ஒரு ஆயிரத்து ஐந்நூறு வந்தது. நம்ப கவர்ன்மெண்ட் பாலிஸி விஷயமாக ஒரு பத்திரிகைக்காரன் என்னைப் பேட்டி கண்டுட்டு அப்படியே நூறு ரூபாய் தந்துட்டுப் போனான்.... ஒரே லக்கி டேதான் போ...''

உம்! இவர் இத்தனை சந்தோஷப்படறார்னு அவளுக்கு எப்போதுமே பயம்.... ஆமாம் கிட்டத்தட்ட பதினைந்து வருடங்களாக...

''ராத்திரி சாப்பாடு என்ன?''

''ரசம், பாகற்காய் பிட்லை...''

''உம்!.... கொஞ்சம் புதினாத் துவையல் அரைச்சிடேன்....''

என்னை ரொம்ப இம்சைப்படுத்தறார்.. மிருகம் மாதிரி இரக்கமில்லாமல்...

இவள் கை நோக அரைத்த புதினாவைப் பாதி தின்றுவிட்டுப் பாதியை இலையில் போட்டிருந்தார் அவர். அது அவளுக்கு?

தூணில் சாய்ந்து உட்கார்ந்தால் தேவலை போலிருந்தது. உட்கார்ந்தாள். வெற்றிலை போடவும் பிடிக்கவில்லை.

''என்ன பண்றே, இன்னமும்? வெற்றிலைத் தட்டை எடுத்துண்டு மேலே வாயேன்...''

அவள் எழுமுன் ஒரு சின்னத் தலைசுற்றல்.

''வந்து.... வந்து.... நேக்கு தலை சுத்தறதுன்னு....''

''அதனால என்ன? சரியாயிடும்...''

''டாக்டர் சீதா என்ன சொன்னான்னு...''

''அவ என்கிட்டயும் போன்லே சொன்னாளே... ஜஸ்ட் இதெல்லாம் சகஜம்னு சொன்னாளே...''

''எனக்கு ரெண்டு வேணுமான்னு?''


''என்னடி மாய்மாலம் பண்றே... வாயை மூடிண்டு கிடக்கணும்... புரியறதா?....''

அவரது ஆவேசப் பிடியின் உலுக்கலில் அநாகரிகமான உந்துதலில் அவள் தன் எதிர்ப்புணர்ச்சிகளை வெல்ல முடியாமல் மூர்ச்சையானாள்.

''அப்பா!''

இந்தக் குரலில் அவர் குபீரெனத் தூக்கி வாரிப் போட நிமிர்ந்தார்.

''நளினி! என்னம்மா இடுப்பு?''



குபீரென பாசம் மீதூர சாவித்திரி எட்டிப் பார்த்தாள்.

இடுப்புவரை நின்ற மீனு. இடுப்பிலிருந்து மீரா, கையில் ஒரு பெட்டி.

''என்னடி நளினி!'' சாவித்திரி புரியாமல் கேட்டாள்.

''எனக்கும் என் கணவருக்கும் எந்த விதத்திலும் ஒத்து வரலேம்மா... அவரது முன்கோபம்? அப்பப்பா! அவரது முரட்டுத் தனம்... போதும் போதும்... பெண்ணைப் பெண்ணாக இல்லாவிட்டாலும் மனுஷப் பிறவியாகக்கூட மதிப்பதில்லையானால்....? எத்தனை வருடங்கள் நான் பொறுப்பது? என் பொறுமை எல்லை மீறிவிட்டது. எனக்கு இந்த வாழ்க்கை வேண்டாம்....''

''என்னம்மா சொல்றே?'' மனைவியிடம் பாறுங்கல்லாக மனம் கசியாதவர் புத்திர சோகத்தில் மெல்ல இளகிப் போனார்.

சாவித்திரி மரம் மாதிரி நின்றாள்.

''உண்மைதான்ப்பா! அவர் குணங்கள் எதுவுமே நல்லதில்லே. நிமிடத்தில் கோபம், நிமிடத்தில் சலிப்பு, ஆத்திரம்னு என்னைப் பாடாய்ப் படுத்தி வச்சார்.. ஒரு நிமிஷம் நிம்மதியான தூக்கமில்லே, ஒரு நிமிஷம் ஓய்வு இல்லே. ரெண்டு குழந்தைகளையும் ராக்கண் முழிச்சு நான் வளர்க்கப்பட்ட பாடு அவருக்குப் புரியலே. என்னடி, நீதான் அதிசயமாக் குழந்தைகளைப் பெற்று வளர்த்தியாங்கறார். நாக்கு ருசியோ சொல்லவே வேண்டாம். எல்லாம் விதம் விதமா இருக்க வேண்டும். சம்மணமிட்டுக் கொண்டு சப்புக் கொட்டிக் கொண்டு சாப்பிடற போது அதைக் கஷ்டப்பட்டுச் செய்த எனக்கு ஒரு பாராட்டு உண்டா? அதை விடப் பெரிசாச் சொல்லணும்னு அவர் இலேலே விழற மிச்சம் மீதியை நான் சாப்பிடணு மிங்கறாரே அதை விட என்ன தண்டனை வேணும்?''

''அது ஒரு பழக்கம்மா!''

''என்ன பழக்கம்ப்பா! நாய் மாதிரி ஏன் அவர் எச்சிலையை நான் நக்கணும்? மனுஷனுக்கு மனுஷன் ஒரு கௌரவம் வேண்டாம்? ஒரு மரியாதை வேண்டாம்? அப்படிப்பட்ட அடிமை வாழ்வு எனக்கு வேண்டாம்ப்பா... எனக்கு வேண்டாம்.''

இப்போதுதான் அவள் சொற்களில் ஒரு ஆத்திரமான தீர்மானம் புரிந்தது.

''நான் போய் அவனைக் கேட்கிறேன்ம்மா! இரண்டு குழந்தைகளோட நீ...''

''வேண்டாம்ப்பா! ரெண்டு குழந்தைகள் எனக்குப் பாரமில்லே. என் பழைய வாத்தியார் வேலே எனக்கு நிச்சயம் கிடைக்கும். அதிலே நாங்க பிழைச்சுக்குவோம். உங்களுக்குக் கூட நான் பாரமாக இருக்க மாட்டேன்....''

''நளினி! என்னம்மா இப்படிப் பேசறே? இந்தச் சின்ன வயசிலே...''

''போதும்ப்பா! இந்தச் சின்ன வயசிலேயே சின்ன வயசுக்குரிய எல்லா ஆசைகளையும் வெறுக்க அடிச்சுட்டார்ப்பா.... இனிமேல் அவரோடு வாழ்க்கையா? அது முடியாது... நிச்சயமா முடியாது....''

மறுநாள்.

''அம்மா! அப்பா ஒரு இளகாத பாறுங்கல் மாதிரி இருந்தார். நீ வளைஞ்சு கொடுக்கிற எஃகு மாதிரி நடந்துக்கிட்டே. அது உன்னால முடியும். என்னால முடியாது. நீ ஒரு அடிமை சரித்திரத்தை எழுதி முடிச்சிருக்கே. எனக்கு அப்படி எழுதத் இடமுமில்லே, மனமுமில்லே... அதனாலே சுதந்திரப் பிரகடனம் செய்துட்டேன்....

''நான் ஒரு துவந்த யுத்தம் பண்ணலே. ஒரு ஹிம்ஸைக்கு முடிவு கட்ட ஒரு அஹிம்ஸை வழி தேடி ஓடி வந்துட்டேன். தீர்மானமாச் சொல்லிட்டு வந்தேன்....

''புருஷனோட சினிமாவுக்குப் போகணும், பீச்சுக்குப் போகணும், புருஷன் கையாலே பூ வாங்கி வச்சுக்கணும், புருஷனோட கொஞ்சிக் குலாவி வாழணும்கிற ஆசைகள் லவலேசமும் இல்லாம அழிஞ்சு போய்ட்டப்ப அதுக்காக ஏங்கி நான் நிச்சயமாக வருத்தப் படமாட்டேன், ஏன்னா, எனக்கு எல்லாத்தையும் விட சுதந்திரம் பெரிசாப் படறது. நான் சுதந்திரமா மூச்சு விடணும். நான் சுதந்திரமா மனசு நிறையச் சிரிக்கணும். என் கால்லேயோ, கையில்லேயோ விலங்கோட சப்தம் கேக்கப்படாது. அதை நான் வெறுக்கறேன்... தீவிரமா வெறுக்கறேன்.''

''சரி நீ வந்து தலையை முழுகிட்டு வா!'' சாவித்திரி அழுத்தமான, ஆழமான குரலில் கூறினாள்.

ராமனாதன் இலையில் உட்கார்ந்தார்.

ஆவி பறக்கும் சோற்றில் சாம்பார் விழுந்தது. பிடித்தமான கோஸ் கூட்டு விழுந்தது. அப்பளம், துவையல்... சாப்பிட்டதும் சாவித்திரி செம்பை எடுப்பதற்கு முன், தாமே செம்பை எடுத்துக் கை கழுவிக்கொண்டார்.

அந்த இலை... அவர் ஆயுளில் முதல் தடவையாக இப்போதுதான் சுத்தமாகச் சாப்பிட்டிருக்கிறார். அதில் ஒரு பருக்கைகூட இல்லை!

'நான் என்ன நாயா எச்சிலிலையில் இருப்பதைச் சாப்பிட?'' என்று மகள் சொன்னதும் மகானுபாவனுக்கு உறைத்து விட்டது போலும்!


போகிறது. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்! சாவித்திரி தனக்குள் சிரித்துக்கொண்டாள்..

அவளுக்கும் சுதந்திரம் கிடைத்து விட்டது!

"நாங்க மதுரைக்கு டிரான்ஸ்பர் வாங்கிட்டுப் போறோம்."

"ஏன்?"

"வேலைக்காரியோட கணவருக்கு மதுரைக்கு மாற்றலாகியிருக்காம். அதான் அங்கே போறோம்." - கணேஷ்




அன்றலர்ந்த பனிமலராய்
உங்கள் அழகு சிரிக்கிறது...
செந்தாமரையான அழகு சிரித்திட
சொந்தமுடன் முகத்தில் பூசுவீர் லாக்டோ-காலமைன் ப்ளஸ்
புலரும் காலையில் பனித்துளி பட்டு
மலரும் பன்னீர்ப்பூவாய் மாறும் முகமெனும் மொட்டு
துவண்ட மேனியை அன்புடன் துடித்தெழச் செய்யும் அதிசயம்
உவமையில்லா லாக்டோ-காலமைன் ப்ளஸ்ஸின் ரகசியம்
அதன்... ஆலன்டைன் அளிக்குது இளமையின் மென்மை
வைட்டமின் ஈ வளமுடன் தருகுது பனித்துளியின் புதுமை
விட்ச்ஹேஸல் எனும் அஸ்ட்ரின்ஜெண்ட் மேனியில்
செய்திடும் நன்மை.
இங்கிதமாய் பூசுவீர் லக்டோ-காலமைன் ப்ளஸ் அனுதினம்
மங்காத இளமை எழிலுக்கோர் வரப் பிரசாதம்.
லாக்டோ-காலமைன் ப்ளஸ்
டுபார்-இன்டர்ஃப்ரான் லிட் (காஸ்மெடிக்ஸ் டிவிஷன்)
மேனிக்கு அளிப்பீர் மென்னெழில்!
Sista's-DIL-693-81 I Tam

11

''லெட்டர் என்ன பேசுது? உண்மையா? பொய்யா?''

மறுநாள் காலை பதினோரு மணிக்கு, அந்த மொட்டைக் கடிதம் பிரஸ்தாபித்திருந்த சங்கிலியாண்டபுரம் மூன்றாவது தெரு வட-கடைசி வேப்பமரத்து வீட்டின் முன் நின்றாள் சுலோசனா — எதையும் எதிர்கொள்ளும் துணிவோடு. அவள் எதையும் எதிர்பார்த்தாள். அவை வண்டி வண்டியாக இருந்தன. அந்த மொட்டைக் கடிதம் ஒரு பொய்க் கடிதம் என்றும், அந்த வீட்டில் பெண்களே இல்லை என்பதிலிருந்து, அந்த வீட்டுக் கதவைத் தான் தட்டியவுடன் தனது கணவனே வெளியில் வந்து விஷயம் வெளியாகிப் போன ஆத்திரத்தில் தன்னை உள்ளே இழுத்துப்போய்க் கழுத்தை நெரித்துக் கொலை செய்து விடுகிறான் என்பதுவரை அனுமானங்கள் பரந்து விரிந்திருந்தன. ஆனால் என்ன ஆனாலும் சரி, தான் இந்த உண்மையை அறியாமல் விடப் போவதில்லை.

கதவைத் தட்டுவதற்கு முன்பாக அவள் அந்த வீட்டின் முன் நின்று அதை ஒரு நோட்டம் விட்டாள். இந்த நேரத்திற்கு வீடு உள்ளே தாழிடப்பட்டிருப்பதிலிருந்து இது மிகவும் குறைவான நபர்கள் உள்ள வீடாக இருக்கலாம் என்று தோன்றியது. குறைவான ஆட்கள் என்ன, 'அவள்' ஒருத்தி மட்டுமே இருந்தாலும் இருக்கலாம். ஏனென்றால், இந்த ஆள், சொந்த வீடு போல் வந்து போயி, கான்ஸ்டபிள் மூலம் காய் கறி, பலசரக்கெல்லாம் வாங்கி அனுப்புவதென்றால், அவளைக் கண்டிக்கிற ஒரு நபர்கூட இங்கு இல்லாதிருந்தால்தானே அது சாத்தியம். அல்லது இருக்கிற ஒன்றிரண்டு நபர்களும் அவளைக் கண்டிக்கிற திராணியை இழந்தவர்களாக இருக்க வேண்டும்.

அவள் பின்பு கதவைத் தட்டுவதற்காக நெருங்கினபோது உள்ளே ரேடியோ பாடுவது லேசாகக் கேட்டது.

முதல் முறையும் மறுமுறையும் தட்டியதற்குப் பதில் இல்லை. இவள் மூன்றாவது முறை நன்றாக உரத்துத் தட்டியபோது உள்ளே ரேடியோ சத்தம் குறைக்கப்படுவது தெரிந்தது. லேசாகக் கேட்ட கதவுத்தட்டலை உறுதிப்படுத்திக் கொள்ள அது குறைக்கப்பட்டிருக்க வேண்டும். சுலோசனா, அந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ள நினைத்து மீண்டும் தட்டினாள்.

சில விநாடிகளில் உள்ளே கதவருகில் தாழ் கூட அகற்றப்படாமலேயே 'யாரு?' என்ற குரல் கேட்டது. பெண் குரல். சற்று இனிமையான குரல்தான்.

''ஒரு பிரண்ட்.... லேடி பிரண்ட்.''

கதவு திறந்தது.

கதவைத் திறந்தவள் ரேவதி.

இரண்டு லாரிகள் தங்கள் முழு பலத்தோடு நேருக்கு நேர் மோதிக்கொண்டு ஸ்தம்பித்து நின்றன.

'ஓ! ஹைதராபாத் அம்மாளா? நீ தான் ரேவதியா?' — சுலோசனா உள்ளேயே சொல்லிக் கொண்டாள்.

இதையடுத்து சுலோசனாவுக்கு வந்த நினைவு கொஞ்சம் தூரமானது. தான் மதுரை அத்தை வீட்டிலிருந்து நளினாவுக்குக் கடைசியாக எழுதிய கடிதம். அதில் தனக்குத் திருமணம் நடந்தால், தான் அங்கே இரண்டு மனமாய், 'நிஜ மனத்தை மறைத்துக்கொண்டும், நடித்துக் கொண்டும், சிரித்துக்கொண்டும்' என்று, தான் செய்ய வேண்டியிருக்கும் சுய துரோகத்துக்குப் புலம்பி எழுதியிருந்தாள். திருமண தினத்தன்றே அந்த ரகு பரிசாக அனுப்பியிருந்த ஓவியத்தைக் கூட அரவம் இல்லாமல் நளினாவிடம் கொடுத்தனுப்பிவிட்டு மறுநாள் மூத்த நாத்தியோடு மல்லுக்கு நின்றாள். ஆனால் இவனோ தன் காதலியைத் தன் கல்யாண வைபவத்தைக் கண்டு களிக்க அழைத்து வந்திருக்கிறான். பட்டவர்த்தனமாக ஒரு பொய்யைச் சொல்லி அவளுக்கு எல்லோரிடமும் ஒரு கௌரவத்தை வாங்கிக் கொடுத்தான். இருந்து ரயிலடி வரை சென்று வழியனுப்பிவிட்டு வந்தான். என்ன தைரியம் அவனுக்கு? அத்தனை பெரிய திருமண விழாவில் யாராவது ஒருவரிடம் அகப்பட்டுக் கொள்ளலாமே என்ற பயம் இல்லையா? ஆ, இந்தத் தைரியத்தில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. அவன் ஆண். அகப்பட்டுக் கொண்டதும், 'ஆமாம். அதற்கென்ன இப்போது' என்று கேட்டுவிட்டால் போகிறது. அவளென்ன பெண்ணா, விஷயம் தெரிந்ததும் மாப்பிள்ளை வீட்டார் வாரிச் சுருட்டிக் கல்யாண மண்டபத்திலிருந்து மறைய, இவளது பெற்றோரும் உற்றோரும் கதிகலங்கிக் கைபிசைந்து நிற்க, இவள் கொல்லையில் ஏதாவது கிணறு இருக்கிறதா, கிளையில் தொங்கக் கயிறுஇருக்கிறதாஎன்று தேட?



இவன் ரகுவை விட்டு வருகிற கடைசித் தினத்தன்று சொன்னான், 'நீங்க ரொம்ப வசதியான இடத்திலே உக்காந்துக்கிட்டுப் பேசுறீங்க' என்று. இந்த வசதி ஆண்கள் எல்லோருக்குமே பொது சாம்ராஜ்யமாகத்தான் இருக்கிறது.

இந்த ஸ்தம்பிப்பையும் மௌனத்தையும் உடைக்க வேண்டியது தனது பொறுப்பும் அவசியமும் என்று கருதிய ரேவதி, இவனைத் தெரியாதது மாதிரி 'நீங்க....' என்று இழுத்தாள்.

'நான் மிஸஸ் வரதராஜுலு'' – குரலில் அழுத்தம், நையாண்டி, குரோதம். ''ஞாபகமிருக்கா?''

''ம்...ம்... வாங்க.''

''ஞாபகம் இருக்கிறது கஷ்டம்தான். ஒரு நாளு பார்த்தது தானே? அதுவும் கல்யாணத்தன்னிக்கு. இல்லியா?''

''இருக்கு. உட்காருங்க.''

கலோசனு உட்கார்ந்து கொண்டு கேட்டாள்: ''ஹைதராபாத்தில இருந்து இங்க எப்ப வந்தீங்க? டிரான்ஸ்பரா?''

''ம்?.... ம்.''

''ஒங்க வீட்டுக்காரருக்கு என்னு வேலனு சொன்னீங்க? ஜெயில். ஜெயில்லதான வேல. ஜெயில் சூப்ரண்டெண்ட்டா?''

ரேவதிக்குத் தெரிந்தது. இவள் தெரிந்து தான் வந்திருக்கிறாள். பார்ப்போம். சமாளிக்கும் வரை சமாளிப்போம். தடி தலைப் பாகையோடு போகிற சாத்தியம் இருந்தால் போய்த் தொலையட்டுமே.

''காப்பி சாப்பிடறீங்களா?''

''காப்பியா? கொண்டாங்களேன்.''

''வீட்ல எல்லாம் சௌக்கியம்தானே?''

''பூரண சௌக்கியம்.''

ரேவதி காப்பி எடுக்கப் போயிருந்தபோது கலோசனு வீட்டை ஒரு நோட்டம் விட்டாள். வெகு சிறப்பு என்று சொல்லும்படிக்கு ஒன்றுமில்லை. ஆணியில் ஒரு பெண் குழந்தையின் பள்ளிச் சீருடை தொங்கியது. அநேகமாக யு.கே.ஜி.யாக இருக்கலாம். அவளுக்கு அந்தக் குழந்தையைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. ஒருவேளை அதன் முகச் சாயல் தன் கணவனைக் கொண்டிருக்குமோ?

காப்பி கொண்டு வந்து வைத்தபடி ரேவதி கேட்டாள்: ''என் விலாசம் ஒங்களுக்கு எப்படிக் கிடைச்சது?''

''அதுவா? அது கடவுள் கிருபை.''

''கடவுள் கிருபையா?''

''ஆமா. அப்படி ஒரு தலைப்புப் போட்டு ஒரு லெட்டர் வந்தது. அதுலதான் விலாசம் இருந்தது.''

ரேவதியின் முகம் கூடுதலாகவே கறுத்தது.

''அந்த லெட்டரைப் படிக்கிறீங்களா?''

கலோசனு தன் கைப்பையிலிருந்த அந்தக் கடிதத்தை எடுத்து நீட்டினாள். ரேவதியின் முகத்தைப் பார்த்துக் கொண்டே. அதை ரேவதி மௌனமாக வாங்கிப் படித்து முடிக்கும்வரைகூட அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். இவள் தன் சக்தியில் ஒரு நாலை அந்தக் கடிதத்தைப் படிப்பதற்கும் மீதியைத் தன் உணர்ச்சிகளை அடக்கிக் கொள்வதற்கும் உபயோகப்படுத்துகிறாள் என்பது போல் தோன்றியது.

படித்து முடித்துவிட்டு ரேவதி இறுக்கமான முகத்தோடு ஒன்றும் சொல்லாமல் கடிதத்தைத் திருப்பிக் கொடுத்தபோது இவள் கேட்டாள்: ''லெட்டர் என்னு பேசுது? உண்மையா பொய்யா?''

''காப்பி குடிங்க.''

இவள் காப்பியைக் கையில் எடுத்துக்கொண்டு ''சரி சொல்லுங்க'' என்றாள்.

''அது ரெண்டையுமே பேசுது. பாதி உண்மை, பாதி பொய்.''

''அப்பிடியா?''

''என் வீட்டுக்காரர் ஜெயில்ல இருக்கறதும், மிஸ்டர் வரதராஜுலு எங்களுக்கு ஏதோ கொஞ்சம் உதவி செய்யறதும் உண்மைதான். ஆனா அத வச்சி இவங்க எங்களுக்குக் கற்பிச்சிருக்கிற உறவு பொய். நான் அந்தப் பரம்பரையில வரல.''

இதைக் கேட்டு கலோசனு கலகலவென்று அட்டகாசமாக, கொஞ்சம் அதிக நேரமெடுத்தே சிரித்தாள். அதே சிரிப்புத் தொடரை மீண்டும் ஒரு முறையும் மூன்றாவது தடவையாகவும் கூட நினைத்து நினைத்துச் சிரிக்கிற பாங்கில்.

''ஏன் சிரிக்கிறீங்க?''

''சந்தோஷம்தான் பிரண்ட். சந்தோஷம்தான் காரணம். புருஷன் சுத்த ராமனாவே இருக்கிறதும், ஒரு பரம்பரையே ஒரு அற்புதமான குணத்தை நால் அழிஞ்சுபோகாமக்காப் பாத்தி வர்றதும் எவ்வளவு சந்தோஷமான விஷயங்க!''

''நீங்க நம்பலையா?''



சட்டென்று இவள் முகமும் குரலும் இறுக்கம் அடைந்து கடுமை கொள்ள ''நம்பணுமா?'' என்று திருப்பிக் கேட்டாள்.

''அது உங்க இஷ்டம்.''

''நான் சொல்றேன். உங்க வீட்டுக்காரரும் என் வீட்டுக்காரரும் எந்தக் காலத்திலேயும் பிரண்ட்ஸ் இல்லே. உன் வீட்டுக்காரர் வழக்கு விஷயமா ரெண்டொரு தடவை மிஸ்டர் வரதராஜுலு இங்க வந்தப்பதான் நீங்க பார்த்துக்கிட்டீங்க. உங்க ஆசைப்படியே அந்தக் கேஸோட முடிவும் ஆகிப்போச்சு. ரொம்ப சௌகரியம். அப்ப இருந்து குடும்பம் ஓடிக்கிட்டு இருக்கு.''

''நல்லாதான் கற்பனை செய்யறீங்க. ஆனா இது ஒரு இன்சல்ட்டிங் விஷயம். நீங்க இவ்வளவு தூரம் உதவி செய்ற மிஸ்டர் வரதராஜுலுவோட மனைவிங்கறதுனாலதான் பொறுத்துக்குறேன்.''

''எவ்வளவு தூரம் உதவி?''

''இனி நீங்க பேச வேண்டாம். நீங்க போகலாம்.''

''போறேன். ஆனா ஒரு சின்னச் சந்தேகம். சரியோ தப்போ ஒரு புருஷன் சாப்பாட்டுக்கு வைக்காம உள்ள போயிட்டான். ஆனா அதுக்காக ஒரு பெஞ்சாதி விபசாரம்பண்ணித்தான் போனாக்கணும்னு என்ன இருக்கு?''

தொடர்கதை.

தொடர்கதை என்ற தலைப்புக்குப் பொருத்தமாக ஒரு வண்ணப் படம் எடுக்க முடியுமா? என்று சவால் விட்டோம். ஏற்றுக் கொண்டவர் சரஸ்வதி சத்தியமூர்த்தி. விளைவு: இவ்வார மேலட்டை!

''கல்கியில் தொடர்கதை படிப்பதென்பது அளப்பரிய ஆர்வத்தையும் ஆனந்தத்தையும் தருவது என்பது மட்டுமல்ல; கல்கி படிப்பதென்பதே அடுத்தடுத்த தலைமுறைகளில் தொடர்கதை'' எனச் சொல்லாமல் சொல்பவர்கள்:

தாய்: கங்கா; மகள்: பிரபா.

நேயர்களுக்கு ஒரு சவால்: புகைப்பட நிபுணர்களுக்குச் சவாலாக அமையக்கூடிய சிறந்த தலைப்புக்களைத் தபால் கார்டில் எழுதி அனுப்புங்களேன்! ஏற்கப்பட்டால் பரிசு உண்டு!

முடிவு தேதி: ஏப்ரல் 15



ரேவதிக்குத் தெரிந்து விட்டது. ஆஹா, இவள் ஒரு கை பார்த்துவிடுவது என்று முடிவு கட்டியே வந்திருக்கிறாள். எடுத்தவுடன் ஏண்டி சக்களத்தி என்று ஆரம்பிப்பது தன் படிப்புக்கும் அந்தஸ்துக்கும் பங்கம் என்பதால் ஆரம்பத்தில் கொஞ்சம் பாலிஷா காட்டியிருக்கிறாள். இனி இவளை விட்டால் பொடி செய்து விடுவாள் என்று அவள் திருப்பித் தாக்க ஆரம்பித்தாள்.

''நீ ரொம்பப் பேசறே. இப்படியெல்லாம் பேச உனக்கு எந்த உரிமையும் இல்லே.''

''ஏன் இல்ல? நான் ஒன்னால பாதிக்கப்பட்டிருக்கேன். நான் அவரோட மனைவி.''

''ஆமா, பொல்லாத மனைவி. நீ மனைவியா இருக்கிற லட்சணத்தை அவரே சொல்லியிருக்காரு.''

''சொல்லியிருக்காரா? எங்க, பெட்ரூம்ல வச்சா?''

''ஆமா. பெட்ரூம்ல வச்சுத்தான். என்ன செய்வே நீ? செய்யறதைச் செய் போ. இங்க நிக்காதே'' என்றவள் அதோடு நிறுத்தாமல் தொடர்ந்து பொரிய ஆரம்பித்தாள்.

''நீ அவரோட மனைவியா இருக்கிறதே என்னோட கருணையினால. அது தெரியுமா ஒனக்கு? கிறுக்கச்சி. நீ அவரு மனசைப் புண்ணாக்குற ஒவ்வொரு தடவையும் அவரு நொந்துபோயி இங்க வந்து எப்பிடிப் புலம்பறாரு தெரியுமா? நான் நெனச்சா உன்னை ஒரே வாரத்தில டைவர்ஸ் பண்ணிடச் சொல்ல முடியும். போறு, சின்னப் பொண்ணுதானே, பொறுங்க பொறுங்கனு சொல்லிக்கிட்டு இருக்கேன். நீ வந்து என்னையவே குத்திக் கிழிக்கப் பாக்குறியே.''

''என்னைய டைவர்ஸ் பண்ணிட்டு நீ அவரைக் கல்யாணம் பண்ணிக்கப் போறியாக்கும்?''

''ஆமா.''

''முடியுமா உன்னால?''

''செய்தா?''

''நான்என்னசெய்யறேன்னுபாக்குறியா!''

''ஒரு மண்ணும் செய்ய முடியாது. போ. நீ இன்னும் கொஞ்ச நாளையில சேலையக் கிழிச்சுக்கிட்டுத் திரியப் போற. அதுதான் முடியும் உன்னால.''

கலோசனவுக்கு அதற்கு மேல் பேசத் தெரியவில்லை. அப்படியே அவள் கழுத்தைப் பிடித்துவிட் வேண்டும் என்றுமட்டும் வந்தது.

''சரி'' என்று மட்டுமே சொல்ல முடிந்து விருட்டென வெளியே வந்தான்.

அவன் வர்சலுக்கு வரவும் நாகப்பன் அங்கே சைக்கிளில் வந்து இறங்கவும் சரியாக இருந்தது. மப்டியில் இருந்த அவன் சைக்கிளில் மாட்டியிருந்த பெரிய பையில், மொட்டைக் கடிதம் குறித்தது போலவே காய்கறி. ஒரு பெரிய கீரைக் கட்டும் நான்கு முருங்கைக் காய்களும் பைக்கு வெளியே அழகாகத் தலை நீட்டிக் கொண்டிருந்தன.

சைக்கிள் ஸ்டாண்ட் போட்டு, பையை எடுத்துக் கொண்டு திரும்பி நிமிர்ந்த அவன் அது ரேவதிதானுக்கும் என்று ஏதோ சொல்ல வாயெடுத்துப் பின்பு இவளைத் தெரிந்து ஸ்தம்பித்தே போய்விட்டான்.

''அம்மா.... நீங்க....?''

உங்கள் நெற்றியின் 'சிங்காரம்' போலியானதா?

சிங்கார் குங்குமப் பொட்டு வாங்கும்போது, கவனமாக சோதித்து அசலாக வாங்கவும்.,

போலிகளின் தந்திரங்களை அறிந்து கொள்ளுங்கள்:

இதுதான் எங்கள் அசல் சின்னம். K,M,ௐ போன்ற எழுத்துக்கள் மூலம் உங்களை ஏமாற்ற முயலுகிறார்கள்.



Shingar

இதுதான் எங்களது பெயர் —பல ஆண்டுகளாக உங்கள் நம்பிக்கையைப் பெற்றிருப்பது. அதன் எழுத்துக்கள் S-h-i-n-g-a-r- 'சிங்கார்' என்று எழுதப் பட்டிருக்கும். நீங்கள் எங்கள் மீது வைத்திருக்கும் அபார நம்பிக்கையைப் பயன்படுத்தி, போலித் தயாரிப்பாளர்கள், அந்த எழுத்தைப்போல எழுதி ஏமாற்றுகிறார்கள், உதாரணம், Shingari, Shrinagar, Shimgar.

எங்கள் பேக்கிலே இந்த வட்டமான திலகம் இருப்பது உங்களுக்கு நன்கு தெரிந்ததே. ஆனால் உங்களை ஏமாற்றுவதற்காக போலித் தயாரிப்பாளர்கள் ◐,◑,□,◇ போன்றவற்றை செய்கிறார்கள்.

உங்கள் சருமத்தைப் பாதுகாப்பதற்கேற்ப உன்னத பொருட்களால் உருவானது அசல் சிங்கார் குங்குமப் பொட்டு. கலையாதது, சீர்குலையாதது, உரியாதது, பிரிந்து விழாதது. போலி குங்குமப் பொட்டுக்களில் இத்தகைய நன்மைகள் ஏது? மாறாக, போலிகள் உங்கள் மென்மையான சருமத்தை கெடுத்து விடலாம்.


அதற்கு இடம் கொடுக்காதீர்கள்.
இப்போதே எச்சரிக்கையுடன்
நடந்து கொள்ளுங்கள்.

சிங்கார்

குங்குமப் பொட்டு

அழகின் வண்ணம், நம்பிக்கைச் சின்னம்.





"அம்மானு சொல்லாதே. மகாலெக்ஷ்மினு சொல்லு" — சொல்லிவிட்டுச் சுலோசனா விடுவிடென்று நடந்தாள்.

இதே வேகத்தோடு இவள் முன்பொரு முறை நடந்திருக்கிறாள். அது அப்போது இவள் ரகுவின் அறையை விட்டுக்கடைசியாக வெளியேறியபோது! ஆனால் இரண்டுக்கும் வேறுபாடும் இருந்தது. அப்போதும் வஞ்சிக்கப்பட்ட உணர்வும், ஏமாற்றமும், கோபமும் இருந்தாலும் இந்த வாழ்க்கையை விடுவதில்லை என்ற வைராக்கியமும் இருந்தது. ஆனால் இப்போது எதையாவது செய்தாக வேண்டும் என்கிற ஆங்காரம் இருந்தாலும் முடியுமா என்கிற சோர்வும் கூடவே இருந்தது. அப்போது முன்னால் ஒரு சுவர் தெரிந்தது. திசை மாற்றிக் கொண்டு நடக்கலாம் என்கிற துணிவு இருந்தது. இப்போது நான்கு பக்கமும் சுவராகத் தெரிந்தது. இப்போது தப்பும் வழி? உடைக்க வேண்டும். ஏதோ ஒரு மூலையில் தாக்க வேண்டும். எந்த மூலையில்? அதுதான் தெரியவில்லை.

கிறுக்கச்சியாமே. இன்னும் கொஞ்ச நாளிலே சேலையைக் கிழித்துக் கொண்டு திரிவேனாமே. இவளைத்தான் முதலில் தாக்கவேண்டும்.

அது சரி, திட்டுவதற்கு எவ்வளவோ வார்த்தைகள் இருக்க இவள் ஏன் இந்த வார்த்தையைச் சொன்னாள்? இவர், இவரென்ன இவர், இவன் சொல்லியிருப்பான். இது இவனது திட்டம்தான். இப்படியே சொல்லிச்சொல்லிக் கிறுக்காக்கி விடலாம் என்று.

நானா கிறுக்கு? இவர்கள் எல்லோரும்தான் கிறுக்கு என்று காட்ட வேண்டும்.

டவுன் பஸ்ஸில் வரும்போது கடைவீதியில் தெரிந்த எல்லா நிறுவன விளம்பரப் பலகைகளையும் பார்த்தபோது, ஒரு பெரிய துப்பாக்கியால் இவைகளை ஒவ்வொன்றாகச் சுட்டுக்கொண்டேவரவேண்டும் போலிருந்தது அவளுக்கு. பின்பு அவளே, சே, இதென்ன பைத்தியக்கார நினைப்பு என்று நினைவை நிஜங்களின் மீது திருப்ப முயன்றாள்.

வீட்டுக்கு வந்ததும் ஏதாவது பெரிய கண்ணாடி சாமானைப் பார்த்துக் கீழே எறிந்து நொறுக்க வேண்டும் போலிருந்தது.

பேசாமல் போய்ப் படுத்துக்கொண்டாள்.

இவள் வந்தது தெரிந்ததும் பொன்னுத்தாய் மேலேறி வந்து ஏதோ கேட்க முனைந்தாள்.

"அம்மா...."

"பொன்னுத் தாயி இன்னிக்கு ஒனக்கு லீவு போ."

"ஏம்மா?"

"கேக்காதே. போ."

"சரிம்மா."

"சரிம்மானா? உடனே போகணும்."

அதற்கு மேல் வியக்க முடியாத பொன்னுத்தாய், 'அடுப்புல சாம்பார்....' என்று முடிப்பதற்குள் இவள் வெடுக்கென எழுந்து "அது அடுப்போட போகட்டும் நீ போ" என்று கத்தினாள்.

சரி, விபரீதம் முழுசாகிவிட்டது என்று தீர்மானித்துக் கொண்ட பொன்னுத்தாயி இறங்கிக் கீழே வந்தாள். முதலில் நாகப்பன் போலீஸ்காரரிடம் சொல்லி, ஐயாவை வரச் சொல்ல வேண்டும். நாகப்பனுக்கும் இவளுக்கும் ஒரே தெரு. அவனது சிபாரிசுதான் இந்த வேலை.


அந்த நிமிஷத்திலிருந்து சுலோசனா ஒரு நொடியை ஒரு யுகமாக்கிக் கொண்டு எந்த நிமிஷமும் சீறி வருகிற கணவனை எதிர்பார்த்தாள். நாகப்பன் போய் விஷயத்தைச் சொன்னதும் அவன் எப்படி வருவான்? வந்ததும் என்ன கேட்பான்? ஒருவேளை வந்ததும் கழுத்தை நெரிக்க ஆரம்பித்து விடுவானோ? செய்தாலும் செய்யலாம். மூன்று பச்சை அயோக்கியர்கள் சேர்ந்திருக்கிறார்களே!

(தொடரும்)



மாலை சூட்டி மகளுக்கு
மண வாழ்த்தொலிக்க ஓலை தீட்ட வாரீர்
உங்கள் தவம் பலிக்க...
வாழ்நாள் கனவுகள் பலிக்க...
வாச மல்லிகை வீசிட,
வாழைகட்டி உங்கள்
வாசலில் கொட்டுமேளம் வாசிக்க...
ஆசைச் செல்விக்கு இல்லற வாசல்
திறக்க...
வருகுதே நாளும் கோளும், வருகுதே
வரன் --
கல்விமானும், கைநிறைவாய் நல்வருவாய்
காண்பவனும், நற்குடி மகனும்,
பெற்ற தாய்தந்தைக்கு
இணையாய்ப் பெண் மீது
பேரன்பு பொழிபவனும்...
எப்படி எங்கு தேடுவீர் அப்படி ஒருவரை ?
ஏடு விரித்து அழைக்கின்றோம்
தேடிக்கொள்வீர் -- தேர்ந்த வரன் ;
குலமும் கோத்திரமும்
உயர் குடும்ப நிலையும்,
படிப்பும் பணமும் பண்பும் ஏற்றமுறப்
பொருந்துமாறு --
எடுத்த எடுப்பில் கிட்டும் --
பல்லாயிரம் குடும்பங்கள் ஆதரித்த
பாதையிலே, உங்கள் செல்விக்கு --
மனம்போல் மாங்கல்யம் ...
உளம்போல் தேர்ந்தெடுப்பீர்,
விளம்பர மேடை இதோ
THE TIMES OF INDIA
THE MATRIMONIAL COLUMNS
BOMBAY • DELHI • AHMEDABAD
டைம்ஸ் ஆஃப் இந்தியா திருமணப்பத்திகள்
'காலங்கள்' எல்லாம் சுபம் சுபம் சுபம் !
SIMOES/BC/MAT/S/81





சவூதியில் நகைகளுக்கு பயமில்லை!

ஒரு பூசணிக்காயின் விலை ரூ. 40.00!

எங்கே? சவூதி அரேபியாவில்தான்! மூன்று ஆண்டுகளாக அங்கே வசிக்கும் திருமதி நிர்மலா ஜெயராமன் அந்த ஊரைப் பற்றிய சில சுவையான விஷயங்களைக் கூறினார்:

தேங்காய் விலை அதிகமாக இருப்பதால் பாலிதீன் கவரில் விற்கப்படும் துருவிய கொப்பரையைத்தான் அதிகமாக உபயோகப்படுத்துகிறார்களாம்.

பெண்களுக்கு மிகவும் மரியாதை கொடுக்கப்படுகிறது. ஒரு பெண் சாலையைக் கடக்கும்போது அத்தனை போக்குவரத்தும் அப்படியே நின்று வழி விடுகிறது.

எவ்வளவு வேண்டுமானாலும் நகை அணிந்துகொண்டு பெண்கள் தைரியமாகச் செல்லலாம். வீட்டிலும் வெளியேயும் திருட்டுப் பயம் என்பதே கிடையாது. முதல் காரணம் பயம். சாதாரணத் திருட்டுக்கு அவர்களுக்குக் கிடைக்கும் தண்டனை கடுமை. ஒரு கையை வெட்டுவது வெகு சகஜம், இரண்டாவது ஏழைமை இல்லை.

பெண்கள் தங்கள் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை மூடிக்கொண்டுதான் தெருவில் செல்ல வேண்டும். தலைமயிர் கவர்ச்சிப் பொருளாகக் கருதப்படுகிறது. தலையை மூடாமல் சென்றால் அபராதம் விதிக்கப்படுகிறது.

குழந்தைகள் பிறந்த நாளன்று வீட்டிற்கு வரும் அந்த நாட்டுப் பெண்கள் வாயில் அடித்துக் கொண்டு பெரியதாகக் கூச்சல் போடுகிறார்கள். குழந்தைக்குத் திருஷ்டி பரிகாரமாம் அது.

ஒரு வீடியோ டேப்பின் வாடகை சுமார் 30 ரியால். அதாவது ரூபாய் எழுபத்தைந்து. நான்கு அல்லது ஐந்து குடும்பங்கள் ஒரு டேப் வாங்கிப் பார்த்துவிட்டுக் கொடுத்து விடலாம். யார் வீட்டில் வீடியோ போடப்படுகிறதோ அவர்கள் வீட்டில் அன்று எல்லோருக்கும் டின்னர்.

டி. வி.யில் பத்து சானல்களுக்கு மேல் இருக்கிறது. இந்திப் படங்கள் வாரத்துக்கு இரண்டு மூன்று பார்க்கலாம்.

இந்தியாவிலிருந்து வரும் வார மற்றும் மாதப் பத்திரிகைகளில் ஆபாசமான படங்கள் இருந்தால் அந்தப் பக்கம் கிழிக்கப்பட்டிருக்கும் அல்லது வயிறு முதுகு தெரியும்படி வரையப்பட்டிருக்கும் பெண்கள் படத்தில் (ஜெயராஜ் கவனிக்க) கறுப்பு மை பூசப்பட்டிருக்கும்.

வியாழன் வெள்ளி இரண்டு நாட்கள் வாராந்திர விடுமுறை.

-கலாமூர்த்தி



"அன்னை பராசக்தி "அங்காள பரமேஸ்வரி தாயே துணை"

சேலம் சித்த வைத்தியர்

டாக்டர் S. R. சிவராஜ்

அவர்களின் சாதனை

சிவராஜ் சித்த வைத்தியசாலையில் தயாராகும் மருந்துகள், பிணிகளை நீக்கவும், புத்துயிரளிக்கவும் பெரிதும் உதவுகிறது

○ குழந்தை பாக்கியம் (கெர்ப்பணுக்கள்) இல்லாதவர்கள், ○ ஆண்மை வீரியம் இல்லாமல் பலஹீனமடைந்தவர்கள், ○ வாலிபத்தை வீணாக்கி, சக்தி இழந்தவர்கள், பயமுள்ளவர்கள் ○ கல்யாணம் செய்யப் பயந்து காலம் கடத்தி வருபவர்கள், ○ அதிக உஷ்ணம் — கண் எரிச்சல் — தூக்கமின்மை — உடல் வலி, ○ நரம்புத் தளர்ச்சி — உடலுறுப்புக்கள் தளர்ச்சி — நடுக்கம், ○ மற்றும் உங்கள் ரகசிய வியாதிகளுக்கும்

நாள்பட்ட ஆஸ்துமா — இளைப்பு — இருமல் — தும்மல் — மூக்கடைப்பு — பீனிசம் — சயினோபிலியா — இருதய வலி — படபடப்பு — அன்னை விலாவைத் தூக்கி தூக்கி மூச்சு வாங்குதல் — கோழை கட்டு, டனி, மோடம், மழை காலங்களில் ஏற்படும் இளைப்பு — கர் மூர்ரென்று மேல் மூச்சு போன்ற கப வியாதி பித்தத்தினாலும், வாய்வுனாலும் ஏற்படும் மலச்சிக்கல் — மலக்கட்டு, வயிற்றுவலி — குடல் புண் — பித்த மயக்கம் — தலைவலி — தலைபாரம் நாள்பட்ட ஒரு தலைவலி — கண் பார்வையில் பூச்சு பறப்பது போலிருத்தல் பசியின்மை — பொருமல் — வயிருப்புசம் — காமாலை — சோகை — இரத்தக்குறைவு மேகத்தினாலும் — தொத்து வியாதியினாலும், விஷப்பூச்சிகள் கடியினாலும் ஏற்படும் சரும நோய்கள் — படை, ஊ்—ஊரல் — அரிப்பு — கருநிற, செந்நிற படைகள் — செதில்களாக உதிரும் கிரந்தி படைகள் — வெண் மேகம், பாதவெடிப்பு — பனி வெடிப்பு முதலான நோய்கள். பெண்களுக்கு ஏற்படும் சகலவித நோய்கள். மேலே குறிப்பிட்ட வியாதியஸ்தர்கள் எமது பிரதம டாக்டரை

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇ கீழ்க்கண்ட இடங்களில் ◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇ சென்னையில்

சந்தித்து வைத்திய ஆலோசனை பெறலாம்

கீழ்க்கண்ட தங்குமிடங்களில் எமது கிளை அலுவலகத்தில் எமது மருந்துகள் கிடைக்கும்

கிளை வைத்தியசாலை

சென்னை - 1

தேதிகள் : 1 முதல் 3 தேதி வரை

பிரதம வைத்தியர்

ஹோட்டல் ரோலக்ஸ் ரூம் நெ. 5ல்

போன் : 24236

(190 NSC போஸ் ரோடு (சைனா பஜார்)
(பூக்கடை — டெலிபோன் ஆபீஸ் எதிரில்)
சென்னை - 1

பார்க்கும் நேரம்: காலை 8 மணி to இரவு 8 மணி

கிளை வைத்தியசாலை

சென்னை - 2

தேதிகள் 4ந்தேதி முதல் 8ந்தேதி வரை

பிரதம வைத்தியர்

ராமச்சந்திரா லாட்ஜ் ரூம் நெ. 3ல்

போன் : 846526

7, அத்திப்பட்டன் தெரு மவுண்ட் ரோடு
PORR & சன்ஸ் — பெட்ரோல் பங்க்
மேற்குபுரம், சென்னை - 2

காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை

ஆலோசனை கட்டணம் ரூ. 10-00 ※ சிகிச்சைக் கட்டணம் தனி

எமது கேட்லாக் வேண்டுவோர் ரூ. 1-00 ஸ்டாம்ப் அனுப்பினால் M.O. செய்தோ பெறலாம்

எமது உயர்ந்த — விசேஷ — ஸ்பெஷல் மருந்துகள் கிடைக்கும்

உயர்ந்தரக சிகிச்சை 1 மாதம் ★ விசேஷ சிகிச்சை 1 மாதம் ★ ஸ்பெஷல் சிகிச்சை 1 மாதம்

A வகுப்பு	B வகுப்பு	C வகுப்பு	A வகுப்பு	B வகுப்பு	C வகுப்பு	மீடியம்	ஸ்பெஷல்	1 நெம்பர்
1500-00	750-00	500-00	400-00	300-00	200-00	175 00	150-00	115-00

ஹெட்டாபீசுக்கு லெட்டர் எழுதி V.P.P. மூலமும் பெறலாம். தேவையான சிகிச்சைக்கு டிராப்ட் மூலம் (பேங்க் ஆப் இந்தியா) வாங்கி அனுப்பினால் ரிஜிஸ்டர் பார்சல் மூலம் பெறலாம். டாக்டர் **S. R. சிவராஜ்** ஹெட்டாபீஸில் 11, 16, 17, 18, 19, 20, 27, 28, 29, 30 தேதிகள் வரை சந்திக்கலாம். மற்ற நாட்களில் வெளியூரில் இருப்பார்.

H.O. சிவராஜ் சித்த வைத்தியசாலை

சென்ட்ரல் டாக்கீஸ் வடபுரமுள்ள ஏரியில் **சேலம் — 636007**


. வேலையில்லாப் பட்டதாரிகள் தாங்கள் படித்த துறைபற்றிச் சுருக்கமான கட்டுரை எழுதினால் பரிசீலித்துச் சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்து வெளியிடுவதாக அறிவித்திருந்தோம். ஏராளமாக வந்து குவிந்த கட்டுரைகளுள் 21 கட்டுரைகளைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். வாரம் ஒன்றாகப் பிரசுரமாகும். இதைப் படிப்பவர்கள் இந்தக் கட்டுரையாளருக்கு உதவ விரும்பினால் அவருடன் நேரடியாகத் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

-ஆசிரியர்

சுவடிகளைப்பற்றிச் சுவை-யாகச் சில!

சுவடிகளில் முதலில் அரசுக் கணக்குகளும் அரசுக் குடும்பச் செய்திகளும் எழுதப்பட்டு வந்தன. பின்னர் சமயம் தத்துவம் முதலியன இடம் பெற்றன. பின்பு மருத்துவம், சோதிடம் மற்றும் வாழ்வு இயல் துறைகள் அனைத்தும் இடம் பெற்று இருக்கின்றன.

சுவடிகள் பனை ஓலையில் எழுத்தாணி கொண்டு எழுதப்பட்டு வந்தன. நன்கு பாதுகாக்கப்பட்ட சுவடிகள் சுமார் 100 ஆண்டுகள் இருக்கும். நம் முன்னோர்கள் இடை இடையே மூலத்தைக் கொண்டு படி யெடுத்துச் சுவடிகள் அழியாமல் பாதுகாத்து வந்தனர். எனினும் இயற்கைப் பிறழ்வுகளால் ஏராளமான சுவடிகள் மறைந்தன. சமயப் போட்டியின் காரணமாக நிகழ்ந்த அனல்வாதம், புனல்வாதம் போன்றவற்றால் சில ஆயிரம் அழிந்தன. அறியாமை காரணமாகப் பதினெட்டாம் பெருக்கு, மாசி மகம், கலைமகள் விழா, கார்த்திகை தீபம் போன்ற காலங்களிலும் சுவடிகளை நீரிலும் நெருப்பிலும் இட்டதால் சில ஆயிரம் சுவடிகள் அழிந்தன. கரையான் மற்றும் பூச்சிகளினால் சில அழிந்தன. இவற்றில் எல்லாம் தப்பி நம்மிடம் இன்றைக்குக் காணப்படும் சுவடிகள் மிகச் சிலவே.





பெயர் : வே. சதாசிவம்

வயது : 27

முகவரி : B. 4, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக் குடியிருப்பு
ஏ. பி. பத்ரோ சாலை
கருணாநிதி நகர் சென்னை-78

கல்வித் தகுதிகள் :
1. பி.எஸ்.சி
2. பி.எட்.,
3. சுவடியியல்-சான்றிதழ்-முதல்வகுப்பு
4. தட்டெழுத்து - ஆங்கிலம் - கீழ்நிலை

இந்தச் சுவடிகளைப் பாதுகாக்கவும், முறைப் படி படியெடுக்கவும், சுவடிகளைப் பதிப்பதன் மூலம் அறிமுகப்படுத்தவும், அரசாங்கத்தால் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சுவடி இயல் தொடங்கப்பட்டது. தமிழ் மொழியினை முதல் மொழியாகக் கொண்ட பட்டதாரிகளும், புலவர் பட்டம் பெற்றோரும் இவ்வகுப்பில் சேரத் தகுதியுடையவர்.

ஓலைச் சுவடிகளில் காணப்படும் பாடல்கள் எல்லாம் சந்தியோ, வரியோ பிரித்து எழுதப் பட்டு இருக்காது. உரைநடை போல் தொடர்ச்சியாக இருக்கும். அவற்றைப் பாடல்களின் பா வகை இலக்கணத்துக் கேற்ப, வரியும் சந்தியும் பிரித்திடல் வேண்டும். மெய் எழுத்துக்களின் மேல் புள்ளி இடும் வழக்கமில்லை. புள்ளி இட்டால் ஓலை கிழிந்துவிடும். குறில் நெடில் வேறுபாடும் காணப்படாது. இவ்வாறு சுவடிகளின் எழுத்து முறைகளை அறிந்த பின் இதுவரையில் பதிப்பிக்கப்பெறாத ஒரு சுவடியைப் பதிப்புக்குக் கொண்டு வருதல் இவ்வகுப்பின் செயல்முறைத் திட்டமாகும்.

தஞ்சாவூர் சரஸ்வதி மஹால், சென்னை அரசினர் கீழ்த் திசை சுவடிகள் நூலகம், திருவான்மியூர் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் நூலகம் ஆகிய இடங்களில் பெருவாரியான சுவடிகளை நவீனமுறையில் பாதுகாத்து அவற்றைப் படியெடுக்க வேண்டிய உதவிகளைச் செய்து தருகிறார்கள். சென்னைக் கீழ்த் திசைச் சுவடிகள் நூலகத்தில் மொத்தம் 65000 பல்வேறு மொழிச் சுவடிகள் உள்ளன. இவற்றில் தமிழ் ஓலைச் சுவடிகளின் எண்ணிக்கை 14,000.

-வே. சதாசிவம்

டயலாக்: அகஸ்தியன்

சர்க்கஸ்



"டேய் கோபாலு... சந்துரு... ஜோதி... வாங்க – இந்தப் பக்கமா உட்காந்தா நேரா தெரியும்."

"ஐயோ இங்கே கம்பம் மறைக்குதே... என்னய்யா பாடாவதி காலரி..: பலகையெல்லாம் உடைஞ்சு கிடக்குறது. அங்கே உட்கார்ந்தா இங்கே தூக்குது."

"பாண்டுக்காரங்க வந்துட்டாங்க அதோ மேலே பாருடா... ஆரம்பிச்சுடுவாங்க."

"நயினா... சோடா... தாகமா இருக்கு."

"குடுத்தேனு பார்... உள்ற வந்து உடனே தாகம் எடுக்கும். பசி எடுக்கும்."

"யாரு சார்... எங்கே மெறிச்சுக்கிட்டு மேலே போறீங்க? மேலே புல்லாயிடவே தான் நாங்க இங்கே குந்திக்கிட்டு இருக்கோம்."

."மல்லிகா மேலே பாருடி.... டெண்ட் உச்சியிலே ஒரு ஆள் உக்காந்துக்கிட்டு இருக்கான். இவன் கையிலே ரிவால்வர் இருக்கும். சிங்கம்இங்கம்ஏதாவது பாஞ்சால் டபால்னு சுட்டுப்புடுவான்."

"ஆமாண்டி ஒரு சமயம் ஒரு புலி கூண்டை விட்டு வெளியே வந்து நூறு பேரைச் சாப்பிட்டுடுத்தாம்:"

"கதை வுடாதேடி.."

"இல்லேடி.... எங்கப்பா சொன்னாருடி.."

"முறுக்கு....முறுக்கு... சார். கொஞ்சம் காலே எடுத்துக்குங்க...."

"பாருய்யா... ஒரே கையிலே எவ்வளவு முறுக்கை அடுக்கிக்கிட்டுப் போறாரு... இவரு சர்க்கஸ்லே இருக்க வேண்டியவரு."

"என்னடா... கூண்டை முதல்லேயே போட்டு வெச்சிருக்காங்க... சிங்கம், புலி வித்தையா இருக்கும்."

"பின்னே என்ன... இந்தக் கூண்டைப் போட்டு மாட்டறதும்னு நம்பளைப் போல ஒத்தவங்களுக்கு அரை அவரு ஆகும். இவங்க பத்து நிமிஷத்திலே கோத்துடுவாங்க... அதே மாதிரிதான் பார் வேலைக்கும் ஏழே வலை கட்டறதும்..."

"இவ்னோ ஆளுங்களை ஊர் ஊராக அழைச்சுக்கிட்டுப் போய், டென்டைப் போட்டு வித்தை காட்டறதுன்னு சாதாரண காரியம் இல்லேங்க."

"அதெல்லாம் ஒண்ணுமில்லீங்க. எல்லாம் பழக்கம். யாருக்கு எப்போ இன்னு வேலைன்னு



தெரியும். அதையே செஞ்சு செஞ்சு 'ராப்தா' ஆயிடும்!''

''புலி என்னு உறுமுது பாத்தியா... ரிங் மாஸ்டர் இருக்காரே கையிலே மேக்னட் வெச்சிருப்பாரு. அதனுல்தான் அது பயந்து வேலை செய்யுது.''

''போப்பா... மாக்னெட் இரும்பைத் தான் இழுக்கும். புலியையா இழுக்கும்?''

''டேய் டேய்... நாயைப் பாருடா.''

''எங்கேடா நாய்... கரடிதானே சைகோல் உடுது.''

''அங்கே இல்லேடா. இங்க காலரிக்குக் கீழே.''

''அடி....அடி... அதோ பாரேன், கடைசியிலே ஒரு குட்டிக் குரங்கு சைக்கிள் வுடுது.''

''எப்படி இதுக்குச் சைக்கிள் விடக் கத்துக் குடுப்பாங்க... முதல்லே மங்கி பெடல் அடிச்சுட்டுத்தான் சீட் மேலே குந்துமா?''

''மனுஷன்தான் மங்கி பெடல் பண்ணுவான். மங்கி மனுஷன் பெடல் பண்ணும்.''

''ஆமாம்... இந்த லேடீஸ் இவ்வள ஆண்டு ஜட்டி, பிரா போட்டுக்கிட்டு வர்ரூங்களே கூச்சமா இருக்காதா?''

''பொழைப்புத்தான். பாதிப் பேர் இங்கேயே ஒருத்தரை ஒருத்தர் கட்டிப்பாங்க... அதோ பாருடா... எம்மாம் குள்ள பபூன்... குழந்தை மாதிரி தூக்கிக்கிட்டு வர்ரூங்க.''

''துரைலிங்கம் ஒண்ணு தெரிஞ்சுக்க.... பபூனுக்குத் தெரியாத வித்தையே கிடையாது.''

''யம்மாடி... யசோதா பார்த்தியா... அந்தக் குட்டி உடம்பை என்னமா வளைக்குது... எங்க வூட்டுக்காரு சொல்வாரு. சின்னக் குழந்தையிலேயே முதுகுத் தண்டை வளைச்சு வுட்டுடுவாங்களாம்.''

''அது வளையறதைப் பார்த்தா நமக்கு மூச்சு வாங்குது. மாடிப் படி ஏறி இறங்கினு உடம்பு இளைக்கும்னு இரண்டு நாள் ஏறினேன். நம்மாலே முடியலே.''

''ஒன் திங் ராஜன். சர்க்கஸை நாம் என்ஜாய் பண்றோம். அப்ரிஷியேட் பண்றோம். ஓ.கே. பட், இந்த கேர்ள்ஸ் அண்ட் பாய்ஸைப் பத்தி யார் திங்க் பண்றோம்? அவங்களுக்குப் படிப்பு, எஜுகேஷன் எதுவும் கிடையாது. கை கால் உடைஞ்சால் பொழைப்பும் கிடையாது. ஐ பிட்டி தெம்... ஏம்பா, கூல் ட்ரிங்க் இரண்டு கொடு.''

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

தந்தை: தேர்வு முறையில் ஏதாவது சீர்திருத்தம் பண்ணி இருக்காங்களா?

நண்பர்: என்ன? அக்கறையா கேட்கிறீங்க..

தந்தை: இந்த வருஷம் என் மகன் பாஸாகிட்டான். அதான் கேட்டேன்!

- கணேஷ்

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

"லலித், இன்னிக்குச் சாயந்திரம் என் ஃப்ரண்ட் நம்ம வீட்டுக்கு வரப்போகிறான். விருந்து பலமாக இருக்கட்டும். உன் ஸ்பெஷாலிட்டியைக் காட்டு" என்று போனில் சுந்தர் சொன்னான்.

மலபார் அவியல் அவளுடைய தனி ஸ்பெஷாலிட்டி!

"நீ அவியல் பண்ணுவதானால் உன் வீட்டில் சாப்பிட வருவேன்" என்று குமார் எத்தனை தடவைகள் அடம் பண்ணியிருக்கிறான்!

அலுவலகத்தில் லஞ்ச் டயத்தில் ஒரு நாள் அவள் தனது சிற்றுண்டியைப் பகிர்ந்து கொள்ளப் போக...

"யார் செய்தது லலித்? நீயா, உன் அம்மாவா?" என்று நாக்கைச் சப்புக் கொட்டிக் கொண்டு கேட்க—

"எனக்கு அம்மா இல்லை. சமையல் நான்தான்" என்று கண்களைத் தாழ்த்திக் கொண்டு சொன்னாள்.

அன்பு என்ற ஒன்று தேவையான நெஞ்சின் சிறு தவிப்புக்களைப் புரிந்துகொண்டான் குமார். கொடுக்கவும், எடுக்கவும் தயங்காத குணம். அவளுடைய சிறு சிறு பிடிவாதங்களை, ஊடல்களை ரசிக்கும் தன்மை அவனுக்கு இருந்தது.

"ஒரு நாள் உங்கப்பாவைப் பார்க்க வரப் போகிறேன்" என்றான் திடீர் என்று.

அவள் கண்கள் பயத்தில் மின்னின.

"எதற்காக?"

"எதற்காக என்று சொல்வேன் பார்க்களாம்?" என்று சீண்டினான் மெல்ல.



அடுத்த வீட்டு

அவன் தெளிக்கும் செண்டின் வாசனையை அவள் அறியாதவளா? "எனக்குத் தெரியும்"

—இப்படித் தங்களைத் தாங்களே புரிந்து கொண்டபொழுதுதான் அவன் திடீர் என்று மாற்றலில் திருநெல்வேலிப் பக்கம் போனான்.

"வந்து உன் அப்பாவிடம் பேசிக்கொள்கிறேன்" என்று கூறிவிட்டுப் போனான்.

புதுக் கிளையின் பொறுப்புக்களைச் சுமக்கும் சுமையில் ஆறு மாதங்கள் வர முடியவில்லை. நெஞ்சைத் தொடும் வகையில் தன் ஆசைகளைத் தோய்த்துத் தோய்த்து எத்தனை கடிதங்களை எழுதினான்! திடீர் என்று ஒரு நாள் வந்து நின்றான்.

"நான் வேறு கம்பெனிக்குப் போகப் போகிறேன். போனதும் ஜெர்மனி போக வேண்டியிருக்கும். உன் அப்பாவிடம் நேரில் கேட்டுவிடலாம் என்று ஓடி வந்து விட்டேன் லலித்."

"ஐயையோ, அப்பா நாக்பூர் போயிருக்கிறார். சமீபத்தில் என் அக்காவின் கணவர் போய்விட்டார். இந்தச் சமயத்தில் எப்படிக் கல்யாணப் பேச்சை எடுப்பார்கள்?" என்று லேசான துயரம் நெஞ்சைக் கவ்வக் கூறினாள்.

அவன் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு போனான். அதிருப்தி ஊசலாட ஜெர்மனி போகு முன் ஒரு கடிதம் எழுதினான். அதில், 'எனக்காகக் காத்திரு லலித்' என்று எழுதினான். அதற்குப் பிறகு அவனிடமிருந்து கடிதம் வரவில்லை.

அவள் தந்தைக்குக் கண்டிப்பும் முன் கோபமும் அதிகம். நாக்பூரிலிருந்து வரும் பொழுதே சுந்தரின் ஜாதகத்துடனும், நிச்சயதார்த்தத்துடனும்தான் வந்தார். அவள் ஊமையாகிப் போனாள். கனவுகள் கண்களில் ஊர்வலம் வந்த தடங்களை அழித்து விட முயன்றாள். அந்த முயற்சி...

"லலித், மீட் மை ஃப்ரண்ட் குமார்."

'ஓ...குமார்! இவன் இவருக்கு நண்பனா?' கையைக் குவித்தபடி சமையலறைக்குள் மறைந்தாள்.

அந்த அதிர்ச்சி அவனுடைய மனத்திலும் பட்டிருக்க வேண்டும். சற்று நேரம் வரை குரலில் கரகரப்பும், சன்னமுமாகப் பேசி

~ லட்சுமி ராஜரத்னம் ~



ரோஜாக்கள்

னான். பரிமாறும்பொழுது கூட அவள் அவன் முகத்தைப் பார்க்கவில்லை.

''லலித் பண்ற அவியலைச் சாப்பிட்டால் தினமும் நீ இங்கேதான் சாப்பிட வருவே.''

அவள் சமையல் அறையில் நின்றாள். மெல்ல அவன் இலையைப் பார்த்தாள். அவியல் அவனுக்குப் பாகற்காயாக மாறி இருப்பது புரிந்தது.

''என்னடா? அவியலை நீ தொடவே இல்லை?''

''காசிக்குப் போனபொழுது அவியலை விட்டு விட்டேன்''--சிரிப்பில் இருந்த வேதனை அவளுக்குப் புரிந்தது.

அவன் இந்த ஊரில்தான் இருக்கிறான் என்பதைப் புரிந்து கொண்ட லலித் தவித்துப் போனாள். தன்னைப் பற்றி – தன் கடிதங்களைப் பற்றி ஏதாவது சுந்தரிடம் கூறி விடுவானோ?

ஒரு நாள் இரவுச் சாப்பாட்டுக்குப் பிறகு சுந்தர் சொன்னான்: ''லலித், இன்னிக்குக் குமார் அலுவலகம் வந்தான். கல்யாண இன்விடேஷன் கொடுத்தான்.''

அவன் கொடுத்த அழைப்பிதழைப் பார்த்தாள். முகவரியில் முத்து முத்தான எழுத்தில் அவள் பெயரும் எழுதப்பட்டிருந்தது. இனிமேல் தனக்குப் பயம் இருக்காது என்று சிறிய சமாதானம் ஏற்பட்டது.

''உனக்கு ஒரு கம்பெனி கிடைத்து விட்டது'' என்று சுந்தர் அழைப்பிதழை வாங்கி வைத்துக் கொண்டான்.

''ஓ.... இந்த ஓவியமும் நீங்கள் வரைந்ததுதானா?'' என்று சுந்தர் குமாரின் மனைவியிடம் கேட்டான்.

''ஆமாம்... இதைப் பாருங்க'' என்று மற்றொன்றை நீட்டியவள், உள்ளே போய்ப் பலகாரங்களை ஒரு தட்டில் வைத்துக்கொண்டு வந்தாள். ''இதுவும் நான் செய்ததுதான்.''

அவன் நெஞ்சில் இனந் தெரியாத ஓர் எரிச்சல். யார்மீது? லலித் மீதா? குமார் வந்தால் இப்படி இன்முகம் காட்டிப் பேசியது கூட இல்லை. எல்லாவற்றையும்விட எவ்வளவு கெட்டிக்காரியாக இருக்கிறாள்?

சுந்தர் இப்பொழுதெல்லாம் அடிக்கடி குமார் வீட்டுக்குப் போய் வரத் தொடங்

கிறான். குமார் அடிக்கடி வெளியூர் போய் விடுவான். ''சுந்தர், நீயோ, உன் மனைவியோ அடிக்கடி வந்து நளினியைக் கவனித்துக் கொள்ளுங்கள்'' என்று வேறு சொல்லி விட்டான்.

வேறு என்ன காரணங்கள் வேண்டும்? இலக்கியம் பற்றி, இந்துஸ்தானிப் பாட்டு பற்றி என்று ஓடும் பேச்சுக்கள். இவளுக்கு இன்னும் என்னென்ன தெரியும் என்ற அலசலில் தன்னை இழந்து வரும் சுகம் அவனுக்குத் தெரிந்துதானிருந்தது. இது தப்பில்லையா?

ஸ்கூட்டரின் பின்னால் உட்கார்ந்து வந்த லலித் இன்னும் தன் கேவலை நிறுத்தவில்லை.

''இன்னுமா அழுது கொண்டிருக்கிறீர்கள் மிஸஸ் சுந்தர்?'' என்று கேட்டான் குமார்.

''தக்க சமயத்தில் வந்து அந்தக் குடிகாரனிடமிருந்து என்னைக் காப்பாற்றினீர்கள். ரொம்ப நன்றி.''

''உங்களை எங்கள் வீட்டில் கொண்டு விடுகிறேன். சுந்தருக்குப் போன் பண்ணுகிறேன். வந்து அழைத்துக் கொண்டு போகட்டும்'' என்றான்.

''என்னை மரியாதையாகக் கூப்பிட வேண்டியது அவசியமா?''

''நண்பனின் மனைவி அல்லவா?''

''குத்திக் காட்டாதீர்கள். என்னால் காத்திருக்க முடியவில்லை'' என்றாள் கெஞ்சும் குரலில்.

''தட்ஸ் ஆல் ரைட். நான் எதுவும் கேட்கவில்லையே.'' என்றான் குமார்.

''அந்தக் கடிதங்களைக் காட்டி என் வாழ்வை......''

''வாட் நான்சென்ஸ் யூ ஆர் டாக்கிங். நீ என் மனைவி இல்லை. ஆனால் என் காதலி. அந்தப் பதவியில் என்னிக்குமே நீதான் இருப்பே புரிஞ்சுதா. அதோட தொடர்ச்சியான மனைவி என்ற உரிமையில் என்றுமே நான் நெருங்க மாட்டேன். முடிஞ்சு போன கதையைத் தொடர நான் முட்டாள் இல்லை. நீ சுந்தருக்கு உரியவள்; மறக்கமாட்டேன்.''

காரம்போர்டில் உள்ள காயின்களை அடிக்கும் மெல்லிய விரல்களையே பார்த்தான் சுந்தர்.

''தேங்காய் வியாபாரம் செஞ்சிட்டிருந்த நீங்க அதை விட்டுட்டு ஏன் தேங்காய் எண்ணெய் வியாபாரம் தொடங்கிட்டீங்க?''

''தேங்காய் வியாபாரத்திலே கலப்படத்திற்கு எந்த வழியும் இல்லீங்களே!'' -கே.ஆர்.எம்.



''கொஞ்சம் இருங்க. வேற ரெக்கார்டைப் போட்டுட்டு வரேன்.'' நளினியின் துவளும் இடையையே பார்த்தான்.

இவள் மேல் வைத்திருக்கும் தன் மனத்தைப் பற்றி இவளிடம் சொல்லலாமா? எப்படிச் சொல்வது? போர்டில் வைக்கும் கரத்தைப் பிடித்துத் தன் கரத்தில் சிறைப்படுத்திக் கொண்டு... மெல்லச் சிரிக்கும் அதரங்களின் அழகில் மனத்தை லயிக்க விட்டு ''உன்னை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு'' என்று இரகசிய முணுமுணுப்பாக அவள் இதயப் பெட்டகத்தைத் திறக்கலாமா?

''என்ன கனவு உலகத்தில் மூழ்கிவிட்டீர்கள்? ஒலிபிலா போட்டிருக்கிறேன். அருமையான மியூஸிக்.''

''நான்... நான்...'' சொல்லிவிடலாமா ''நளினி.... வந்து....''

ஸ்கூட்டர் நிற்கும் சப்தம். நளினி எழுந்து ஓடினாள் கதவைத் திறக்க. சே! பூசை வேளையில் கரடி போல்...குமார் தான் கதவைத் தட்டியவன். லலித் பின் தொடர வந்தான்.

''நீ எங்கே லலித்?'' குமாரின் ஸ்கூட்டர் பின்னாலா உட்கார்ந்து வந்திருக்கிறான்? எரிச்சல் மூளை விட்டது கண்களில். அந்த எரிச்சல் பொங்கப் பார்த்தான்.

சோபாவில் அமர்ந்து ஷூவைக் கழற்றிய குமார், ''அதை ஏன்டா கேட்கிறே? சொல்றேன்'' என்றவன், நளினி நீட்டிய தண்ணீரைக் குடித்தான்.

''உன்னைப் பார்க்க ஆபீஸ் போனேன். நீ இல்லை. சரின்னு வீட்டுக்கு வந்தேன். இருட்டற வேளையா? ஒரு பழக்காரன் குடிச்சுட்டு உன் வீட்டு வாசலில் ரகளை பண்றான். குடி வெறியில் எந்த வீடு என்னன்னு அவனுக்குத் தெரியலே. எங்கோ போட்ட சண்டையை நினைச்சு உன் வீட்டுக் கதவைத் தட்டி இருக்கிறான். லலித் என்னன்னு புரியாம கதவைத் திறந்துட்டா. அவன் உன் வீட்டில் நுழைஞ்சுட்டான். லலித் ஏதோ சொல்ல அவனைத் துரத்த ஆரம்பிச்சுட்டான். நல்ல வேளை நான் போய்ச் சேர்ந்தேன்.''

நளினி நீட்டிய காப்பியை அவர்கள் வாங்கிக் கொண்டார்கள். ஓர் உறிஞ்சு உறிஞ்சிய குமார், ''நான் லலித்தை ஸ்கூட்டர்லே ஏத்திக் கூட்டிண்டு வந்துட்டேன். அவனை வெளியே தள்ளி அனுப்ப நான் பட்ட பாடு.. நீ போ, உன் தெருவே சொல்லும். நல்லகாலமா நீ இங்கே இருந்தே. இல்லேன்னு தேடிண்டு நான் சுத்தணும்'' என்று கூறி விட்டுத் தன் முகத்தைக் கழுவப் போனான்.

''என்ன சுந்தர் என்னவோ சொல்ல வந்தீங்களே?''

அவனுக்கு நளினியின் முகத்தைப் பார்க்கவே கூச்சமாக இருந்தது. மென்று விழுங்கினான்.

''என்னமோ சொல்ல வந்தேன். மறந்து போச்சு.''

அவன் உள்ளத்தில் நிம்மதி பிறந்தது. லலித் நளினியுடன் உள்ளே போனான். நீண்ட நாட்கள் கழித்து அவனும் மனம் விட்டு நளினியுடன் சிரித்தான்.

சமைக்க ஆரம்பிக்கு முன்னரே சமையல் முடிந்துவிட்டது!



பஜாஜ் ப்ரஷர் குக்கர் முற்றிலும் அதிகக் கட்டுறுதியான அமைப்புக் கொண்டது. எனவே உஷ்ணத்தை நிலை நிறுத்தி... உணவை விரைவாகச் சமைக்கிறது. அதோடு, அதனால் மிச்சமாகும் எரிபொருள் செலவால் ஒன்றரை வருடத்திலேயே அதன் விலையைத் திரும்பப் பெற்று விடுகிறீர்கள். விசேஷ வாயகல அமைப்பினால் அதிக இடவசதி எனவே உங்கள் பாத்திரங்களைக் கூட உபயோகிக்கலாம்.

பஜாஜ் ப்ரஷர் குக்கர்கள் பல சைஸ்களில் வருகின்றன. அனைத்தும் மிகக் கடுமையான ஐஎஸ்ஐ விதிகளின்படி உருவானவை. அதோடு பஜாஜின் உன்னத தரத்தின்படி படைக்கப் பட்டவை. இந்தியாவெங்கும் 3500க்கும் மேற்பட்ட விற்பனையாளர்களின் சீரிய விற்பனைக்குப் பின் சேவையை பக்கபலமாகக் கொண்டது. அப்ளையன்ஸ்களில் முடிசூடா மன்னராக பஜாஜ் விளங்கக் காரணம் வேறு வேண்டுமோ என்ன!

சிறந்ததையே பஜாஜ
வாங்குவீர் வாங்குவீர்

Hero's-BE-591 TAM



இந்த இதழின் அட்டைப் படம் வெறும் நகைச் சுவைக்காக மட்டும் வெளியிடப்படவில்லை என்று கருதுகிறேன். காலப் போக்கில் வரதட்சிணைக் கொடுமையினைச் சமாளிக்க நகைகளைத் திருட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்பதையே அந்தக் கேலிச் சித்திரம் எதிரொலிக்கிறது.
வீரபாண்டி — வதிலை அன்புச் செல்வன்

சோவின் தலையைப் போலவே மொட்டையாக 'சோ எழுதுகிறார்' என்று விளம்பரப்படுத்தி ஒரு வாரம் வரை எதைப் பற்றி இருக்கும் எனத் தலையைப் பிய்த்துக்கொள்ளச் செய்திருக்கிறீர்களே!
வியாசர் காலனி — மஞ்சுளா பாய்

சாருகேசியின் ''4 புதுக் கவிதைகள்'' அற்புதம். 4 பக்கங்களில் சொல்ல வேண்டியதை நறுக்கென்று ஐந்தாறு வரிகளில் சொல்லிவிட்ட அவருக்கு ஒரு வாழ்த்துப் பாவே பாட வேண்டும் போலிருக்கு.
மேட்டுப்பாளையம் — எம். பி. ரத்தினகுமார்

''காதல் கடிதங்கள்'' என் மனத்தை மிகவும் உலுக்கி விட்டது. ஆபீஸில் போய் வேலை பார்த்தாத்தான் வேலை செய்யறுங்கன்னு அர்த்தமா என்ன? என்று நளினி கூறுவது, கணேஷிடம் அவளுக்கு இருக்கும் ஆழமான காதலை வெளிப்படுத்துவதாய் அமைந்துள்ளது. நல்ல முடிவு. படைத்தவருக்கு என் பாராட்டுக்கள்.
பரசலூர் — புவனா நாகராஜன்

புள்ளிகள் செய்திகள் பகுதியில் திரு ஆர். சண்முகம் பிள்ளையைப் பற்றிய செய்தியினை வெளியிட்டமைக்கு நன்றி. அவர் திண்டுக்கல்லைச் சேர்ந்தவர் என்பதைக் குறிப்பிட மறந்துவிட்டீர்கள்.
திண்டுக்கல் — எஸ். ஜெயச்சந்திரன்

7–3–82 இதழில் பூமிக்கடியில் மின் நிலையம் என்ற தலைப்பில் மேற்கு ஜெர்மானிய மின்நிலையம் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். இதே முறைதான் நமது காடம்பாறை மின் திட்டத்தின் முக்கிய அம்சம். மின் உற்பத்திக்காகக்கீழே டர்பைனுக்குக் கொண்டு வரப்பட்ட தண்ணீரை மீண்டும் மலை மேல் உள்ள நீர்த்தேக்கத்துக்கு அதே டன்னல் குழாய் வழியாக இரவு நேரத்தில் பம்ப் செய்வார்கள். இரவு நேரத்தில் மின்சாரத் தேவை பகலைவிட மிகவும் குறைவு. ஆகையால் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தை இரவு நேரங்களில் இதற்குப் பயன்படுத்துவார்கள். பொள்ளாச்சி — வால்பாறை வழியில் நிறுவப்படும் இந்த மாதிரி திட்டம் இந்தியாவிலேயே முதன் முதலானது.
சென்னை-14 — ஜி.என். சுந்தரம்

கங்காரு பைக்குள் ஒரு குட்டி கங்காரு போல் கல்கி பத்திரிகைக்குள் ஒரு குட்டிப் பத்திரிகை! — ஆம்! திரைஞானி தரும் சினிமாப் பக்கங்களைத்தான் சொல்கிறேன்!— அட்டகாசமான 'லே-அவுட்'களில் ஜொலிக்கும் செய்திகளும் ஸ்டில்களும் புதுமை, அருமை.
அந்தணப்பேட்டை — வி. அன்பழகன்

'ரத்தி', 'எக் துஜே கேலியே' வெள்ளி விழாவுக்கு வரவில்லையானால் என்ன? வந்தால் என்ன? எங்களுக்கு 'அக்கா' ரத்தியின் அருமையான புகைப்படம் கிட்டிவிட்டதே! தாங்க்ஸ்!
கல்கத்தா-26 — கே.கே. பாலசுப்பிரமணியன்

கோவி மணிசேகரனுக்கு நா. மகாலிங்கம் எழுதியுள்ள பொக்கிஷக் கடிதத்தின் மூலம் அவர் ஒரு நல்ல வாசகர், இலக்கிய ரசிகர் என்பதும் நன்கு புரிகிறது.
வடலூர் — வெ. லட்சுமிநாராயணன்

அவர்: என்னப்பா இது! ஒரே கடிதாசிங்களாக் கொடுத்துப் படிக்கப் பார்க்கச் சொல்றே?
அவன்: எல்லாம் நான் கை மாத்து வாங்கினவங்க என் நாணயத்தை மெச்சிக் கொடுத்ததுங்க. ஒரு ஐம்பது ரூபாய் கை மாத்து வேணும்.
-கே. ஆர். எம்.




உங்கள் கேசம் அடர்த்தியின்றி
சக்தியின்றி இருக்கிறதா? உங்கள்
கேசத்தைப் பக்குவப்படுத்தி அழகையும்
ஆரோக்கியத்தையும் அளிக்கிறது...
EGG
Halo
SHAMPOO
செழுமையான புரதப்போஷாக்கு நிறைந்த
ஹேலோ எக் ஷாம்பூ
ஊட்டம் குறைந்த நிலையில் உங்கள் கேசம் அடர்த்தி
யின்றியும், சக்தியின்றியும், ஆரோக்கியமின்றியும்
காணப்படுகிறது.
பட்டுப்போன்ற, பொன் நிறமுள்ள வழவழப்பான
ஹேலோ எக் ஷாம்பூ செழுமையான புரத ஊட்டம்
நிறைந்த உத்தியின் மூலம் உங்கள் கேசத்தை சீராகப்
படியவைத்து அதற்குத் தேவையான எல்லா
ஊட்டங்களையும் அளிக்கிறது. உங்கள் கேசம் அழகாக
ஆரோக்கியமாக, அடர்த்தியாகத் திகழ்கிறது.
ஹேலோ எக் ஷாம்பூவின் செழுமையான நுரைவளம்
உங்கள் கேசத்தில் புகுந்து அதை பொலிவுடனும்
தூய்மையான பளபளப்புடனும் திகழச் செய்கிறது.
ஹேலோ எக் ஷாம்பூ...
அழகிய அடர்த்தியான ஆரோக்கியமான கேசத்திற்கு

HES. G. 4. TH

நம் நாட்டிலுள்ள சுமார் இருபது கோடி குழந்தைகளில் பதினாறு கோடி பள்ளிக்குச் செல்பவர்கள். இவர்கள் ஒவ்வொருவரும் மாதம் ஒரு ரூபாய் வீதம் சேமித்தால் கூட நாட்டின் சேமிப்பு ஆண்டுக்கு ரூ. 190/- கோடி அதிகமாகும்.

நம் நாட்டின் நலம் கருதியும், நமது குழந்தைகளுக்கு பிரகாசமான எதிர் காலம் அமைந்திடவும், இப்போதே அவர்களுக்கு சேமிக்கும் பழக்கத்தைக் கற்றுக் கொடுங்கள்.

லக்ஷ்மி விலாஸ் பாங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம்: கரூர்-639 001.
நிர்வாக அலுவலகம்:
சென்னை-600 086


என்.வி. ஸ்ரீநிவாசன்
சேர்மன்

என். முத்தியாலு
ஜெனரல் மானேஜர்

அன்னியச் செலாவணியில்
வர்த்தகம் செய்ய
அங்கீகாரம் பெற்ற வங்கி



இன்றே
லக்ஷ்மி விலாஸ் பாங்கில்
ஒரு சேமிப்புக்
கணக்கைத் துவக்கிடுவீர்.



மனிதர் யார்?

மனித உறுப்புக்கள் உடையவரெல்லாம் மனிதரா? இல்லை என்பது திருவள்ளுவர் விடை. 'உறுப்பு ஒத்தல் மக்கள்ஒப்பு அன்றால்'

மனிதர்களிலேயே நாய், நரி, பசு, சிங்கம் உண்டு!

நயவஞ்சகத்துக்கும் தந்திரத்துக்கும் பெயர் போனது நரி. உயரப் பறந்தாலும் இடை ரெனக் கீழே வந்து உயிர் போன பொருளை உண்பது பருந்து.

ஒரு கதை.

அக்ரஹாரம் ஒன்றில் ஒரு குழந்தை தவறி விட்டது. அந்தணர்கள் சுடுகாட்டுக்குக் கொண்டு சென்றனர். சுடுகாட்டை அடைந்ததும் அழுகின்ற அவர்களைப் பார்த்து ஒரு பருந்தும் ஒரு நரியும் பேசத் தொடங்கின.

பருந்து: ''பெரியோர்களே! ஏன் அழுகிறீர்கள்? பிறந்தவர் எல்லாம் இறப்பது தானே இயற்கை? நீங்கள் சுடுகாட்டில் நீண்ட நேரம் இருப்பதே தவறு. அழாமல் சீக்கிரம் போங்கள்!''

நரி: ''பெரியோர்களே இந்தக் குழந்தை உயிருடன் இருக்கும்பொழுது எவ்வளவு கொஞ்சினீர்கள்! இப்போது 'செத்தது' என்று தூக்கி எறிந்து விட்டுப் போகலாமா? சூரியன் இன்னும் மறையவில்லை! கொஞ்சம் இருந்து குழந்தை முகத்தை நன்றாகப் பார்த்துவிட்டுத்தான் போங்களேன்!''

பருந்து: ''அய்யோ! இந்தப் பத்திகெட்ட நரியின் பேச்சைக் கேட்கப் போகிறீர்களா? பெரியோர்களே! உலர்ந்த மரம் தளிர்க்குமா? உயிர் போன குழந்தை வருமா? சீக்கிரம் சுடுகாட்டை விட்டுப் போங்கள்!''

நரி: ''பெரியோர்களே! உங்களுக்கு இரக்கமே இல்லையா? ஒவ்வொரு பருவத்தில் உலகில் ஒவ்வொன்று தளிர்ப்பது போல், இப்பிள்ளையும் இன்னும் சிறிது நேரத்தில் உயிர் பெறலாமல்லவா? உங்களைக் கண்ட இரக்கத்திலேயே இந்த உண்மையை உரைக்கிறேன்.''

பருந்து: ''நான் இந்தக் காட்டிலே எத்தனையோ ஆண்டுகளாக இருக்கிறேன். இறந்



நரியும் பருந்தும்

இலக்கியத்தில் இறையுணர்வு

கீரன்

தவர் பிழைத்துப் பார்த்ததில்லை. நாம் அழுதால் அது செத்த பிள்ளை காதில் விழுமா? அட, பாசம் கொண்ட பெரியோர்களே! போங்கள்! போங்கள்!''

நரி: ''அட! எங்க போறீங்க பெரியவங்களே! பாருங்க! குழந்தையை நல்லா, பிழைக்கிற மாதிரி தெரியுது! இன்னும் தாமரை குவியலே; அல்லி மலரலே! மாலை முடிந்தால் இது பிழைக்கலாம்!''

பருந்து: ''ஆபத்து! பெரியோர்களே! பேய், பிசாசு வருவதற்குள் வீட்டுக்குச் செல்லுங்கள்!''

இங்ஙனம் பருந்தும் நரியும் போட்டி போட்டுக் கொண்டு அந்தணர்களிடம் பேசின.

அந்தணர்கள் இருவர் பேச்சையும் கேட்டு, ஒன்றும் புரியாமல் திகைத்தனர்.

பெரியோர்களிடம் இப்படிப் பரிந்து பேச நரிக்கும் பருந்துக்கும் என்ன கரிசனம்?

பகல் முடிவதற்குள் பருந்து ஆகாரம் சாப்பிட்டு ஆகவேண்டும். இருட்டிவிட்டால் கண் தெரியாதே! அதனால் அந்தணர்களைச் சீக்கிரம் அனுப்பிவிட்டுக் குழந்தையை உண்ணத்தான் அவ்வளவு கரிசனம்!

நரிக்கு? இரவு வந்து விட்டால் பருந்தின் தொந்தரவு இல்லாமல் தானே ஒரு கை பார்க்கலாம் என்றுதான்! அவ்வளவு பாசம் அதுக்கு!

மனிதர்களுக்கிடையிலும் இப்படிப்பட்ட வாதங்கள் இருக்கத்தான் செய்கின்றன!


சரி! பின்னர் கதை முடியும்போது கிடைக்கும் இறை நீதி என்ன?

இறைவன் தோன்றி, குழந்தையை உயிர்ப்பித்து, நரிக்கும் பருந்துக்கும் பசியாற வரமீந்தான்!

இந்த உலகில் அவரவர் தாம் தாம் சுகப்பட நினைப்பதே இயற்கை! ஆனால் இறைவன் விருப்பம் வேறு என்றாகிடும்.

''பகல்பொழுது அகல்முன் தனக்கு
இறைஆகப் பார்த்தது பருந்து:இருள் வந்தால்
அகப்படும்தனக்கு என்றெண்ணியது இகலன்;
அருமகவு உய்ந்திடும். பொருட்டால்
மிகப்படும் துயர்கொண்டு உழந்தனர்;
மறையோர் மேதினிமீதினில் தாம்தாம்
சுகப்பட நினைப்பார், எம்பெருமான்
தன்சூழ்ச்சி ஒன்றாய் முடிந்திடும்.''

தமிழில் மகாபாரதம் எழுதியவர்களில், அட்டாவதானம் அரங்கநாத கவிராயர் என்பவர் ஒருவர். பாரதத்தில் சாந்தி பருவத்தில் காங்கேயன் — அதாவது பீஷ்மர்— ராஜ தருமம் உரைத்த சருக்கத்தில் உள்ள கதை 'நரியும் பருந்தும்' என்பது. இது வில்லிபுத்தூரார் எழுதாது விட்ட பகுதிகளைக் கூறுவது.




"வேலையில் சுறுசுறுப்பு,
வாழ்வில் பரபரப்பு—
தெம்புமயமாக
வாழ்கிறேன். தெம்புக்குப்
பருகுகிறேன் விவா."
''செய்வன திருந்தச் செய்—இது என்
வாழ்க்கை லட்சியம். அதனால் தொடர்ந்து
16 மணி நேரம் உழைக்கும் நாட்களும் உண்டு.
நான் பருகும் விவா எனக்கு வற்றாத தெம்பு
தருகிறது. பார்லி, கோதுமை இவற்றின்
மால்ட் சத்துக்கள், பால், வைட்டமின்கள்
அடங்கிய விவா ஜீரணிக்க எளிதானது.
பாலிலேயும் சரி நீரிலேயும் சரி, கலக்க இலகு.
சூடான பானமாகவோ, குளிர்பானமாகவோ
சுவையுடன் அருந்தலாம். அலுக்காமல்
உழைக்க எனக்கு சளைக்காத தெம்பு—
தருகிறது விவா.''
"தெம்பு தரும் விவா
உனக்கு நன்றி!"
VIVA
BUILDS UP STAMINA
ViVA
மாண்ட் (உலக) தேர்வில் வெள்ளிப்
பதக்கம் வென்றது, ஆம்ஸ்டர்டாம் 1981
JiL ஜகத்ஜீத் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
ASP/JIL: V/1/2012 TM

புதிய
கோல்கேட் ஃப்ளோரிகார்ட் டூத்பேஸ்ட்







ஃப்ளோரிகார்டில் உள்ள எம்

எ.ஃப்.பி.ஃப்ளோரைட் எனாமலுடன் இணைந்து துவாரங்களுக்கும், சிதைவுக்கும் எதிராக உங்கள் பற்களை உறுதிப்படுத்துகிறது.

தமிழ்நாடு, கேரள மாநிலங்களிலும், கர்நாடகத்தில் குறிப்பிட்ட சில மார்க்கெட்டுகளிலும் இப்போது கிடைக்கும்.

CFT.G.3 TM



இரு முகங்கள்!

டையை அவிழ்த்துக் கொண்டே பேசினார் ராமரத்தினம்.

''இன்னிக்கு ஆபீஸ்லே ஹெட் க்ளார்க் சீனுவாசனைக் கிழிக்கக் கொதறிப்பிட்டேன். வெல வெலத்துப் போயிட்டான்... ஆபீஸே ஆடிப் போயிடுத்து....''

மனைவி கற்பகம் சுவாரஸ்யமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

''அக்கவுண்ட்ஸ்லே தப்புப் பண்ணிட்டான். அதனாலே பாலன்ஸ் ஆக லேட்டாயிடுத்து. விளாசிப்பிட்டேன் விளாசி. அதுக்கேத்த மாதிரி இன்னிக்குன்னு ஸீட்லே அரை மணி இல்லே. லஞ்சுக்குப் போனா, ஒரு மணி, இரண்டு மணி நேரம் கழிச்சு வருவான்.... 'சஸ்பெண்ட் பண்ணிடுவேன்' அப்படின்னு சத்தம் போட்டேன்....''

பெருமிதம் பொங்கப் பார்த்தாள் மனைவி.

''உங்க கோபம்தான் பிரசித்தமாச்சே... இன்னிக்கு வகையா மாட்டிண்டானாக்கும்''

''ஆமாமா... இன்டிஸிப்ளின் எங்கே இருந்தாலும் எனக்கு அடி வயத்திலேர்ந்து ஆங்காரம் வந்துடும்... அப்புறம் இன் எபிஷியன்ஸி!... ரெண்டும் எனக்குப் பிடிக்காது....''

வேறு உடை மாற்றிக் கொண்டு 'ஈவ்னிங் வாக்' புறப்பட்டார் ராமரத்னம்.

• • •

இரவு மும்முரமாக ஏதோ எழுதிக்கொண்டிருந்தார். கையில் பால் டம்ளருடன் வந்தாள் கற்பகம்.

''தூக்கத்தைக் கெடுத்துண்டு என்ன எழுத்து இப்ப?''

ராமரத்னம் புன்னகைத்தார்.

''நாளைக்கு அக்கவுண்டன்ட் போஸ்டுக்கு இன்டர்வியூ. பொரிக எழுதறேன். யாரைத் தேர்ந்தெடுக்கலாம்னு. சீனிவாசன் அப்ளிகேஷனை இப்பத்தான் பொரிக பண்ணினேன்.''

''சீனிவாசனையா?''

பாலைப் பருகிவிட்டுச் சிரித்தார் ராமரத்னம்.

''ஆச்சரியமா இருக்குல்லே? மத்தியானம் தான் அவனைத் திட்டி நொறுக்கியிருக்கேன். ராத்திரிலே அவனையே மேல் பதவிக்குச் பொரிசான்னு பாக்கறே, இல்லே?''


ஆழமாய் மனைவியைப் பார்த்தவர் மீண்டும் தொடர்ந்தார்:

''ஒவ்வொரு மானேஜருக்கும் ரெண்டு முகங்கள். ஒரு முகம் அதிகாரியோடது. அடுத்தது நிர்வாகியோடது. அதிகாரியா, தப்பைக் கண்டிக்கிறோம். சின்ன தவறையும் கண்டிக்கிறோம். ஆனா நிர்வாகியா, தகுந்த ஆளுக்குப் பதவி உயர்வு கொடுக்கிறோம். ஒருத்தனோட வாழ்க்கையில்லியா இது? காரியரைக் கெடுக்கக் . . கூடாது. அதிகாரியா மிரட்டணும். நிர்வாகியா மன்னிக்க ஆதரவு கொடுக்கணும்.... அப்ப அவனுக்கும் பொறுப்பு தன்னால வந்துடும்.''

பேசிக் கொண்டிருந்த கணவனைக் கண் களை விரித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள், கற்பகம்.

—ஜெயகாந்தன்





கதை:
சித்திரம்:
விபத்துக்கு ஒரு கணத்துக்குமுன்—
ரெடியா இரு. பிரேக்கை அழுத்தி, கார் நின்னதும் சட்டுனு கதவைத் திறந்து...
கவலைப் படாதீங்க. நான் தயாரா இருக்கேன்.
விபத்து நடந்த போது—
அடுத்த கணம்—
மாலினி! அடி ஒண்ணும் படலியே?
லேசான சிராய்ப்புதான்... இப்போ எங்கே போறது? என்ன செய்யறது?
போலீஸ் கிட்டே ருந்து தப்பிச்சு ஓடி வந்தவன் நான். அதனாலே தான் இப்பவும் ஓடறேம். என் காரியம் முடியறதுக்கு முன்னாலே அவங்க கிட்டே மாட்டிக்கக்கூடாது...
நான் புரிஞ்சுக் கிட்டேன். எல்லாத் தையுமே புரிஞ்சுக் கிட்டேன். அடுத்தாப் பலே என்ன செய்யறோம்? அதைச் சொல்லுங்க...


யாரும் தொடர்ந்து வர மாதிரி தெரியலே. இப்போ நமக்கு இருக்கிற ஒரே தொடர்பு ரோஸிதான். அவளைத் தேடிப் போகிறோம்...
அவளாலே தான் நித்யாவுக்கு இந்த முடிவு ஏற்பட்டுது. அவளை உண்டு-இல்லேன்னு ஆக்கிடறேன்..
நோ. என்னை அறிமுகப் படுத்தறதோட நிறுத்திக்க. வேற எதுவும் பேசாதே. மத்த விஷயங்களை நான் பார்த்துக்கறேன்...
பத்து நிமிடத்துக்குப்பின்—
நீ முதல்லே உள்ளே போ. ஒரு நிமிஷம் கழிச்சு நான் உள்ளே வரேன்.
ரோஸி பியூட்டி பார்லர்
ஹலோ... வாட் ஏ சர்ப்ரைஸ்! மாலினி! வராதவ வந்திருக்கியே!
ரமேஷ் உன்னை மீட் பண்ணணும்னார்..
அப்போது—
போலீஸ் ஜீப் மாதிரி இருக்கே! என்னையா ஃபாலோ பண்றாங்க?
தொடரும்



டாக்டர் சார்,
உங்களுக்கென்ன ?
சோனங் புடிச்சமாதிரி
டல்லா இருக்கீங்களே !
ராத்திரி-
யெல்லாம்
கொசுக்கடி 'SUCK-
O-MANIA'விலே
கஷ்டப்படுறேன் !
ஒரு அறையிலே 2000 கொசுக்கள் இருக்-
கின்றன... அதிலே 1000 பறந்து விடுகின்றன...
அப்புறம் 500 ஓடிவிடுகின்றன, பின்பு 500
பறந்து விடுகின்றன... மீதி என்ன இருக்கும்?
2000
-1000
500-500
ஒரே ஒரு
டார்டாய்ஸ்
கொசு வர்த்திச்
சுருள் இருக்கும்
சார் !
சார்... எனக்கு பீடிகூட வேண்டாம்,
வேண்டியதெல்லாம் ஒரு டார்டாய்ஸ்
கொசுவர்த்தி சுருள்தான் !
புத்தம் புதுக் காலை.
நீ வரும் வேளை...
கொசு மறைந்திடும்
வாழ்வு மகிழ்ந்திடும்...

இதோ ஒரு கிராமம்:

தரித்திரம் இவர்கள் சரித்திரம்

திருநெல்வேலி மாவட்டம் என்றவுடன் அல்வாவும், அதன் இனிமையான சுவை போன்ற தமிழ் பேசுகிற மக்களும்தான் நினைவுக்கு வருவார்கள்.

எங்கு நோக்கினும் செம்மண் கொண்ட தேரிக் காடுகள், நெடிதுயர்ந்த பனை மரங்கள், இவற்றிற்கிடையே அமைந்தது 'செந்தியம்பலம்' என்ற எனது சொந்த ஊர். தூத்துக்குடியிலிருந்து 18 மைல் தொலைவில் உள்ளது இக்கிராமம்.

''செய்யும் தொழிலைச் சீர் தூக்கிப் பார்த்தால் நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை'' என்று ஆன்றோர் கூறுவர். இக்கிராம மக்களின் பூர்வீகமான தொழில் நெசவு. உலகத்தில் உள்ள மற்றத் தொழில்களுக்கு இல்லாத சிறப்பு நெசவுத் தொழிலுக்கு உண்டு. ஒரு மனிதனுடைய உடம்பில் உள்ள எல்லா உறுப்புகளும் வேலை செய்தால்தான் இத்தொழிலைச் சிறப்புறச் செய்ய முடியும்.

சூரியன் தன் பயணத்தைத் தொடங்குவதற்கு முன் தொழிலில் ஈடுபடும் கிராம மக்கள், சூரியன் தன் பயணத்தை முடித்த பின்னும் உழைக்கிறார்கள். இவ்வளவு ஆர்வம் இருந்தும், தலைமுறை தலைமுறையாகத் தரித்திரத்தை அனுபவித்து வருவதே இவர்களுடைய சரித்திரம்.

கிராமத்தில் ஏறத் தாழ 450 வீடுகள். அனைவரும் கிறிஸ்தவர்கள்.

பெரும்பாலோர் படித்தவர்கள். இக்கிராமத்தருகே கல்லூரி இருப்பதால் அநேகர் பட்டப் படிப்பு வரை படித்து, வெளி இடங்களில் வேலை செய்கிறார்கள்.

ஜெர்மன் நாட்டு கிறிஸ்தவ உதவி ஸ்தாபனங்கள் மூலம் வீடில்லாதவர்களுக்கு வீடுகள், கல்லூரி வரை சென்று படிக்கப் பண உதவி, நெசவுத் தொழிலை மேம்படுத்தப் பண உதவி, இவை கிடைக்கின்றன.

கைத்தறித் துணிகள் விற்றால்தான் கிராம மக்கள் வீட்டில் அடுப்பெரியும். ஒரு நாளைக்கு 4 முதல் 5 ரூபாய் வரை வருமானம் கிடைக்கும். குறைவான வருமானத்தில் நிறைவான வாழ்க்கை நடத்த மக்கள் கற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

ஏப்ரல், 25, மே 22 ஆகிய தேதிகளில் இங்குள்ள இரண்டு கிறிஸ்தவக் கோயில்களில் 'அசனம்' என்ற பொதுவிருந்து விழா மிகச் சிறப்பாக நடைபெறும். இந்த இருநாட்களிலும் கிராமமே மகிழ்ச்சிப் பெரு வெள்ளத்தில் மூழ்கிக் காணப்படும். ஏறத்தாழ 8 ஆயிரம் ரூபாய் ஒவ்வொரு மாதா கோயிலிலும் செலவழித்து சுமார் 5,000 பேர்களுக்கு உணவு வழங்குவர். தாங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் தங்களுடைய வருமானத்தில் சிறு பகுதியை இதற்கென்று ஒதுக்கி, ஒவ்வொரு ஆண்டும், இதைச் சிறப்பாகவே நடத்தி வருகிறார்கள் கிராம மக்கள்.

இங்கே படிக்காதவனிடம் கூட அரசியல் பேசி அவனை வென்று விட முடியாது. போலீஸ் ஸ்டேஷன், பொது மருத்துவமனை, கிராமத்துக்குரிய பஞ்சாயத்து ஆபீஸ் இவைகளுக்கு ஏழு மைல் செல்ல வேண்டும். அரசாங்கம் அடிப்படை வசதிகளையாவது இக் கிராமத்துக்கு என்றைக்குச் செய்து தரப் போகிறதோ!


கூட்டுறவு முறையில் நடத்தப்படும் நெசவாளர் சங்கங்கள் நான்கு. இவற்றை நடத்துகின்ற தலைவர்கள், மானேஜர், ஆலோசனை உறுப்பினர் ஆகியோர் தொழிலை நவீனப்படுத்தி, நெசவாளர்களின் வருவாயை அதிகப்படுத்த என்றைக்குக் கற்றுக் கொள்கிறார்களோ அன்றைக்குத்தான் கிராம மக்களின் வாழ்வில் ஒளி வீசும்.

கிராம மக்கள் என்றைக்கு ஒற்றுமையாக இருக்கக் கற்றுக் கொள்கிறார்களோ, அன்றைக்கு மேம்படுவார்கள்.

இந்தியாவெங்கும் பரவியுள்ள வரதட்சணை, நகை, சீர் வரிசைக் கொடுமைகள் இக் கிராம மக்களையும் விட்டபாடில்லை. நம் நாட்டில் தனி மனிதனின் பொருளாதார நிலை சீர்கேடடைவதற்கு இது முக்கிய காரணமல்லவா?

'இந்தியாவின் வளர்ச்சி கிராமங்களின் கையில் இருக்கிறது' என்று சொன்னார் அண்ணல் காந்தியடிகள். அதை நம் தலைவர்கள் சரிவரப் புரிந்து கொள்ளவே இல்லை. புரிந்துகொண்டிருந்தால் கிராமங்களும் அவற்றுடன் சேர்ந்து நம் நாடும் இதற்குள் எவ்வளவோ முன்னேறியிருக்குமே!

- எஸ். ஆல்பர்ட், பிலாய்



11

"கையில் ஒரு லட்சம் வரதட்சிணை கொடுப்பான். மாப்பிள்ளைக்கு புது பியட் கார் பரிசாக் கொடுத்து ஒரு வீடும் வாங்கித் தந்துட ஒப்புக் கொண்டிருக்கான். இதைத் தவிர பொண்ணுக்கு எண்பது சவரனில் நகை — வைர அட்டிகை, கம்மல், பாத்திரம் பண்டம்னு சீர் வரிசை வச்சு ஜமாய்ச்சுடுவான். வக்கீல் — சார்ட்டட் அக்கௌண்டெண்ட் — டாக்டர் இப்படி பாரப்பான்னு சொல்லி வச்சிருந்தான். டாக்டர் கிரிதரனைப் பற்றிப் பேசினேன். அவனுக்குப் பிடிச்சுப் போச்சு. ஒரு தபா அவனே வந்து பார்த்திருக்கான். பையன் லட்சணமா இருக்கான். இவனைப் பிடிச்சுப் போடுன்னு காரைக் குடுத்துக் காலை வேளை என்னைத் தொரத்தி யிருக்கான். இந்த இடம் திகஞ்சிட்டா டாக்டர் நமக்கு உறவுக்காரனுகி விடுவான். சுத்து வட்டாரத்திலே ஒரு டாக்டர் நமக்குச் சொந்தக்காரனுக இருப்பது பலதுக்கும் நல்லதில்லையா? பூதலூர் கிளினிக்கிலே அதிகம் பேச முடியலே. இங்கே காலை வேளை அத்தனை கூட்டமிருக்காது. பேசி முடிக்கலாம்னு புறப்பட்டு வந்திருக்கேன்...."

ஜகதாவின் முகம் இருண்டு போனது. "அப்படியா? டாக்டர் கிரிதரன் என்ன சொன்னுர்?"

"பணம்னு யாருக்குத்தான் கசக்கும்? அதுவும் அழகான படிச்ச பொண்ணைக் கட்டிக்கப் போறுன். மாமனுர் நர்ஸிங் ஹோம் வச்சுக் கொடுக்கத் தாராளமா உதவுவார். அஞ்சு ரூபா பத்து ரூபான்னு நோயாளிகள் கிட்ட வாங்கி இந்தக் கிராமத்து ஜனங்களோட மன்றுடி அவன் என்னிக்கு முன்னுக்கு வரது? என்னிக்கு நல்ல காலத்தைப் பார்க்கிறது? ஏணிப்படி கிடைச்சா மடமடன்னு ஏறும மீன மேஷம் பார்த்துக்கிட்டு இருப்பானு?"

"சரின்னு உன்கிட்ட ஒப்புதல் கொடுத்திட்டாரா டாக்டர்?" — ஏமாற்றத்தை அடக்க முடியாது ஜகதா கேட்டாள்.

"உடனே சரின்னு தலையை ஆட்டிட்டா மாப்பிள்ளைங்கிற கௌரதை குறைஞ்சுடுமில்லையா? யோசிக்கக் கொஞ்சம் அவகாசம் வேணும். பம்பாயில் உள்ள அக்காவுக்கு டிரங்க் கால் போட்டுப் பேசி அவங்க ஒப்புதலையும் கேட்டுக்கிட்டுச் சொல்றேன்னுன்."

"அப்படியா?" — கோபத்துடன் உதட்டைக் கடித்துக் கொண்டாள் ஜகதா.

"இதிலே என்ன அதிசயம்னு சுத்திச் சுத்திப் பார்த்தா இந்தப் பையன் ஒரு வழியிலே நமக்கு ஏற்கனவே தூரத்து உறவுக்காரனுக இருக்கான். நாகசாமி ஜாதகம், பொருத்தம் இதெல்லாம் பத்தி அலட்டிக்கிற ஆசாமி இல்லே. விடியறத்துக்கு முன்னுடி டெலிபோன் பண்ணி நச்சரிச்சுட்டான். குமரேசா இந்த வரனை விடாதே... கொஞ்சம் பேசி முன்னே பின்னே இருந்தாலும் பரவாயில்லே முடிச்சுடு... அடுத்த வாரத்திலேயே என்னை வந்து பார்க்க ஏற்பாடு பண்ணிடு... சுப காரியத்தைத் தள்ளிப் போடக் கூடாது. சட்டுப்புட்டுன்னு முடின்னு பொரிஞ்சு கொட்டிட்டான். அதான் விடியறதுக் குள்ளார புறப்பட்டு ஓடி வந்தேன்." மூச்சு விடாது பேசினுர் குமரேசன்.

உறைந்து போனவள் போல் சிலையாக நின்றுவிட்டாள் சந்தியா. — இந்த அத்தான் சொல்வதெல்லாம் உண்மையா?

"சந்தியா கீரைத் தண்டை மறக்காதேயம்மா... நாகசாமி வீட்டுக்கும் சேர்த்து ஒரு கத்தை பிடுங்கி எடுத்துக் கழுவிக் காகிதத்திலே சுத்தி வை.... அரை மணி நேரத்தில் திரும்பிடுவேன்."

வாயிற் கதவைச் சாத்திவிட்டுத் திரும்பினுள் ஜகதா.

"குமரேசன் கூட ஒரு நல்ல காரியத்தை நமக்குச் செய்ய முன்வந்துட்டானேன்னு அசந்து போனேன். இப்ப அவனது சதித்திட்டம் நல்லாவே புரியுது." கோபமாகப் பேசிவிட்டு வேகமாகச் சமையலறைப்பக்கம் சென்று விட்டாள்.

முகம் வெளுத்து — களை இழந்து இடிந்து போய் நின்ற சந்தியாவைப் பார்க்கத் தாங்க முடியாது போல அவளுள் ஆத்திரமும் துக்கமும் மண்டிக் கொண்டு வந்தன.

மண்டையை இறுக்கி நெஞ்சை வெடிக்கச் செய்து விடும்போலிருந்த உணர்வுகளின் அழுத்தத்தைத் தாங்க முடியாது சந்தியா தோட்டத்துக்குள் விரைந்தாள். பம்பு செட்டை இயங்க விட்டு விட்டுக் கீரைப் பாத்தியருகே சென்றுள். சுவர் ஓரமாகப் பசேலென்று வளர்ந்து நின்ற கீரைத் தண்டுகள் சிலவற்றை வேகமாகப் பிடுங்கி எடுத்தாள்.

வேர்களில் இருந்த மண் போக அலச பம்பு செட் குழாயருகே வந்தாள். அதன் அகலமான வாயினின்று கொட்டிய நீருடன் போட்டியிடுவது போல அவளது கண்களிலிருந்து கண்ணீர் வெள்ளமாகக் கன்னத்தில் வழிந்தோடியது.

'காதல் என்பதைப் பற்றி என்ன நினைக்கிறீங்க டீச்சர்...' சன்னமான ராதிகாவின் குரல் சிரிப்பதைப் போன்றதொரு பிரமையில் நிலைகுலைந்து போனுள்.

'காசுபணம் முன் காதல் ஒரு சிறகொடிந்த பறவையாக அடிபட்டுச் செத்துப் போகும் என்பது உனக்குப் புரிய நாளாகும் ராதிகா' தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

காசு பணம் இல்லாத அவளுக்குக் கிரிதரனைக் காதலிக்க என்ன தகுதி இருக்கு? அடிவ



யிற்றிலிருந்து வெளிப்பட்ட விம்மலை அடக்க முடியாது அவள் ரகசியமாக அழுதாள்.

இறுதிப் பரீட்சை நெருங்கிக் கொண்டு வந்தது. பள்ளிக்கூடம் முடிந்ததும் அதைப் பற்றி ஆசிரியைகளுடன் கலந்து ஆலோசிக்கப் பிரத்தியேகமாகக் கூட்ட மொன்றைத் தலைமை ஆசிரியை மூன்று தினங்கள் தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தாள். பள்ளிக்கூடம் முடிந்த பின் கூட்டத்தில் கலந்து கொண்டு, பின்னர் பஸ் பிடித்து அவள் வீடு வந்து சேருவதற்குள் இருட்டிப் போனது. அலுத்துச் சலித்து வீடு வரும் அவளிடம் அத்தை ஜகதா சொல்லவில்லை. ஒரு வழியாக அந்த ஆலோசனைக் கூட்டம் ஓய்ந்தது. அதனால் அன்று அவள் வழக்கம்போல் மாலை பள்ளிக்கூடம் முடிந்ததும் கிடைத்த முதல் பஸ்ஸில் வீடு வந்து சேர்ந்துவிட்டிருந்தாள். குளியலறைக்குள் புகுந்து அத்தை தயாராக அண்டாவில் நிரப்பி வைத்திருந்த பச்சைத் தண்ணீரில் குளித்துவிட்டு மாற்றுடை அணிந்து கொண்டு ஊஞ்சல் மீது வந்து உட்கார்ந்தாள்.

காப்பி டம்ளரைக் கொண்டு வந்து வைத்த அத்தை மெல்ல விஷயத்தை ஆரம்பித்தாள்.

''மூனு நாளா கிணத்து மோட்டார் வேலை செய்யலை... பக்கத்திலே இருக்கிற செடிகளுக்குப் பத்துக் குடம் தண்ணி இழுத்து நான் கொட்டிக்கிட்டு வரேன். கீரைப்பாத்தி அவரை — இதுக்கெல்லாம் என்னாலே குடத்தைத் தூக்கிக்கிட்டு நடக்க முடியலை.

காப்பியை ஒரே விழுங்காகக் குடித்து டம்ளரை வைத்த சந்தியா பரபரப்புடன் எழுந்தாள். புழக்கடைக் கதவைத் திறந்து கொண்டு பின்னால் விரைந்தாள். மாலை நேரத்து மஞ்சள் வெய்யிலில் அவர்களது தோட்டம் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. அவரை இலைகள் சுருண்டு கொடியில் தொங்கிக் கொண்டிருந்தன. தண்டுக் கீரை வாடித் தொய்ந்து கொண்டிருந்தது. மூன்று நாள் எரித்த வெய்யிலில் தண்ணீரைக் காணாத தோட்டம் வறண்டு பாலைவனமாகி விட்டதைப் போன்ற அதிர்ச்சியில் அவள் சுற்றிலும் கண்களை ஓட்டியபடி வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

'மனிதர்களுக்கு உடம்புக்கு வராப்பலே— கிணற்று நீர் இறைக்கிற மிஷினுக்கு ஏதோ கேடு வந்திருக்கு. அதை உடனுக்குடன் கவனிக்காம விட்டுட்டா தோட்டம் இந்த வெய்யிலில் நாசமாயிடுமே. தொண்டையைத் துக்கம் இறுக்க அத்தையைக் கோபத்துடன் பார்த்தாள்.



''ஒரு வார்த்தை என்கிட்ட முதல் நாளே சொல்லியிருந்தா பூதலூரிலிருந்து ரிப்பேர் பார்க்கிற ஆளே வரச்சொல்லி விருப்பேனே அத்தை... ஏன் பேசாம இருந்திட்டீங்க...'' அழமாட்டாத ஆதங்கத்தில் அதட்டலாகக் கேட்டாள்.

''மாரப்பன் வருவான், அவனே விட்டு யாரையாவது அழைச்சுக்கிட்டு வந்து பழுது பார்க்கலாம்னு இருந்தேன். உனக்குத்தான் பள்ளிக்கூடத்திலே வேலே பொழுதுக்கும் சரியா இருக்கேயம்மா... வேண்டாத போதெல்லாம் ஓடியாந்து நிக்கும் குமரேசன் கூட நமக்குத் தேவைங்கிறப்போ எட்டிப் பார்க்கலே. இனியும் சும்மா இருக்கக் கூடாதுன்னுதான் இப்ப உன் கிட்டச் சொன்னேன்....'' அத்தை விளக்கம் தந்தாள்.

''குமரேசன் அத்தான் கல்யாணப் புரோக்கர் வேலேயிலே மும்முரமா ஈடுபட்டிருக்காரே அவருக்கு நம்மைப் பத்தி அக்கறை என்ன.''— வெறுப்பாகப் பேசிவிட்டுக் கிணற்றருகே சென்றாள்.

''இப்போ நீ என்ன பண்ணப் போறே. நான்தான் முடிஞ்சவரை சில செடிகளுக்குத் தண்ணீர் இறைச்சு ஊத்திட்டேனே...'' அத்தை மறுத்ததை அவள் கேட்கவில்லை.

மடமடவென்று வாளியைக் கிணற்றுக்குள் இறக்கி நீரை இறைத்து இரும்புக் குடம் ஒன்றில் ஊற்றி நிறைத்தாள். அதை நங்கென்று இடுப்பில் தூக்கி வைத்துக்கொண்டு தோட்டத்துக்குள் சற்றுத் தொலைவிலிருந்த செடியை நோக்கி நடந்தாள்.

''கறிவேப்பிலேக் கொத்து போல ஒரே பிள்ளை என்று சொல்வாங்க. ஏன் தெரியுமா. கறிவேப்பிலேச் செடியை வளர்த்து செழிப்பா பராமரிக்கிறது ரொம்பக் கஷ்டம். நம்ம தோட்டத்திலே நாலு மரம் இருக்கு. ஆனா இதைப் போன வருஷம் செத்துப்

அப்பா: ''ஏண்டா? இந்த மாதிரி எல்லாத்திலேயும் 1 மார்க், 2 மார்க் எடுத்திருக்கியே? நீ எங்கே உருப்படப்போறே?''

பையன்: ''கவலேப்படாதீங்க அப்பா! கேரளா யூனிவர்ஸிடிலே சேர்ந்து 'டிகிரி' வாங்கிடுவேன்!''

-சம்பத் குமாரி



போன என் சிநேகிதன் சுந்தரம் தன் வீட்டுத் தோட்டத்திலிருந்து பெயர்த்துக்கொடுத்தான். இலேயைத் தொட்டாப் போதும். வாசனே கமாய்க்கும்...'' அப்பா... இப்பொழுது அவளிடம் சொல்வது போல இருந்தது.

அப்பா எப்பொழுதும் அந்தக் கறிவேப்பிலேச் செடிக்குத் தம் கையாலேயே தண்ணீர் ஊற்றிப் பொறுப்பாகக்கவனிப்பது வழக்கம். அவர் இறக்கும்போது இடுப்பளவு வளர்ந்திருந்தது. இப்போது கப்பும் கிளேயுமாக ஆளுயரம் வளர்ந்திருந்தது. குடத்துடன் அதன் அருகே சென்றவளுக்கு அழமாட்டாத் துக்கம்: மூன்று நாட்கள் தண்ணீரைக் காணுத அந்தச் செடியின் கீழ்க் கிளேகள் காயத் தொடங்கிவிட்டிருந்தன.

''பாத்தீங்களா அத்தை! இதுக்கு இன்னிக்குத் தண்ணி ஊத்தாட்டா இன்னும் ரெண்டு நாளிலே செத்துப் போயிருக்கும்.'' சொல்லிக் கொண்டே குடத்து நீர் முழுவதையும் அதன் வேர் மீது கொட்டினாள்.

''என்னம்மா செய்வது? ஆண்பிள்ளேயின் அனுசரணே இல்லாத குடும்பம் — எந்த ஒரு சின்னக் கஷ்டமும் நமக்குப் பெரிசாத் தெரியுது. உள்ளே வா... இருட்டிட்டு வருது'' அத்தை மெல்லச் சமதானப்படுத்தி அவளே அழைத்துச் சென்றாள்.

மறுநாள் காலே சந்தியா வழக்கத்துக்கு முன்னதாகவே பூதலூருக்குக் கிளம்பினாள்.

கடைத் தெருவில் பஸ் நிலேயத்துக்குச் சற்றுத் தொலேவில் இருந்த பம்பு செட் ரிப்பேர்க் கடை முதலாளி அவர்கள் குடும்பத்துக்குத் தெரிந்தவர்தான். உடனடியாகத் தங்கள் வீட்டுக் கிணற்று மோட்டாரை வந்து கவனித்துப் பழுது பார்த்து உதவ வேண்டும் என்று கேட்டுக் கொண்டுதான் அவள் பள்ளிக்கூடம் போனாள்.


கடையிலிருந்து ஆள் வந்து மோட்டாரைக் கழற்றி எடுத்துக் கொண்டு போனார். ஒன்று இரண்டு என்று நாட்கள் நகர்ந்தன. செடிகள் வாடின. அத்தை ஜகதா வீட்டைப் பூட்டிக் கொண்டு பூதலூருக்கு ஒரு நடை வந்து கடைக்காரனிடம் கெஞ்சிவிட்டுப் போயிருந்தாள். சந்தியா கிடைத்த நேரத்தின்போதெல்லாம் கடைக்காரரிடம் வந்து முறையிட்டுக் கொண்டாள்.

அத்தையும் அவளும் செடிகளுக்குக் குடம் குடமாக நீர்இறைத்துக் கொட்டிச் சோர்ந்து போனார்கள்.

ஒரு வார காலம் இழுத்தடித்துவிட்டுக் கடைசியில் பழுது பார்க்கும் ஆள் மோட்டாரைச் சரிசெய்து கொண்டு வந்து பொருத்தி இயக்கிவிட்டுப் போனார்..

மறுபடியும் தோட்டத்தில் வெட்டப்பட்டிருந்த சிறு கால்வாய்கள் வழியே சலசலவென்று தண்ணீர் ஓடி எல்லாப் பகுதிகளுக்கும் பாய்வதைக் கண்டு சந்தியா பூரித்துப் போனாள். தலேயைச் சாய்த்துக் கொண்டு வாடிக் கிடந்த செடிகள் நிமிர்ந்து காற்றில் இலேசாக ஆடுவதைக் காண உற்சாகமாகத்தான் இருந்தது. ஆனால் பழுது பார்த்த கடைக்காரர் அனுப்பிவைத்த பில்லேப்

மனித குலம் தழைத்திட உழைத்திடும் பண்பாளர்



நமது விவசாயி...

விவசாயி இல்லையெனில் மனித குலம் என்பது உண்டோ. மாபெரும் நகரங்களையும், நவீன உலகிற்கும் அப்பால் விடி வெள்ளியிலிருந்து பொழுது சாயும்வரை அனலாய்க் கொதிக்கும் வேனிற்காலங்களிலும், அடைமழை பொழியும் மழைக் காலங்களிலும் நடுங்கும் குளிர்க் காலங்களிலும் எதனையும் பொருட்படுத்தாது விளை நிலங்களில் உழுது, விதை விதைத்து களை எடுத்து கழனியெல்லாம் பசுமையாக்கி தனது சுற்றம் வாழ, அண்டை அயலார் வாழ, வழி வகுக்கும், அயராது உழைக்கும் பண்பாளர் நமது விவசாயி.

நாட்டின் நலனைப் பேணிக் காத்திடும் இத்தகைய பண்பாளருக்கு உற்ற நண்பராக நல்லுதவி தர நாடிவருவது பாங்க் ஆப் தஞ்சாவூர். இவரது தேவைகளை நிறைவு செய்யவும் பல்வேறு திட்டங்களின் மூலம் விவசாயிகளுக்கு உழவு மேற்கொள்ளும் காலத்திலிருந்து அறுவடை பெறும் வரை தக்க பொருளுதவி செய்ய முன் வருவது-பாங்க் ஆப் தஞ்சாவூர்.

விவசாயின் நண்பராகவும் உற்ற நேரத்தில் உதவும் தோழராக வும் 80 ஆண்டுகளுக்கு மேலாகவே உதவி வரும் பாங்க் ஆப் தஞ்சாவூர் நாட்டிற்கும் நல்லதொரு சேவையினை அளித்து வருகிறது.

பாங்க் ஆப் தஞ்சாவூர் லிமிடெட்

(பதிவு அலுவலகம்: 1087, மிஷன் தெரு,
தஞ்சாவூர்-613 001)
(தமிழ் நாடு)

R சொக்கப்பா
ஜெனரல் மானேஜர்.

B.K. மாதவன்,
சேர்மன்.

VSK : BT : 123


புத்துணர்வுகள்
புத்தாடைகளே புத்துணர்வுகள்
பழமையும் புதுமையும்
கலந்திணைந்து
புத்துணர்வூட்டும்
பருத்திச் சேலைகள்.
சேலையின் விலை ரூ. 65
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

ELEGANT.

பார்த்தபோதுதான் அத்தையும் அவளும் திடுக்கிட்டுப் போய்விட்டனர்.

மோட்டாரைப் பழுது பார்க்கவும் பூத ஊரிலிருந்து இரு முறை நேரில்: தமது ஆள் வந்து பம்பு செட்டைச் சரி செய்ய எடுத்துக் கொண்ட சிரமத்துக்கு என்றும் என்னென்னவோ துண்டு துண்டாகக் கணக்குப் போட்டு மொத்தமாக இருநூறு ரூபாய் என்ற பில்லை தந்துவிட்டிருந்தார் கடைக்காரர்.

''கவலைப்படாதே சந்தியா... தபாலாபீசிலே கட்டணும்னு நான் என் வட்டிப் பணத்தில் கொஞ்சம் மீதம் வச்சிருந்தேன். அதைத் தரேன். கொண்டு போய் நாளைக்குக் கட்டிவிடு. நமக்குக் கடன் தொல்லையே வேண்டாம்.'' ஆதரவாகப்பேசினாள் அத்தை.

இருந்தாலும் அந்தத் தொகை அவர்களது பொருளாதார நிலைக்கு அதிகம். கிணற்று மோட்டாரைச் சரிசெய்ய இத்தனை பணம் பிடித்தால் வீட்டைப் பழுது பார்க்க ரொம்பப் பணம் தேவையாக இருக்குமே! அவள் அத்தனை தொகைக்கு எங்கே போவாள்.

மறுநாள் மாலை பள்ளிக்கூடம் முடிந்ததும் அவள் நேரே அந்தக் கடைக்கு வந்தாள்.

''ஒரு சின்ன ரிப்பேருக்கு இத்தனை பெரிய பில்லை அனுப்பியிருக்கீங்களே நியாயமா?''— ஆதங்கத்துடன் கேட்டாள்.

''என்னம்மா செய்யறது? இப்போ எல்லாமே ரொம்ப விலை ஏறிப்போச்சு. கட்டடச் சாமான்கள், பழுது பார்க்கிற ஆள்களின் கூலின்னு எல்லாம் விஷமா ஏறிக்கிட்டுப் போகுதே... போன வருஷம் என் பெரிய மகளுக்குக் கல்யாணம் செய்தேன். பத்தாயிரம்தான் வரதட்சிணை கொடுத்தேன். மூத்த மருமகனை விடப்படிப்பிலும் சம்பாத்தியத்திலும் கொஞ்சம்குறைவானவன் இப்போ வந்திருக்கிற என் இளைய மருமகன். போன மாசம் சின்னவளுக்குக் கல்யாணம் நடந்தது. இருபது ரூபாய்க்கு ஒரு செல்லாக் காசுகூடக் குறையக் கூடாதுன்னு சம்பந்தியம்மா திட்டவட்டமாச் சொல்லிட்டாங்க. கல்யாண மார்க்கெட்டில் மாப்பிள்ளை விலையும் ஏறிப்போச்சேம்மா... பெண்ணைப் பெத்தவங்களுக்குக் கேட்டதைக் கொடுக்கிறதைத் தவிர வேறே வழி?...'' சிரித்தபடி கடைக்காரர் மேஜை மேல் அவள் வைத்த இரண்டு நூறு ரூபாய் நோட்டுக்களை மேஜை இழுப்பறைக்குள் தள்ளிவிட்டு ஒரு பத்து ரூபாய் தாளையும் பில்லையும் நீட்டினார். ''இதுக்கு மேலே குறைக்க முடியாதம்மா'' என்றார் கண்டிப்பான குரலில்.

அது சமயம் அருகே படபடவென்று மோட்டார் சைக்கிள் சத்தமிட்டபடி வந்து நிற்பதைக் கேட்டுத் திரும்பினாள்.

''மிஸ் சந்தியா... இங்கே என்ன செய்திட்டு இருக்கீங்க?'' —கேட்டபடி வண்டியில் உட்கார்ந்திருந்த ஸ்ரீதரன் புன்னகைத்தான்.

''மனுஷங்களுக்கு உடம்புக்கு வந்தா உங்களைப் பார்க்க ஓடி வராப்பலே எங்க வீட்டுக் கிணற்று மோட்டாருக்கு உடம்புக்கு வந்து விட்டது. அதைச் சரி செய்யற டாக்டர் இவர்... அதுக்காக வந்தேன்.'' காரமாக மிடுக்காகப் பதிலளித்தாள்.

''இந்த வெய்யிலில் தண்ணி இல்லாம செடிகள் வாடிப்போயிருக்குமே....''

''வாடிப்போச்சு என்ன செய்வது? நல்ல வேளையா இவர் சீக்கிரம் ரிப்பேர் செய்து கொடுத்தார்.''


''போன தடவை நான் வந்தப்போ உங்க தோட்டத்தைப் பார்த்து ரொம்பப் பிரமிச்சுட்டேன். என் கண் பட்டுவிட்டதோ என்னவோ!'' வேடிக்கையாகச் சிரித்தபடி கண்களால் அவள் முகத்தை வருடினான்.

'உங்கள் கண் பொல்லாத கண்தான்...' சொல்லத்துடித்தாள் அவள். ஊஹூம். இனி அவரிடம் அதிகம் பேச்சு வைத்துக் கொள்ளக்கூடாது. குமரேசன் அத்தான் கொண்டு வரும் வரனுக்கு வரதட்சணைக்காகத் தலையசைத்து ஒப்புதல் தந்துவிட்டு இந்தப் பக்கம் வேறு ஒரு பெண்ணோடு வேடிக்கையாகப் பேச இவருக்கு ஆசை இருக்கலாம். ஆனால் அவள் அத்தனை துச்சமாக... மட்டமாகப் போய்விடவில்லை. — தனக்குள்ளே எண்ணி வெகுண்டபடி ''நான் வரேன். நேரமாச்சு பஸ் வருது'' என்று கூறிவிட்டு விரைந்தாள்.

வெகு நெடுநேரம் கண்ணில் மிதந்த கனிவுப் பார்வையுடன் ஸ்ரீதரன் அவளது நினைவில் நிழலாடினான்.

சே!... இதென்ன வீண் கனவு!... தன்னைத் தானே அவள் சாடிக்கொண்டாள்.

(தொடரும்)



டீவி. அறிவிப்பாளர்: அடிக்கடி இடையில் ஏற்பட்ட தடங்கலுக்கு வருந்தினா எல்லாரும் கிண்டல் பண்றாங்க சார்...''


மேல் அதிகாரி: ''அதனாலே...?''

டீ.வி. அறிவிப்பாளர்: ''கொஞ்ச நாளைக்கு இடையில் ஏற்படற தடங்கலுக்கு மகிழ்ச்சி தெரிவிக்கலாமே சார்...!''

– கிணத்துக்கடவு ரவி

Only for those who like to be sure





The VIP label. Your guarantee of comfort and confidence. Confidence that your anatomy demands from scientifically designed underwear.

Made from the choicest fabric. With the softness, the smoothness... and the feel that gives the VIP feeling.

Durable underwear from VIP. A complete price range... because every person is important.

VIP®
UNDERWEARS

CASHH-1-203

Distributors for the State of Tamil Nadu

Modern Distributors, 21, Balfour Road, Kilpauk (Near Kellys), Madras-600010



கருத்து: நன்றி - வாஷிங்டன் போஸ்ட்

ஆப்கானிஸ்தானத்தில்
அடிபதித்த தோழா!
உலகனைக்கும் உத்தேசம்
உனக்கும் உண்டா?
எனில்
சிறகைச் சாய்த்து
மகாபலியாரும் எண்ணம்
யாருக்குமில்லை,
இட்ட அடி எடுத்துவிடு!
அடுத்து வைக்கும்
முன் யோசி.

மகாகவி பாரதிக்குச் சமர்ப்பணம் செய்துள்ள காரணத்தினுலோ என்னவோ அவர் கவிதையிலிருந்து சில தலைப்புக்களை எடுத்துக் கொண்டிருக்கிருர். 'சிங்களத் தீவினுக்கோர் பாலம்' என்கிற தலைப்பில் இருக்கிற கவிதையைத்தான் பாருங்களேன்:

மாதம் ஒரு புத்தகம்...

எமது கவனத்துக்கு வந்த பிப்ரவரி மாதத்திய பிரசுரங்களுள் சிறந்த நூல் எனத் தேர்ந்தெடுக்கப்படுவது: புதிய கீதை. நூலாசிரியர்: மது பாலிகா. ஒரு பேனு—பால் பாயிண்ட் ஸெட் பரிசு பெறுகிருர்.

கம்பாண்டர் கவிதை என்று முன்னொரு காலத்தில் சோ கேலி செய்தது நினைவிருக்கலாம்; இப்போது அமைச்சர் ஒருவரும் ஆவேசமாக இந்தப் புதுக் கவிதை பற்றிய சர்ச்சையில் இறங்கியிருக்கிருர். என்ருலும் கூட புது — அல்லது — வசன கவிதை படிப்பதிலே ஒரு சுகம் இருக்கத்தான் செய்கிறது.

மது பாலிகாவின் புதுக் கவிதை தொகுப்பு முழுக்க முழுக்கக் கிண்டலும் கேலியுமாகத் தான் இருக்கிறதே தவிர, ஆழத்தைக் காணும்; பேசுகிறபோது தெரியும் நையாண்டியை அப்படியே கவிதையாக்கி விட்டார் போலும்:

ஐ. நா. கேட்டில்!

தாங்கள்
பட்டாசு வெடித்தாலும்
'லொள்' என்பாய்
''அவர்கள்''
அணுகுண்டால் அடித்தாலும்
அமைதி காப்பாய்!
உலக சமாதானமே!
உன் கழுத்துச் செயினில்
மின்னும் டாலரின்
நிறம் தெரியும்,
நிறுத்து!

அமெரிக்கரை அவ்வளவாகப் பிடிக்காது என்று காட்டிக்கொண்டாலும் அதே சமயம் கம்யூனிஸ்ட் தோழர்களையும் அவசியமான போது கண்டிக்கத் தவறவில்லை;

அக்கரையில் போட்ட
அஸ்திவாரம்
கண்ணீரிலும் செந்நீரிலும்
கரைந்து போச்சு!
இக்கரையில்
அடிக்கல் நாட்டும்போதே
அடிதடி —
காண்ட்ராக்டுக்காக!

இவ்விதம் நம் நாட்டு அவலங்களை அலசுகிற கவிதைகளும் நிறைய உண்டு.

'புதிய கீதை'. நூல் ஆசிரியர் ''மது பாலிகா'' பிரசுரம்: இளங்கோ புத்தக நிலையம், 32, மேலரண் சாலை, திருச்சி-2. விலை: ரூ. 2—90.

பிப்ரவரி மாதத்திய வெளியீடுகள் என நமது கவனத்துக்கு வந்த இதர புத்தகங்கள்:

1. விஞ்ஞான ஒளியில் பைபிளும் குர்ஆனும் —டாக்டர் மாரிஸ் புகைல். பிரசுரம்: சதாகத், கொட்டாரம், வாவாநகரம் போஸ்ட். (வழி) தென்காசி-627.812. தமிழாக்கம்: ''சதாகத்'.. ரூ 10

2. அறிவியல் தமிழ்.—டாக்டர் ஜி. ஆர். தாமோதரன். பிரசுரம்: பி. எஸ். ஜி. அண்டு சன்ஸ் அற நிலையம்: பூளைமேடு. கோவை. விலை: ரூ. 5.

3. Bharathi as a Translator தொகுப்பு: வி.விசுவநாதன். அன்னம் வெளியீடு, சிவகங்கை. விலை:ரூ. 10.

4. கை குலுக்கிக்கொள்ளும் காதல்—ராசி. அழகப்பன், புதுக்கவிதைத் தொகுப்பு. விலை ரூ. 2.கிடைக்குமிடம்: அல்போன்ஸ் ராஜா, 112, எல்டாம்ஸ் ரோடு, சென்னை-18.

-தமயந்தி



இருமலா? இளைப்பா? தும்மலா?

பித்தத்தினால் ஏற்படும் மயக்கம், இருதயம் படபடப்பு நெஞ்சு வலி — பிடரி வலி — உடல் வலி — மலச்சிக்கல் — பசி மந்தம் ருசியின்மை — அடிக்கடி ஜலதோஷம் — ஓயா தும்மல் — நீர் வடிதல் தலைபாரம் — இருமல் — கோழைக்கட்டு — மேல் மூச்சு — இளைப்பு கர்முர்ரென்று இழுப்பு — உடல் பலஹீனம் — உடம்பு தேருமை அசதி — சோர்வு — களைப்பு — ஆஸ்துமாவின் ஆரம்ப நிலை

இவைகளிலிருந்து நிவாரணம் பெற, ஆரோக்கியம் பெற,

உங்களுக்கு பெரிதும் பயனளிக்கிறது

"சிவராஜ்" நெல்லிக்காய் லேகியம்

இரத்தவிருத்திற்கும், இளைத்த உடம்பு தேறவும் சக்தியளிக்கும் டானிக்

பவளசத்து, சிலாசத்து, சிருங்கி சத்து சேர்ந்தது	வெள்ளி ரேக் — பவளசத்து — பஸ்பம் கலந்தது
250 கிராம் புட்டி ரூ. 30-00	**250 கிராம் புட்டி ரூ. 40-00**

போஸ்டேஜ் இலவசம். V.P.P.யில் பெற எழுதுங்கள்

தயாரிப்பு: சிவராஜ் சித்த வைத்தியசாலை

(சென்ட்ரல் டாக்கீஸ் வடபுறமுள்ள ஏரியின் முன்பக்கம்)

சேலம்-636007



யுவராஜ்

மிக்ஸர் மற்றும் கிரைண்டர்

எவர்சில்வர் ஜாடி; எவர்சில்வர் கிரைண்டர்

முதல் முறை

எவர்சில்வர் ஜாடி; எவர்சில்வர் கிரைண்டர்

எவர்சில்வர் அறவைத் தகடுகள்

- முழுமையான சமையலறை இயந்திரம்
- இரட்டை வேகம்
- ஒரு வருஷம் உத்தரவாதம்
- அழகான ரப்பர் சாதன பாக்கிங்

உண்மையான விலை ரூ. 550.

ஆனால் இப்போது மட்டும் ரூ 280 (எல்லாச் செலவுகளும் உட்பட)



எங்கள் கம்பெனிக்கு ஒரு கடிதம் எழுதி உங்கள் இல்லத்திலேயே பெற்றுக் கொள்ளலாம். எங்களுக்கு ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

ஒவ்வொரு இல்லத்துக்கும் தேவை

யுவராஜ் மிக்ஸர் — கிரைண்டர்

KUMAR AGENCIES (KAT)

16/62 Subhash Nagar,
NEW DELHI-110027

திரைஞானி

விசு எப்படி டைரக்ட் செய்கிறார்?

பாரதிராஜா, பாக்கியராஜ், மகேந்திரன், ராபர்ட் ராஜசேகர் இப்படிப் பரபரப்பாகப் பேசப்பட்ட டைரக்டர்கள் வரிசையில் இன்றைய 'ஹாட் கேக்' விசு.

ஆனானப்பட்ட பாலசந்தரே அவரை நம்பி ஒரு படத்தை ஒப்படைத்த பிறகு சினிமா உலகத்தினர் பலரது கவனம் விசு பக்கம் திரும்பியது. . பலர் போட்டி போட்டுக் கொண்டு இவரை ஒப்பந்தம் செய்வதாகப் பரவலாகப் பேச்சு.

விசு பல்லாவரத்திலும் கோவூரிலும் 'மணல் கயிறு' படப்பிடிப்பை மாறி மாறி நடத்திக் கொண்டிருக்கிறார்.

மீனம்பாக்கம் ரயில் நிலையத்தை அடுத்த அரை மைல் தூரத்தில் ஒரு சாதாரண வீடு. வீட்டுக்கு வெளியே ஒரே கூட்டம்.

நான் உள்ளே நுழைந்தபோது இரண்டு பேருக்குச் சண்டை மூட்டிக் கொண்டிருந்தார். அதாவது ஒரு சண்டைக் காட்சியைப் படமாக்கிக் கொண்டிருந்தார்.

கிணற்றடியில் பத்துப் பாத்திரம் தேய்த்துக்கொண்டிருந்த சாந்தி கிருஷ்ணாவின் குடுமியைப் பிடித்து அசைத்தவாறே ''சனியனே, தரித்திரமே, பீடையே' என்று திட்டிக்கொண்டிருந்தார் மனோரமா. (ஒத்திகைதான். டேக் தனி.!)

முதலில் சாந்தி கிருஷ்ணாவுக்குப் பத்துப் பாத்திரம் தேய்க்கவே தெரியவில்லை. மனோரமா உட்கார்ந்து பாத்திரத்தைக் கையில் எடுத்து 'இப்படித் தேய்' என்று சொல்லிக் கொடுத்த பிறகு அவர் வேகமாகத் தேய்த்தார். சண்டை ஆரம்பமாயிற்று.

'டேக்' என்றார் விசு.

மனோரமா சாந்தி கிருஷ்ணாவின் தலைமுடியைப் பற்றி அசைத்தார். மூக்கைச் சிந்தி அவர்மீது பூசினார். பாத்திரங்களையெல்லாம் எட்டி உதைத்தார்.

நான்கைந்து முறை கூந்தலைப் பதம் பார்த்த பிறகு டேக் 'ஓகே' ஆயிற்று.





விசு தமக்குத் தோன்றிய மாதிரி யெல்லாம் காட்சியை எடுக்கவில்லை. மற்றவர்கள் சொல்லும் ஆலோசனைகளைக் காது கொடுத்துக் கேட்கிறார். ஒளிப்பதிவாளர் பாலகிருஷ்ணனைக் கலந்து பேசுகிறார். அதே சமயம் தாம் எடுக்கப் போகும் காட்சி சிறப்பாக அமைய வேண்டும் என்பதற்காகத் தம்முடைய மூளையையும் கசக்கிக் கொள்கிறார்.

படப்பிடிப்பு முடிந்து என்னிடம் பேசிக் கொண்டிருந்தபோது யதார்த்தமான உண்மைகளைச் சொன்னார்:

''எனக்கு இது முதல் படம். டெக்னிகல் விவகாரங்களைப் புரிந்துகொள்ளக் கொஞ்ச நாள் ஆகும். சினிமாவைப் பற்றி லெஃப்ட் ரைட் கூடத் தெரியாமல் இருந்தேன். பாலகிருஷ்ணன்போன்ற சீனியர்களின் ஆலோசனைகளைப் பெறுவதில் தவறு இல்லை என்றே நினைக்கிறேன். என் குழுவைச் சேர்ந்த மற்றவர்களுடைய ஆலோசனைகளையும் கேட்கிறேன். பாலசந்தர் எனக்கு இப்படத்தில் முழு சுதந்திரம் கொடுத்துள்ளார். எந்தக் கதாபாத்திரத்துக்கு யாரைப் போட்டிருக்கிறீர்கள் என்றுகூடக்கேட்கவில்லை. அவருடைய பெருந்தன்மை எனக்கு உற்சாகமளித்திருக்கிறது. நாடகச் சாயலே இல்லாமல் இப்படத்தை விறுவிறுப்பாகக் கொண்டு செல்ல முயன்றிருக்கிறேன். படம் வந்ததும் பாருங்கள்.''

பாலசந்தர் மாதிரியே படப்பிடிப்பு ஆரம்பமானால் டென்ஷனுடன் காணப்படுகிறார். காட்சியைத் தவிர வேறு சிந்தனையே இருப்பதில்லை. சிகரெட் ஓயாமல் புகைக்கிறார். காட்சி முடிந்ததும் தம்மை ரிலேக்ஸ் செய்து கொண்டு விடுகிறார். கேட்டால் 'தட் ஈஸ் மை நேச்சர்' என்கிறார்.

மூன்று மணி நேரம் அங்கே தங்கி அவரது படப் பிடிப்பைப் பார்த்தேன். படப்பிடிப்பு மாதிரியே இல்லை. குடும்பத்தில் ஒருவருக்கொருவர் ஒத்தாசை செய்து கொண்டு ஒரு காரியத்தில் ஈடுபட்ட மாதிரியே இருந்தது.



இராகம் தேடும் பல்லவி

காதலர்களைப் பிரித்து அவர்களது துயரத்தில் காவியம் படைப்பதில் டி. ராஜேந்தருக்கு ஆனந்தமோ ஆனந்தம்!

இந்தப் படத்திலும் அந்த 'ஆர்வம்' தொடர்கிறது.

ஆரம்பம் அவருடைய சொந்தக் கதை. போகப் போக அவருடைய பேனாவின் கண்ணீர்க் கதை.

ஒரு பிரபல இயக்குனர் ஆக வேண்டும் என்கிற லட்சியம் கொண்டவனின் காதல் தோல்வியடைகிறது. லட்சியம் நிறைவேறும் போது பழைய காதலியே அவன் படத்தில் கதாநாயகியாக நடிக்கக் கொண்டு வந்து நிறுத்தப்படுகிறாள். காமவெறி பிடித்த தயாரிப்பாளரின் இச்சைக்கு அவள் பலியாகி விட வேண்டிய சூழ்நிலை எழும்போது அவன் தன் லட்சியத்தைத் தியாகம் செய்து ...

கதையின் ஓட்டத்துக்கு ஜெயமாலினியும் ஜோதிலட்சுமியும் மாயாவும் ஸ்மிதாவும் வேண்டிய அளவு இடையூறு செய்திருக்கிறார்கள்.

காமிராவைச் செட்டில் மாட்டப்பட்டுள்ள படங்களோடு நெருங்கவிட்டு, கருங்கச் சொல்லி விளங்கச் செய்யும் பக்குவம் தெரிந்திருக்கிறது டைரக்டருக்கு.

ராகமாக வருகிறார் சங்கர். நடிப்பில் முகாரி. நடிப்பில் கலகலப்புக் காட்டாத நாயகன் அரை நாயகன்.

ராஜீவின் வில்லத்தனம் 'இரயிலில்' வந்து இறங்கியதுதான் என்றாலும் ரசிக்க வைக்கிறது.

அசல் நோயாளியை முகத்தாலும் குரலாலும் அப்படியே பிரதிபலித்துக் காட்டும் ராம்ஜிக்கு ஒரு டானிக் கொடுத்துப் பார்ப்போம்: 'சபாஷ்!'

புது முகம் அனுபமாவுக்கு இன்னமும் கொஞ்சம் 'அனுபவமா'க வேண்டும்.

காந்திமதி என்ன இந்தக் காலத்து அங்கமுத்தா?

கல்லாப்பெட்டி, மூர்த்தி, ஹாஜா ஷெரிப் மூவரும் விரசமாகச் சிரிக்க வைக்கிறார்கள்.

'ஆகா' என்று பாராட்டவும் முடியவில்லை. 'சே' என்று ஒதுக்கவும் முடியவில்லை. இரண்டும் கெட்டான்!

வடை மாலே

சண்டையும் கவர்ச்சியும் நிறைந்த படங்களைப் பார்த்துப் பூசல் கட்டிக்கொண்ட கண்களுக்கு 'லோஷன்' போட்டு அலம்பிக் கொண்ட மாதிரி ஒரு படம் — வடை மாலே.

கண்ணன் கீதோபதேசம் செய்த பாணியில் படம் முழுக்க வியாச ராயர் 'ஜாதியோபதேசம்' செய்துள்ளார். குலம், கோத்திரம், ஏன், பெயர்கூடத் தெரியாத பிச்சைக்கார அனுதைப் பெண்ணைத் தமது மருமகளாக ஏற்றுக்கொள்ள அவர் முன் வந்தபொழுது அந்த அக்கிரகாரமே எதிர்க்கிறது அவரை.

அவர்களைச் சொல்லால் வாதாடி வெல்லும் கட்டம் அற்புதம்.

''நாம எல்லோரும் அந்த ஹரியினுலே படைக்கப்பட்ட ஜனங்கள். அந்தக் கண்ணோட்டத்தோடு பார்த்தால் நாம அத்தனே பேரும் ஹரிஜனங்கள்.''

''நாம் தெய்வமா வணங்கற ராமரும் கிருஷ்ணரும் பிராமணர்கள் இல்லேன்னு உங்களுக்குத் தெரியாதா? ராமன் க்ஷத்திரியன். கிருஷ்ணன் யாதவன். நான் எங்கும் பிறப்பேன்: எந்தக் குடியிலும் பிறப்பேன் அப்படீங்கறதை இந்த லோகத்துக்காக பகவான் இந்த ரெண்டு அவதாரத்தையும் எடுத்தான்.

''துளசி காட்டிலே விளையுது. அது பகவானுக்கு மாலையாச் சேருது. அப்படி நெனேச்சுண்டு இவளுக்குத் துளசின்னு பேரு வெச்சி நான் மருமகளா ஏத்துக்கறேன்''

வாலி, பகவத்கீதையிலும் உபநிஷத்துக்களிலும் தமது பேனவைத் தோய்த்து எழுதியிருக்கும் இப்படிப்பட்ட வரிகளுக்கு வடிவம் கொடுக்கிருர் பூர்ணம் விசுவநாதன். நடிப்புக்கு பூர்வ ஜென்ம பலன் என்று ஒன்று இருந்தால் அது இந்தத் தமிழக சோமயா ஜுலுக்கு நிச்சயம் இப்படத்தின் மூலம் கிடைத்திருக்கிறது என்றே சொல்லலாம்.

பூர்ணம்தான் வடை என்ருல் அதைச் சுடப் பயன்படுத்தும் சட்டுவம் ஸ்ரீகாந்த். இவருடைய ஆஞ்சநேய பக்தி கதைக்கு அதிகம் ஒட்டாமல் போகிறது. என்ருலும் நிமிர்ந்து நிற்கிருர் நடிப்பில்.

வாணவி: சரோஜா. ஊரார் ஏசும் சூட்டைத் தாங்கிக் கொண்டு தனக்குள் எண்ணெய் மாதிரி கொதித்து வெதும்பிச் சாகும் கட்டத்தில் ஊர்வசி சாரதாவை நினைவுபடுத்துகிருர்.

புதுமுகம் செல்வராஜ் தொட்டுக்கொள்ள உதவும் சட்னியாகப் பயன்பட்டுள்ளார் கதைக்கு.

சோவும் சச்சுவும் வடைக்கு உப்பு காரம் சேர்த்த மாதிரி நகைச்சுவையைக் கூட்டுகின்றனர். சோ சொல்லும் ஏ. பி. சி. டி. கதை ஏ ஒன்.

படத்தைப் பற்றி வாலியின் நடையில் சொல்ல வேண்டுமானுல்..; பலமுறை

பார்ப்...பேன்

ரசிப்...பேன்

வியப்...பேன்



சினிமா

● ஏ.வி.எம். ஸ்டுடியோவில் கட்டுக் குடுமியுடன், கழுத்தில் தாயத்து, கையில் காப்பு, முகத்தில் மீசை இத்யாதி மேக்கப்பில் அசல் பட்டிக்காட்டானாக நின்று கொண்டிருந்தார் கமலஹாசன்.

ஏ.வி.எம்.மின் 'சகல கலாவல்லவன்' படத்தின் முதல் நாள் படப்பிடிப்பு அன்று.

கமல் நடிக்கும் படத்தின் பூஜைக்கு ரஜினி வந்திருந்தார் என்றால் நியூஸ்தானே! நடுவில் கொஞ்ச காலம் இவர்கள் இருவருக்கும் மோதல் இருந்தது உண்மைதான். ஆனால் 'தண்ணீர் தண்ணீர்' பாராட்டு விழா நிகழ்ச்சியின்போது தற்செயலாகக் கமலும் ரஜினியும் அருகருகே உட்கார நேர 'ஹலோ'வுக்குப் பிறகு கொஞ்ச நேரம் பேசாமல் இருந்துவிட்டுப் பிறகு பேசத் தொடங்கியதிலிருந்து 'ராசி' கூடத் தொடங்கியிருக்கிறது.மகிழ்ச்சி.

● ஏ.வி.எம். சரவணன் தூரத்தில் அமர்ந்திருந்த சிறுமியைச் சுட்டிக் காட்டி ''அந்தப் பொண்ணு யார் தெரிகிறதா? புகழ் பெற்ற படத்தில் அவளைப் பார்த்திருப்பீர்கள். பையனாக நடித்தாள். இப்பொழுது வளர்ந்து உயரமாகி விட்டாள்'' என்று எனக்கே புதிர் போட்டார். பிறகு அவரே அதை விடுவித்தார்.

''சங்கராபரணம்'' படத்தில் சிறுவனாக நடித்தாளே அந்தத் துளசி'' என்றார். அடேயப்பா! எப்படி வளர்ந்து விட்டாள்!

● விஜயா கார்டனில் 'கலாட்டா காதல்' பூஜையில் வெள்ளை வெளேர் என்று உடை அணிந்து அனைவரையும் வரவேற்றுக் கொண்டிருந்தார் டைரக்டர் வெள்ளைச்சாமி.

அதில் நடிக்கும் ராதா, விஜயசாந்தி, சுரேஷ் மூவரும் வந்த பிறகுகூட பூஜை ஆரம்பமாகவில்லை.

காரணம் விசாரித்ததில் பூஜை செய்யும் சாஸ்திரிக்காகக் காத்துக்கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். ராசியான சாஸ்திரியாம் அவர். ரொம்பப் பிஸி. வியர்க்க விறுவிறுக்க ஸ்கூட்டரில் வந்து இறங்கினார். அப்புறம் பூஜை நடந்தது.

சினிமா உலக சாஸ்திரி நட்சத்திரங்களை விட பிஸி!

● வாஹினி ஸ்டுடியோவில் ஒரு கொட்டகையில் கோர்ட் சீன் நடந்து கொண்டிருந்தது.—பாலாஜியின் 'தீர்ப்பு' படத்துக்காக.

ஒரு கூண்டில் சிவாஜி கணேசன் நின்றிருந்தார். மற்றொரு கூண்டில் ஜெய்சங்கர்.

''தெய்வத்தைக் கூண்டிலே ஏத்திட்டீங்களே...'' என்று வசனம் பேசினார் ஜெய்.

ஜட்ஜ் வீரராகவன் ஆரவாரம் இல்லாமல் நடந்து வந்து கொண்டிருந்தார். நிஜ நீதிபதிகளுக்கு உள்ள மரியாதைகள் சினிமா நீதிபதிகளுக்கு இல்லைதான். கறுப்புக் கோட்டும் நாலு வரி தீர்ப்புந்தான் அவர்கள் கண்ட பலன்.

''வெய்யில் ஆரம்பமாகி விட்டது. கறுப்புக் கோட்டு அணிந்தால் புழுக்கம் அதிகமாகிறது'' என்றார் வீரராகவன்.


● சிவாஜிகணேசனை அணுகி டெல்லி பாராளுமன்றத்துக்குப் போய் வந்த அனுபவங்களைக் கேட்டேன்.

''நான் இதுக்கு முன்னே அந்தக் கட்டிடத்துக்குள்ளே போயிருக்கேன். ஆனால் அந்தச் சபையில் ஒருத்தனா உள்ளே நுழையறப்போ கொஞ்சம் பிரமிப்பாத்தான் இருந்தது.இந்தியாவிலே இருக்கிற அத்தனை பேருடைய பிரதிநிதிகளும் இருக்கிற இடம் பாருங்க. என்னை எல்லோரும் தமிழிலேயே பேசச் சொல்லிட்டாங்க. தமிழிலேதான் பேசப் போறேன். மத்த மெம்பர்கள் எல்லோரும் என்னை நல்லபடியாகவே ரிசீவ் செய்தாங்க'' என்றார்.

காமிராவைச் சுற்றி







கவியரசகண்ணதாசனின் சிற்றப்பாமகன் ராம. முத்தையா. தற்போது பஞ்சு அருணாசலத்திடம் இருக்கிறார். இவரும், இவரது சகோதரர் ராம. கண்ணப்பனும்தான் அமரர் கண்ணதாசனின் குடும்ப நிர்வாகத்தைக் கவனித்து வந்தனராம். ''1968ம் வருடம், கண்ணதாசன் இந்தோ - சோவியத் கல்சுரல் சொஸைட்டியின் சார்பில் தமிழகத்தில் இருந்து சென்ற குழுவில் இடம் பெற்றார். அவருடன் திருவாளர்கள் தெ. பொ. மீனாட்சி சுந்தரம், தற்போதைய எம். எல். ஏ. மன்னை அம்பிகாபதி, எம். எஸ். விசுவநாதன் ஆகியோரும் சென்றிருந்தனர். அந்தச் சமயத்தில் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். என்னை அவருடைய வீட்டுப் பிள்ளையாகக் கருதி அவர் எழுதிய கடிதத்தை இன்னும் நான் பத்திரமாய்ப் பாதுகாத்து வருகிறேன்.'' என்று சொல்லி, கவியரசின் கடிதத்தைத் தந்தார் திரு ராம. முத்தையா.

கடிதத்தில் திரு கண்ணதாசன் எழுதியுள்ளவற்றுக்கு அவரளித்த விளக்கம்: 'கண்ணம்மா என்பது கண்ணதாசன் ரஷ்யா சென்றிருக்கையில் நோய்வாய்ப்பட்டிருந்த அவரது சகோதரி. வசந்தன் வீட்டிலே ஊழியர். ராமனுஜன் ஆபீஸ் நிர்வாகத்தைக் கவனித்துக்கொண்டிருந்தவர். பொன்னம்மாள் கவிஞரின் மூத்த மனைவி. மாப்பிள்ளை எனக் குறிப்பிட்டிருப்பது கவிஞருடைய சகோதரியின் கணவர் திரு அண்ணாமலை.

பேட்டி : எஸ். சந்திரமௌலி

5–10–68

அன்புள்ள முத்துவுக்கு,

நலம்.

நான் புறப்படுகிறேன்.

குடும்பத்தில் எல்லோரையும் நீதான் கவனித்துக் கொள்ள வேண்டும்.

உன்னையும் என் வீட்டுப் பிள்ளையாகத் தான் நான் பாவித்து வருகிறேன்.

எனக்கு நிம்மதி அளிக்கும் வண்ணம் எல்லோரையும் நீ கவனிப்பாய் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

யாரும் கஷ்டப்படக்கூடாது.

கண்ணம்மாச்சியை டாக்டரிடம் அடிக்கடி அழைத்துக் காட்டு.

பிள்ளைகள் சண்டை போடாமல் பார்த்துக் கொள்.

எனக்கு வீட்டு விலாசத்துக்கு வரும் கடிதங்களைப் பத்திரமாக – வசந்தனிடம் சொல்லி – ஒன்று விடாமல் வாங்கி ஆபீஸில் ராமனுஜனிடம் கொடு.

முக்கியமான பில்களும் கடிதங்களும்வீட்டு விலாசத்துக்குத்தான் வரும்.

25 நாள் பிரிந்திருப்பதில் எனக்கு நிம்மதி இல்லை.

ஏன்தான் இப்படிப் பாசத்தில் ஆண்டவன் என்னை உருவாக்கினானோ எனக்குத் தெரியவில்லை.

பொன்னம்மாள் குடும்பத்தைப் பகையாக நினைக்காதே.

அவர்களுக்கு வேண்டியதையும் நீதான் செய்ய வேண்டும்.

நம்மை அவமானப்படுத்தும் எதிரிகள் அதிகம்.

ஆகவே எதிலும் யாரிடத்தும் எச்சரிக்கையாக இரு.

என் விலாசம் தந்திருக்கிறேன். எழுது.

நம்பி முத்துவுக்கு

இத்துடன் மாப்பிள்ளைக்கு ஒரு கடிதம் வைத்திருக்கிறேன். அதில் வெறும் பேப்பர் ஒன்பது கையெழுத்திட்டிருக்கிறது. பத்திரம்! பத்திரம்! நீயே கொண்டுபோய் மாப்பிள்ளை வீட்டில் கொடு.

இத்துடன் இருக்கும் பணத்தை எல்லாப் பிள்ளைகளுக்கும் பிரித்துக் கொடுக்கவும்.

அஷ்காபாத் விலாசத்துக்கு வனவாசம் இரண்டு காப்பி அனுப்பவும்.

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600 032. (Phone: 431543)
Assistant Editor: P.S. Mani Layout Artist: Nambi Editor: K. Rajendran



The fragrance of choice coconuts in every drop.
Yendelux
coconut oil
என்டிலக்ஸ்
தேங்காய் எண்ணை
15, 4 கிலோ டின்களிலும் 1 கிலோ 500, 200 கிராம் பாலிதின் பாட்டில்களிலும் கிடைக்கிறது.
மு: மு. நாகலிங்க நாடார் சன்ஸ்.
உரிமையாளர்கள் :
ஸ்ரீ நாகலிங்க விலாஸ் ஆயில் மில்ஸ்
கொல்லம்—கேரளா
போன் : ஆபிஸ்: 2244, 4484, மில்ஸ்: 2266, 4611
Trade Enquiries Solicited from wholesale dealers only

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka